
கல்கி
KALKI
10-6-1962
30
காசு




எந்நேரத்திலும்...எவ்விடத்திலும்...எச்சந்தர்ப்பத்திலும்
உங்கள் எழில் பேப்படக் காண்கிறீர்கள்
கட்டாவ்
வாயில்களில்

வாட்டர்பரீஸ்

சிவப்பு லேபில்

காம்பவுண்ட்

இருமல்,
ஜலதோஷங்களுக்கானது



நான்கு நல்ல காரணங்கள் இதோ

1 இருமலையும், ஜலதோஷத்தையும், இமைப் பொழுதில், கச்சிதமாகக் கரைக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**2** கபம் அறுத்து, நுரையீரலைச் சுத்தப்படுத்தும் கிரியோஸோட், க்வயகால் அடங்கியது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்.	**3** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் வெறும் நோய் நிவாரணி மட்டுமல்ல; நம்பிக்கைக்குகந்த டானிக்குமாகும். நோயை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு உதவுகிறது.	**4** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் பசியைத் தூண்டுகிறது. ஜீரண சக்தியை வளர்க்கிறது. ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தாதுப் பொருள் நஷ்டத்திற்கு ஈடுசெய்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சிவப்பு லேபில்

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

சுபகிருது, வைகாசி 28

கல்கி

ஜூன். 10, 1962

பொருளடக்கம்

""கல்கி""யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



க்யூபா தீவினர் புகையிலையை வாசனைச் சரக்காக உபயோகித்ததாக, 1492—ல் கொலம்பஸின் மாலுமிப் படையினர் கண்டறிந்தனராம். பொடி போடும் வழக்கம் பூர்வீகக் குடிகளிடம் இருந்ததைத் தமது இரண்டாவது கடற் பயணத்தின்போது கண்டறிந்தார் கொலம்பஸ். தென்னமெரிக்கக் கடலோரப் பிரதேசங்களிலே புகையிலை போடும் பழக்கம் இருந்ததை முதன் முதலாக இஸ்பானியர்கள் 1502—ல் கண்டதுண்டு.

புகையிலையின் வரலாறு...1



பனமா


ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.701 TM

Graces' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 45

தென்னவர்களின் வெற்றி

'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழி நிரூபணமாகி விட்டது.

'நீண்டகாலமாக ஆங்கிலம் பெற்று வந்துள்ள அந்தஸ்தை அது இழக்காமல் எப்போதும்போலவே இருக்கும்; ஹிந்தி சிம்மாசனம் ஏறாது' என ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் வர்தாவில் வெளியிட்டுள்ள செய்தி ஹிந்தி மொழி பேசாதவர்களுக் கெல்லாம் பெரு மகிழ்ச்சியும் நிம்மதியும் அளித்திருக்கிறது. ஹிந்தி வழங்காத பிரதேசங்களில் பெரும்பாலோர் ஹிந்தி மொழியில் தேர்ச்சி பெறும் வரை ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்று விரைவிலேயே சட்டம் கொண்டு வர விருக்கிறது மத்திய அரசாங்கம்.

நம்முடைய தமிழக அரசாங்கத்துக்கு இந்தப் பெருமையில் இம்மியும் பங்கு தர இயலாதிருப்பது குறித்து வருந்துகிறோம். பயங்கொள்ளித்தனமாக மத்திய சர்க்காரின் ஹிந்தித் திணிப்பு நடவடிக்கைகளுக்கு மெதுவாகத் தாளம் போட்டே வந்திருக்கிறது அது. இருந்தபோதிலும் இப்போது மத்திய சர்க்கார் மேற்சொன்னபடி ஒரு சட்டம் செய்ய விருக்கிறது என்றால் அது தனியொரு மனிதரான நம் தலைவர் ராஜாஜியுடைய தர்ம பலத்தின் வெற்றி என்றுதான் கொள்ள வேண்டும். ஹிந்தி மொழி பேசாத எல்லாத் தென்னிந்திய மக்களுக்குமாக அவர் எதிர்ப்புகளைக் கண்டு தயங்காமல் போராடி இந்த வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

தேசபக்தி என்ற பெயரில், உணர்ச்சி வசப்பட்டுச் செய்யும் பல காரியங்கள் உண்மையில் நாட்டின் ஐக்கியத்தையே குலைக்கக்கூடியவை ஆகும். பாரத நாடானது ஒன்றோடொன்று இசைவு இல்லாத தனித்தனி ராஜ்யங்களாகச் சிதறிப் போகாமல் இருக்க வேண்டுமானால் முன்போலவே பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், கச்சேரிகளிலும், நியாயஸ்தலங்களிலும் ஆங்கிலம்தான் நடைமுறையில் இருக்க வேண்டும். இந்த உண்மையை உணர்வது மிகவும் அவசியமாகும்.

ஹிந்தி மொழி பேசாத மக்களில் பெரும்பான்மையினர் ஹிந்தியை விரும்பும் வரையில் ஆங்கிலத்தை நீடிப்பதுதான் நியாயமானதும் தேச ஐக்கியத்துக்கு உகந்ததும் ஆகும். பிரதமர் அவர்கள் இவ்வாறே வாக்குறுதி அளித்திருக்கிறார். ஆனால் தற்போது ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் 'நாட்டில் பெரும்பான்மை மக்கள் ஹிந்தியில் தேர்ச்சி பெறும் வரையில் ஆங்கிலம் இருக்கும்' என்று பொதுப்படையாகத்தான் சொல்லி யிருக்கிறார். இதனால் நாட்டில் 51 சதவிகித மக்கள் ஹிந்தி ஞானம் பெற்றுவிட்டாலும் போதும்; அவர்கள் பட்சபாதமான வசதிகள் பெற்று மிகுதியுள்ள 49 சதவிகிதத்தினரை ஒடுக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த ஆபத்து நீங்கவேண்டுமானால் முன்பு நேருஜி அளித்த வாக்குறுதியை, அவர் மொழிந்த அதே வாசகத்தில் சட்டமாக்க வேண்டும். அதாவது ஆட்சிமொழி விஷயம் ஹிந்தி பேசாதவர்களின் பெரும்பான்மையினருடைய விருப்பத்தை யொட்டித்தான் நிர்ணயமாகவேண்டுமே ஒழிய, நாட்டின் மொத்த ஜனத்தொகையின் பெரும்பான்மையினரின் விருப்பத்தின் மீது உருவாகக் கூடாது. இதனை மத்திய அரசாங்கத்துக்கு வற்புறுத்தி உணர்த்த வேண்டியது நியாயமறிந்த யாவரின் கடமையுமாகும். முக்கியமாக, தென்னாட்டு ராஜ்ய சர்க்கார்களின் கடமையாகும்.

இந்தச் சமயத்தில் தமிழக சர்க்காருக்கு வேறு ஒரு கடமை பற்றியும் நினைவூட்ட விரும்புகிறோம். கைத்தறி நெசவாளர்களை நமது ராஜ்ய சர்க்கார் நிரந்தரமான

முறையில் காப்பாற்ற முன்வர வேண்டும். கறை போட்ட வேஷ்டிகளையும் புடவைகளையும் மில்கள் தயாரிக்கக் கூடாது என்கிற முடிவைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டால்தான் நம் கைத்தறிக்காரர்கள் பிழைப்பார்கள். மற்ற மருந்துகளினால் பயனில்லை. அவை கூட்டுறவு சங்கங்களின் ஜமீன்தாரர்களுக்குத்தான் பயன்படும். ராஜாஜியின் பிரேரணையின் பேரில் சென்னை சட்ட சபையில் ஏகோபித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில்தான் கைத்தறித் துணிக்கு விமோசனம் இருக்கிறது. அந்தத் தீர்மானம் இப்போது தூங்கிக் கொண்டு கிடக்கிறது; அதைத்தட்டி எழுப்ப வேண்டும்.

ராஜாஜி தீவிரமாக முயன்று வரும் இப்பிரச்னையிலாவது தமிழக அரசாங்கமும் பங்கு பற்றி நடவடிக்கை எடுத்துப் பெருமை அடையலாம்.

அரசாங்கத்துக்கும் மேலே

நெல் இடிக்க நிறைய உரல்களும் அரிசி புடைக்க முறங்களும் வாங்கிப் போட்டால் விளைச்சல் அதிகமாகும் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 'சோஷலிஸ அரங்கம்' என்பதாக ஒன்றை நிறுவி அதன்மூலம் நாட்டில் சுபிட்சத்தை ஏற்படுத்த உத்தேசித்திருப்பது அதைப் போன்ற மடமையே.


நல்ல உரமும், ஏர்களும், நன்கு உழைக்கும் உழவர்களுக்குத் தரும் உற்சாகமுமே விளைச்சலைப் பெருக்கும். விளைச்சலுக்குப் பிறகுதான் புடைக்கவும், குத்தவும் முறம், உரல் இவை தேவை. அதேபோல் எல்லாத் தொழில்களுக்கும் தேவையான உபகரணங்களைப் பெருக்கி, அந்தத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஊக்கமளிப்பது தான் சுபிட்சத்துக்கு வழி. சுபிட்சம் அடைந்தபின்தான் எப்படிச் செல்வத்தை விநியோகம் செய்வது என்ற பிரச்னை எழுகிறது. அப்போது முக்கியத்துவம் பெற வேண்டிய முறைகளுக்கு இன்றைக்கே பூசைபோடுவது பேதைமை ஆகும்.

'சோஷலிஸம், சோஷலிஸம்' என்று காங்கிரஸ் தலைவர்கள் வாய்ப்பந்தல் விரிக்கத் தொடங்கி இன்று பல்லாண்டுகளாகின்றன. சோஷலிஸத்தை இலக்காகக் கொண்டு பயனற்ற இரண்டு பகாசுரத் திட்டங்களை நிறைவேற்றி இன்று மூன்றும் திட்டத்திலும் பிரவேசித்திருக்கிறோம். வரிக்கு மேல் வரிவிதித்து, நம் மக்களையெல்லாம் கசக்கிப் பிழிவதும் இந்த சோஷலிஸ சமுதாயத்தை நிறுவத்தான். காங்கிரஸின் தேர்தல் வெற்றி சோஷலிஸத்துக்கு மக்கள் அளித்துள்ள ஒப்புதலே யாகும் என்று கூட அக்கட்சியின் தலைவர்கள் முழங்கினார்கள். இவ்வளவும் ஆனபின்பு சோஷலிஸத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நிரந்தரமாக ஓர் அரங்கம் அமைக்க யோசனை செய்வது நகைப்புக்கிடமாகத் தானே தோன்றுகிறது?

பால் பெறுவதற்காக ஒரு மிருகம் வாங்குகிறோம். அதற்காக ஏராளமாகச் செலவிடுகிறோம். அதன் பின் அது மாட்டு இனத்தைச் சேர்ந்ததுதானா அல்லது வேறு மிருகமா, மாடானாலும் கறவைப் பசுவா காளையா என்று ஆராய்ச்சி நடத்தினால் எப்படி யிருக்கும்? எப்படியானாலும், அந்த மிருகம் இதுவரை பால் தராததுதான் இந்த ஆராய்ச்சிக்குக் காரணம் என்பது மட்டும் நிச்சயம். அதே போல் சோஷலிஸம் இதுவரை நமது பிரச்னைகளுக்குத் தீர்வு காணாததால்தான் இந்த அரங்கம் உருவாக இருக்கிறது என்பது சர்வ நிச்சயமான விஷயமாகும்.

ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா அவர்களின் நுண்ணறிவில் உதயமாகி, நேரு அவர்களின் அநுக்கிரகத்தைப்பெற்றுள்ள இந்த சோஷலிஸ அரங்கம் ஏதோ வெற்று வேட்டு, மக்களை மயக்கும் ஒரு மோக ஸஸ்திரம் என்று அலட்சியமாக எண்ணி விட வேண்டாம். இன்று மந்திரி சபைகளுக்கும் சட்டாம்பிள்ளை ஸ்தானத்தில் இருக்கும் திட்டக் கமிஷனைப் போலவே இந்த அரங்கமும் ஓர் அதிகார கேந்திரமாகப் பரிணமிக்கும் என்று எச்சரிக்கிறோம். ''அரங்கம் சொல்லிவிட்டது; அதைச் செய்தே தீர வேண்டும்'' என்று கூறிக் கொண்டு காங்கிரஸ் இனி தன் கண்மூடித்தனமான போக்கில் தலைதெறிக்கச் செல்லத் தொடங்கும்.

சுய முன்னேற்றத்துக்காக இந்த அரங்கத்தை யாரும் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று ஸ்ரீநந்தா கூறியிருப்பது 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதையையே நினைவு படுத்துகிறது. அதாவது, மத்திய மந்திரி சபையின் அரை நூற்றுக்கு மேற்பட்ட ஸ்தானங்களில் இடம் பெற முடியாத துர்ப்பாக்கியசாலிகளுக்கு இதனால் யோகம் அடிக்கும். அவர்கள் இந்த அரங்க அங்கத்தினர்களாகிச் சுய முன்னேற்றத்துக்கான ஏற்பாடுகளில் முனைவார்கள்.



திட்டக் கமிஷனைப் போல் இந்த அரங்கமும் அரசாங்கத்துக்கு மேம்பட்ட ஒரு 'மகா சர்க்காராகி' நம் ஜனநாயகத்தின் கம்பங்களை அசைத்துவிடும். இதையெல்லாம் யார் தடுப்பது? காங்கிரஸை ஆட்சி பீடத்தில் அமர்த்தியாயிற்று. விதை ஒன்று போட்டால் சுரை வேறு முளைக்குமா என்ன?

உண்மை பேசலாமா?

அமெரிக்காவில் நமது தூதராக இருக்கும் ஸ்ரீ பி. கே. நேரு அவர்களைத் தில்லி மக்கள் சபையில் எல்லாரும் சேர்ந்து கைவிட்டு விட்டார்கள். இத்தனைக்கும் நமது தூதர் செய்த தவறு என்ன தெரியுமோ? "இந்திய ராணுவம் தற்காப்புக்குப் போதியதாக இல்லை" என்ற உண்மையை உரைத்ததுதான்.

நமது வட எல்லையில் பதினையாயிரம் சதுர மைல் பிரதேசத்தை மொத்தமாகவும் சில்லறையாகவும் சீனா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்போது கூட நாம் நமது எதிர்ப்பைக் காகிதங்கள்மூலமாகத் தெரிவித்துக் கொண்டிருப்பதிலிருந்தும், ருஷ்யாவிலிருந்து ராணுவத் தளவாடங்களை வாங்கப் பேரம் பேசிக் கொண்டிருப்பதிலிருந்தும் யாருமே நமது ராணுவ பலத்தை — அதாவது பலவீனத்தை—ஊகித்துக் கொள்வார்கள்.

அதிலும் அமெரிக்கர்களைப் போல் நமக்கு உதவி புரிந்து வருபவர்கள் சுலபமாகப் புரிந்து கொள்வார்கள். டாலர் வேண்டும் எனில் அமெரிக்காவை யாசிக்கிறோம். உணவுப் பஞ்சம் வந்தால் அவர்களிடம் கோதுமையைக் கோரிப் பெறுகிறோம். நமது சர்க்கரையை வெளி நாட்டில் விற்க முடியாமல் தவிக்கும் போது, அமெரிக்கர்கள் தாங்கள் வாங்கிக் கொள்வதாக முன் வந்து உதவுகிறார்கள். நமது ஆலைகளுக்குப் பஞ்சுப் பஞ்சம் வந்தால் அமெரிக்கர்கள் பஞ்சு கொடுத்து உதவுகிறார்கள்.

இப்படிச் சகல விதத்திலும் நமக்குச் சகாயமளிக்கும் நாட்டினரிடம் நம்முடைய ராணுவ பலாபலத்தை வெளியிடுவதால் தவறில்லை என்று நம் தூதர் கருதினார். இதில் தவறு ஒன்றுமில்லை. சத்யமேவ ஜயதே.

மதில்மேல் பூனை

அந்நிய மூலதனத்தை அபரிமிதமாக நம்பிக் கொண்டு நடத்தும் திட்டங்கள் மண் குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும் என்பதை 'இந்திய உதவியாளர் சங்க'த்தின் கூட்டம் நமது அரசாங்கத்துக்கு நிரூபித்து விட்டது.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு உதவும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், ஜெர்மனி, கனடா, ஹாலந்து, ஆஸ்டிரியா முதலிய நாடுகளுடையவும் உலக பாங்கினுடையவும் பிரதிநிதிகள் வாஷிங்டனில் கூடி, இந்தியாவின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டு தேவைக்குரிய நிதி உதவி முழுவதையும் தருவதற்கில்லை என்று கூறிவிட்டனர்.

இந்தியாவின் தேவையில் 90 சதவிகிதம் கொடுக்கத்தான் அவை முன் வருகின்றன. எஞ்சியுள்ள பத்து சதவிகிதம் அளவுக்கு உதவி குறைந்தால் கூட நாம் பல நாடுகளுக்குத் திருப்பித் தருவதாக வாக்களித்த தவணைகள் தவற நேரிடும் என்றும், பல மூலப் பொருள்கள் இறக்குமதியாவது தடைப்படும் என்றும் இந்தியா அஞ்சுகிறது.

இந்த நாடுகள் இகூர் என்று, வாக்களித்த தொகையினின்று தங்கள் 'கோட்டா'வைக் குறைத்துக் கொள்வதற்குத் தக்க காரணமும் காணோம். இந்த நாடுகளிடம் இந்தியாவின் சார்பில் அமெரிக்கா எவ்வளவோ பரிந்து பேசியும் உதவியில் தங்கள் பங்கை உயர்த்தப் போவதில்லை என்று அவை கூறிவிட்டன!

இதற்கு இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கை, கோவா நடவடிக்கை ஆகியவை காரணம் என்று பொதுவாகக் கூறப்படுகின்றன. வேறு காரணங்களும் கூறப்படுகின்றன.

கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் ஜனநாயக நாடுகளுக்கும் இடையிலுள்ள பகையை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்ற அடிப்படையிலேயே காங்கிரஸ் சர்க்கார் திட்டங்களை வகுத்திருப்பதால் எந்த ஒரு சாராரையும் அதிருப்திப் படுத்தமுடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மதிலை விட்டு ஒரு புறமும் குதிக்க முடியாத பூனையாக நாம் ஆகிவிட்டோம்.

என்ன சேதி?


சுப்பராயன் மறந்த விஷயம்

ராஜாஜியால் தி. மு. க. உரம்பெற்று வருவதாகக் கூறியுள்ள மகாராஷ்டிர கவர்னர் திரு ப. சுப்பராயன் அவர்கள் ராஜாஜியை மீண்டும் காங்கிரஸுக்கு வரவேற்கிறார். குற்றப் பத்திரிகை, வரவேற்புப்பத்திரிகை இரண்டின் நியாய அநியாயங்களைப் பற்றி நாம் ஆராயப் புக வேண்டாம். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு கவர்னர் இவ்வாறு பூரணமான கட்சி அபிமானத்துடன் பேசியிருப்பது மிகவும் இங்கிதமற்றதாகும். திரு சுப்பராயன் அவர்கள் நல்லவர்; நீண்ட காலம் ராஜாஜியின் ஆப்த சிஷ்யராக இருந்தவர். ஆனால் பொல்லாத ஞாபக மறதிதான் அவரைப் பிடித்து ஆட்டியிருக்கிறது. தாம் கட்சிச் சார்பற்ற ஒரு கவர்னர் என்பதை மறந்து பழைய காங்கிரஸ் மந்திரி என்ற நினைப்பிலேயே பேசி விட்டார் அவர். நாம் இதோடு இந்த நிகழ்ச்சியை மறந்து விடுவோம். ஆனால் திரு சுப்பராயன் அவர்கள் மறக்க மாட்டார் என நம்புகிறோம்.

'பழனி' மறைந்தார்

தமது திறமையால் ஊர் பெயரையே தம் பெயராக வரித்துக் கொண்ட பழனி சுப்பிரமணிய பிள்ளையின் அகால மரணத்தைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

அபார லய சுத்தத்துக்கும், லயவின்யாசங்களுக்கும் பேர் பெற்ற திரு பழனி



தாள வாத்தியமாகிய மிருதங்கத்தை மிகவும் சொகுசாகக் கையாண்டு, அதனுலேயே ரசிகர்களைப் பிரமிக்கச் செய்தவர். தகப்பனரான பழனி முத்தய்யா பிள்ளையிடம் மிருதங்க சிட்சை பெற்று, அவருடைய காலத்திலேயே அவருக்கு நிகராக லய வித்துவான்கள் வரிசையில் முதல் இடம் பெற்றவர் சுப்புடு. கேட்போர் வியப்புறும் வண்ணம் பல இளைஞர்களை இவ்வாத்தியத்தில் பயிற்றுவித்து அரங்கேற்றிய பெருமையும் பெற்றவர். திருவிதாங்கூரின் ஆஸ்தான வித்துவானுக இருந்ததுடன், சென்னை சங்கீத வித்வத் சபையின் வித்வத் கோஷ்டியிலும், சென்னை சங்கீத நாடக சங்கத்திலும், அகில இந்திய ரேடியோவின் ஆலோசனைக் குழுவிலும் அங்கத்தினராக இருந்து சிறப்புப் பணியாற்றியுள்ளார்.

தமிழ் இசைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த சுப்புடு சில நாட்களுக்குமுன் திருப்புகழ் உருப்படிகளில் பொதிந்து கிடக்கும் லய நுட்பங்களை வின்யாசம் செய்து பிறர் முயலாத நுட்பமான சொற்கட்டுகளை மிருதங்கத்தில் வாசித்துக் காட்டியதைக் கேட்டவர்கள், ''மிருதங்கத்தில்கூட ஒரு முழு நேரத் தனிக் கச்சேரி செய்யலாம் போலிருக்கிறதே'' என்று கூறி அவருடைய வித்வத்தைப் பற்றிப் பெருமிதம் அடைந்தனர்.

மிருதங்க வித்துவான்களுக்கும் மிருதங்க வாத்தியத்துக்கும் உரித்தான கௌரவத்தை இசை மேடைகளில் நிலைநாட்டுவதில் பேரார்வம் கொண்டிருந்த திரு சுப்புடுவின் மறைவு கர்நாடக இசை உலகுக்கு ஒரு பெரிய நஷ்டமாகும்.



ஸ்ரீ வி. எஸ். கோபாலகிருஷ்ணய்யர்

ஸ்ரீ. வி. எஸ். கோபால கிருஷ்ணய்யர் மறைவு

சென்னை புரசைவாக்கம் ஸர் எம். சிடி. முத்தையா செட்டியார் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பல ஆண்டுகள் தலைமை ஆசிரியராக இருந்த ஸ்ரீ வி. எஸ். கோபாலகிருஷ்ணய்யர் அவர்களைக் கல்வித் துறையில் அறியாதவர்கள் இல்லை என்றே கூறலாம் கடமையில் கருத்தும், கண்ணியமும் கொண்ட அவர் ஒரு யோகியாகவே மாறிப் பள்ளியை நிர்வகித்துப் பள்ளிக்குத் தனிப்பெருமை தேடித் தந்தார். தத்துவ விசாரணையில் ஈடுபாடும், அத்வைத மார்க்கத்தில் அளவற்ற நம்பிக்கையும், ஆராய்ச்சித்திறனும் உள்ளவரான அய்யர் அவர்கள் பல சங்கங்களில் வேதாந்தச் சொற்பொழிவுகளைச் செய்திருக்கிறுர். சுறுசுறுப்பும், சோர்வை அறியாத உடற்கட்டும் கொண்ட அவர் ஓய்வுபெற்ற பின்பும், லேடி முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆண்கள் பள்ளி ஆகியவற்றின் 'கரஸ்பாண்டெண்டு' பதவியைத் திறம்படவகித்துப் பல்லாண்டுகள் நலம் பலபுரிந்தார். அத்தகைய பெருமை வாய்ந்த ஐயரவர்கள் 17-5-62 அன்று புகழுடம்பு எய்தினர். ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் அவர்களது பிரிவு கல்வித் துறைக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். ஓய்வில்லாது கல்வித் தொண்டு புரிந்த அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்

உள்ளம் பேசும்

இவ்விதழ் அட்டையில் இரண்டு ஜோடிக் காதலர்களைப் பார்க்கிறோம்!

ஆனல் ஒரு ஜோடி, மற்றொரு ஜோடி சற்றுத் தொலைவில் இருப்பதாக எண்ணமே இன்றி ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறுர்கள்!

'என்ன பேசிக் கொள்கிறுர்கள்?' என்று யாரும் கேட்க மாட்டார்கள். அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்க யாருக்கும் உரிமை இல்லை!

ஆனல் ஒன்று மட்டும் தெரிகிறது. பலப் பல நாட்கள் அந்த இடத்துக்கு வந்து பலப் பல காதல் மொழிகளைப் பரிமாறிக் கொண்டு இன்பம் கண்டவர்கள் அவர்கள். இப்பொழுதும் அவ்விடத்துக்கு வந்ததால் புதிதானதோர் இன்பம் காணவே செய்கிறுர்கள்!

இடத்துக்கும் இன்பத்துக்கும் யாதாகிலும் தொடர்பு உண்டோ என்ற மயக்கத்தையே உண்டாக்கி விடுகிறுர்கள் இவ்விதழ் அட்டைப்படக் காதலர்கள்.



புதிய ராஷ்டிரபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்கள் பதவியேற்றதும் முதன் முதலில் சென்னைக்கு மே மாதம் 26ந் தேதி விஜயம் செய்தார். 27ந் தேதி ஆந்திர மஹிள சபையினர் நடத்திய வெள்ளி விழாவில் கலந்து கொண்டார். 1. அடையாற்றில் ஆந்திர மஹிள சபை நர்ஸிங் ஹோமில் குத்துவிளக்கேற்றி வெள்ளி விழா ஹாலைத் திறந்து வைக்கிறார். 2. விழாவில் ஜனாதிபதிக்கு ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக் மாலையணிவித்துக் கௌரவிக்கிறார். 3. பெண் குலத்துக்கு அரிய சேவை செய்துள்ள சகோதரி சுப்புலக்ஷ்மிக்குப் பரிசில்கள் வழங்குகிறார் பாரத ஜனாதிபதி. 4. புஷ்டியுள்ள குழந்தையைப் பேணி வளர்க்கும் அன்னைக்கும் ராஷ்டிரபதி பாராட்டிப் பரிசுகள் கொடுத்தார். ★ சென்னைக்கு விஜயம் செய்த ராஷ்டிரபதி ராதா கிருஷ்ணன் ராஜாஜியை அவர் இல்லத்துக்குச் சென்று சந்தித்து அளவளாவினார். 5. அரசியல் மேதை தத்துவ மேதையை வரவேற்கிறார். 6. ராஷ்டிரபதிக்குத் திரு வி. ஆர். நரஸிம்மன் மாலையணிவிக்கிறார். 7. மனம் விட்டுப் பேசிக் களிக்கும் இரு பெரியார்கள். 8. ராஜாஜியின் குடும்பத்தோடு இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்.



என் தாய் பார்வதி தேவி; தந்தை பரமேசுவரன்; சிவனடியா
ரெல்லாம் உறவினர்; மூவுலகும் தாயகம். - ஸ்ரீ ஆதிசங்கரர்

5. உலகுக்கு ஒரு குழந்தை

முதலையின் வாயில் சிக்கி நின்ற சங்கரன், ஆதுரத்துடன் தன்னை நோக்கிக் கொண்டிருந்த அன்னையிடம் பேசலானான்: "மறு பிறப்பு என்பதற்கு உடல் அழிந்துதான் ஆக வேண்டுமென்பதில்லை அம்மா. வாழ்முறையை முற்றிலும் மாற்றிக் கொள்வதும் புனர் ஜன்மம் தான். எனவே, இப்போது நான்...." அன்னையின் மனத்தைப் புண்படுத்த விரும்பாத சங்கரன் நிறுத்தினான். அவளது உயிரையே கேட்பதானாலும் பரவாயில்லை. அவளது அருமைச் செல்வனை இழக்கும்படி எப்படிக் கேட்பது? எந்தத் தாயாலாவது இயல்கிற தியாகமா அது? காவு கொடுப்பதற்கு மந்திர உச்சாரணம் செய்யும்போது கட்டுப்பட்டுக் கிடக்கும் பசு போலச் சிலையாகச் சமைந்திருந்த அன்னையைத் தலைதூக்கிப் பார்க்கவே சங்கரனுக்கு இயலவில்லை.

கண்களைத் தாழ்த்திய போது தான் சங்கரன் முதலை தன் பாதத்தைக் கவ்வியிருப்பதையே மீண்டும் உணர்ந்தான். வலி பொறுக்க மாட்டாதது போலப் பாவித்து, வெட்கத்துடன் ஆரியையிடம் பேசலானான்: "பாதை பொறுக்கவே முடியவில்லை அம்மா, அதனால் தான் சொல்கிறேன்.

"அதாவது, அம்மா . . . நான் வந்து...என் வாழ்முறையை இப்போதுமுற்றிலும் மாற்றிக்கொண்டு சந்நியாச ஆசிரமம் வாங்கிக் கொண்டால்.... அது வேறு பிறவிக்கே ஒப்பாகும். அப்பொழுது இந்த ஜன்மத்தின் பிராப்தமும், பிராரப்தமும் கூட மாறலாம். அதனால் இப்போது மரணமும் நிகழாமல் தடுக்கலாம்...

"நான் துறவு பூண நீ அநுமதித்தால்தான் நான் ஆசிரமத்தை மாற்றிக் கொள்வேன். அப்போது நான் இந்த முதலை வாயிலிருந்து தப்ப ஒரு வாய்ப்பு கிடைக்கலாம். அதையும் தான் பரீட்சித்து விடலாமே அம்மா! பரீட்சை பொய்த்தாலும் பரவாயில்லை. ஏனென்றால், ஆசிரமத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் இப்போதே இந்த முதலையின் வயிற்றில் நான் அடக்கமாக வேண்டியது சர்வ நிச்சயம் தானே!"

சங்கரனுடைய தொடை வரையில் முதலை தன் பெரிய வாயை மேலும் மேலும் அகட்டிக் கொண்டு வந்தது. ஆரியாம்பிகையால் அந்தக் கண்ணராவியைக் காணவே சகிக்கவில்லை.

அந்த இக்கட்டான கட்டத்தில் அவள் வேறென்னதான் செய்யவிருந்தது? ஒரு கனவு பலித்துக் குழந்தையைப் பெற்றாள். இன்னொரு கனவும் பலித்து இப்போது அக் குழந்தையை இழக்கத்தான் வேண்டும் போலிருக்கிறது. முடிகிற காரியமா அது? ஆனால் அதையெல்லாம் எண்ணித் தயங்குவதற்கு இதுவா சமயம்? அதோ அந்தப் பாழும் முதலை...

வேதனை இதயத்தைக் கவ்வ ஆரியை வாயைத் திறந்தாள். எப்படித்தான் திறந்தாளோ, எப்படித்தான் அந்த வார்த்தைகளைச் சொன்





னாரோ? ''ஆண்டியாகவோ, பரதேசியாகவோ எங்கேயாவது ஒரு மூலையில் நீ உயிரோடிருந்தால் போதுமடா, கண்ணே!'' என்று கண்ணீரிடையே திணறினான். அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் வாயிலிருந்து வெளியேறிய போது அவனுடைய ஆருயிரே சிதைந்து உடைந்து வெளியேறி விட்டாற் போல ஒரு பயங்கரமான மரண அநுபவம் அவனைக் கனமாகச்சூழ்ந்துகொண்டுவிட்டது.

சங்கரன் இதயத்தைத் தளர விடாமல் அழுத்தமாக்கிக் கொண்டான்.

குடியிருந்த கோவில் என்பதனால், அன்னையின் அநுமதியின்றித் துறவியாகக் கூடாது என்பதற்காகவே சந்தர்ப்பங்களை உருவாக்கிய அவன் அந்தக் கணமே பந்தபாசங்களைக் களைவதாகச் சங்கல்பித்து, துறவற மந்திரத்தைக் கூறி, சூர்ணா நதியில் மூழ்கினான். அத்துடன் பெயரளவுக்கு அவன் மீது ஒட்டியிருந்த இக உறவுகளும் மூழ்கின. அண்டியோரை பவக் கடலிலிருந்து மீட்கும் பெருமான் சின்னஞ் சிறு ஆலவாய்ப் புழையில் பவபந்தங்களைக் கரைத்து, துறவியாக எழுந்திருந்தார்.

இனி அவர் எந்தத் தனியொரு குடும்பத்துக்கும் சொந்தமில்லை. தனக்கென்று தனி வாழ்வற்ற, பிறர்க்கு உரியாளராகி விட்டார். உலகம் யாவும் தன் உடைமையாகக் கொண்டவர் இப்போது உலகுக்கெல்லாம் உடைமையாகி விட்டார். 'எந்த உயிரினமும்' என்னைக் கண்டு அஞ்சாத நிலையை நான் அடைய வேண்டும்' என்று ப்ரைஷ மந்திரம் கூறித் துறவியாகி விட்டாரல்லவா?


துறவியா? துறவிதானா? எதைத் துறந்தார் சங்கரர்? இதர சந்நியாசிகள் உலகைத் துறந்து வனமோ, குகையோ செல்வார்கள்! ஆனால் இவரோ உலகைத்

துறக்காமல் அதைத் தேடி அல்லவா செல்லப் போகிறார்?

புராணங்களில் கேட்டிருக்கிறான் ஆரியை — நோயாளி புண்ணிய நதியில் முழுகினான், அதனின்று ஆரோக்கிய திடகாத்திரனாக எழுந்திருந்தான் என்றெல்லாம். இப்போது அதைவிட ஒரு பெரிய அதிசயத்தை அவள் கண்டாள். சங்கரர் நீரில் முழுகியவுடனேயே ஜலத்திலிருந்து ஒரு கந்தர்வன் வெளிப்பட்டு வான வீதியில் அஞ்சலி அஸ்தனாக நின்றான். இல்லை, இல்லை. இதோ சங்கரரும் நீரோட்டத்திலிருந்து எழுந்தார்.

அந்த முதலை எங்கே காணவில்லை? இந்தக் கந்தர்வன் யார்? இவன் சங்கரரிடம் என்னவோ சொல்கிறானே!

''சுவாமி, நான் மங்கையரின் புழுக்கத்திலும் மதுவின் மயக்கத்திலும் ஆழ்ந்து, சங்கீதம் கேட்டுக் கொண்டிருக்கும் போது அவ்வழியாக வந்த தூர்வாஸ மகரிஷிக்கு மரியாதை செலுத்தத் தவறி விட்டேன். அவர் உடனே வெகுண்டெழுந்து என்னை முதலையாகுமாறு சபித்தார். பின்பு சாப விமோசனமாக, 'காலடிப் புழையில் போய் முதலையாகக் கிட! முழுமுதற் பொருள் அங்கு மதலையாக வரும். அதன் காலடியைப் பற்றி விமோசனம் அடைவாய்!' என்று சொன்னார். அதே போல், இன்று உன் அருளால் விடுதலை பெற்றேன். பற்றியவர் யாவருக்கும் சம்சாரத்திலிருந்து விடுதலை அளிக்கும் உன் பாதத்தை நான் பற்றியதால் உனக்கே இன்று சம்சாரத்திலிருந்து விடுதலை கிடைத்தது; என் பாக்கியமே பாக்கியம்'' என்று கூறினான் கந்தர்வன். சங்கரரைப் பணிந்து வானகம் சென்றான்.



“அகத்துக்குப் போகலாம், வா'' என்றாள் ஆரியை சங்கரரிடம்.

தாயுள்ளம் அப்படித்தான் பேசும்.

''அகத்துக்கா?'' என்றார் சங்கரர், செப்பு வாயை வியப்புடன் விரித்து. 'நான்', 'நான்' என்று துருத்திக் கொண்டு முளைக்கும் அகமே அல்லவா போக வேண்டும்? அகத்துக்குப் போவதாமே!

''ஆமாமடா, ஐயா! அகத்துக்குத் தான் போகலாம் என்கிறேன். உன்னைப் பிடித்த கண்டமெல்லாம் தீர்ந்து விட்டது. இனி மேல் உனக்குச் சதாயுசு தான். எட்டு வருஷங்களுக்கு முன் வரம் கொடுத்த விருஷாசலேசன் அதை இன்று பூரணமாக்கி விட்டான். வா, போகலாம். பீடாபரிகாரமாகச் சாந்திகள் செய்யவேணும்'' என்று கூறினாள் ஆரியாம்பிகை.

சாந்தி! சங்கரர் உள்ளத்தில் பரம சாந்தி படிந்தேயாகி விட்டதே!

மெல்லக் கேட்டார்: ''அம்மா! சற்று முன் நீ என்ன சொன்னாய்? இப்போது என்ன சொல்கிறாய்? முதலை என்னுடைய காலைப் பிடித்துக் கொண்ட போது நான் துறவு பூண நீ அநுமதிக்கவில்லை? துறவிக்கு அகம் ஏது?''

ஆரியாம்பிகை அப்படியே திக்பிரமித்துப் போய் நின்றாள். 'ஏதோ தீக்கனாக் கண்டோம். அதன் தீமையும் கனவுடன்

சரி. பிற்பாடு தொடராது' என்றுதான் எண்ணினுள் அவள். ஆபத்துக் காலத் தில் அளித்த அநுமதியின் அர்த்தம் சங்கரன் எடுத்துச் சொன்னபோதுதான் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. பீதி யளிக்கும் சூனியப் போர்வை மீண்டும் அவள் மீது கனமாகப் படிந்து அழுத் தியது. புலன்களெல்லாம் தன்னிட மிருந்து பிரிந்து போவது போலச் செய லிழந்து வந்த ஆரியாம்பிகையின் செவி யில் மட்டும் ஏதோ சொற்கள் கேட்டன.

சூர்ணிப் புழையின் அடங்கிய சல சல சப்தம் போல் சங்கரர் பேசிக் கொண்டே போனுர்:

''சந்நியாசிக்கு ஒரு வீடில்லை. உல கமே வீடு. ஒரு தாயில்லை. பிச்சையிடு கிற பெண்கள் எல்லாரும் தாய். உப தேசம் செய்பவர்கள் சகலரும் தந்தை யர். சீடர்களே புத்திரர்கள். கேளிக்கை என்பது தன்னிலேயே அடங்கி இன்புறு வதுதான். அம்மா, கலியாணம், கலி



யாணம் என்றுயே! துறவியான நான் சாந்தியை மணந்தாயிற்று. எனக்கு உலகத்தவர் சொல்லும் மணம் கிடை யாது. உள்ளத்தில் விம்மும் அன்பின் மணத்தைத்தான் நான் பரப்பவேண்டும்.

''அம்மா, கலியாணம் கார்த்திகை, பிள்ளை குட்டி என்றெல்லாம் ஏற்பட்டு விட்டால் வீட்டுக் கவலையோடு வாழ்வு முடிந்து போகும். எல்லோரும் அப்படி யானுல் இந்த உலகுக்காகக் கவலைப்படு வது யார்? இந்த உலகம் எப்படியெல் லாம் சீர்கெட்டுக் குலைந்து வருகிறது என்று உனக்குத் தெரியாதா அம்மா? அதைத் தன்னுல் முடிந்த மட்டும் சீர் செய்ய உன் மகனை நீ அர்ப்பணிக்கக் கூடாதா? உன் தாய் உரிமையை உலகத் துப் பெண்களுக் கெல்லாம் வழங்கக் கூடாதா?''

கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் சங்க ரர். மெல்ல மெல்ல சுய உணர்வு பெற்ற அன்னையின் முகம் எங்கும் முத்துச் சிதறியது. பிச்சை போடுபவரெல்லாம் தாயாமே! அவர்களுக்கெல்லாம் அந்த உரிமையைத் தானே வழங்க வேண்டு மாமே!

''சங்கரா! உனக்காகத் தவம் இருந்து உன்னைச் சுமந்து பெற்ற நான் உன் அம்மா இல்லை என்று எப்படித் துறக்க முடியும்?'' என்றுள் ஆரியை. அவள் தொண்டையே வெடித்து விடும் போல் வலித்தது.

சங்கரரின் விசாலமான கண்களை அழகிய இமைகள் கவிந்து கொண் டன. குருத்து போன்ற கழுத்தில் சிறு சிறு பந்துகளாகத் துயரம் முட்டியது. சமாளித்துக் கொண்டு பேசினுர்.

''நீ என் அம்மாதான். பெண்கள் யாவருமே தாயார் என்றுல் என்னைப் பெற்றெடுத்து வளர்த்த நீ விசேஷ மாகத் தாயார்தான். அதனுல்தான் 'அவர்களைவிட நீ என்னிடம் அதிகமாக அன்பு செய்ய வேணும்; பிடிவாதம் பிடிக்கும் குழந்தைக்கு அது விரும்பும் எந்தப் பொருளையும் அளிக்கும் தாய் போல் என் துறவுற விருப்பத்தை நீ பூர்த்தி செய்ய வேணும்' என்று எதிர் பார்க்கிறேன்.

''நீ நிச்சயமாக என் தாயார்தான். உன் தாய்மையைச் செலுத்த வேறு குழந்தைகளும் இல்லாதவள் நீ. என்னை யன்றி நாதி ஏதும் அற்ற விதவைத் தாய் நீ. என்றுலும் தாயே, உனக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் போலவே இந்த பிரபஞ்சத்துக்கும் நான் ஆற்ற வேண்டிய பல கடமைகள் இருக்கின்றன. அவற்றுக்கு இப்போது என்ன அவசரம் என்கிருயா? உனக்குப் பிற்காலத்தில் வைத்துக் கொள்ளலாமே என்கிருயா? அம்மா, என் உள்ளத்தில் இருப்பதைச் சொல்கிறேன். இப்போது நான் உண்மை யில் எனக்கு மட்டும் துறவு கேட்கவில்லை. உனக்கும்தான் சேர்த்துக் கேட்கிறேன். நீ என்னைத் துறந்தால்தான் உனக்கும் பாச பந்தங்கள் விலகும்.

''அன்னையே! இந்தப் பிறப்பில் நீ கண்ட துயரமெல்லாம் போதாதா? ஏராளமான செல்வம் இருந்தும் அந்தச் செல்வத்தை ஆளப் பிள்ளை இல்லாமல் குறைப்பட்டாய். பிள்ளை பிறந்தது. ஆனுல் உடனேயே கணவனைப் பறி கொடுத்தாய். பிள்ளையையும் என்று வாரி விட்டு விடுவோமோ என்று கதிகலங்கிக் கொண்டிருந்தாய். இந்தச் சஞ்சலங்கள் யாவும் இல்லாத சாந்தியை அடைய விரும்ப வில்லையா நீ? அம்மா! இன்னல்களே இல்லாத அமர நிலையைப் பிரஜையாலோ, தனத்தாலோ பெற முடியாது; தியாகத்தினுல்தான் பெற முடியும் என்ற வேத வாக்கை நீ கேட்டிருப்பாயே! அப்பேர்ப்பட்ட தியா

கத்தைச் செய்து புகழ் பெறுவாய். பெற மாட்டாத குழந்தையை உலகுக்காகத் துறந்த தியாகி என்ற கியாதியைப் பெறுவாய்...'' மிகமிகப் பணிவாகவும் பவ்யமாகவும் பிரார்த்தித்தார் சங்கரர்.

சிவகுருவை விட வைராக்கியத்துடன் வாழ்ந்தவள்தான் ஆரியாம்பிகை. அவளுடைய பூர்வ கர்மவினை யாவும் தீர்ந்து அவள் இப்பிறப்புடன் மெய்ப் பொருளில் லயித்துவிட வேண்டு மென்பதற்காக ஈசனே அவள் உணர்ச்சிகளைக் கிளர்த்திப் புடம் போட்டான். இப்போது ஆரியாம்பிகையின் உள்ளத்தில் பழைய சமன நிலை மீண்டும் புத்துயிர் பெற ஆரம்பித்தது.

மங்கலான ஒளியில் ஆடும் நிழல்கள் போல, ஒலித்தும் ஒலிக்காத மெல்லிய குரலில், அவள் கேட்டாள்: ''அப்பனே, சங்கரா! போய் வருவதற்கு அநுமதியா கேட்கிறாய்? இதோ, தருகிறேன் கண்ணே..... இல்லை... இல்லை. நீ போய் வருவதற்கு என்னால் இணக்கமளிக்க முடியாது. ஆமாம். நீ போவதற்கு மட்டும் அநுமதி தருகிறேன்.... ஆனால் நீ இந்த அதிர்ஷ்டமற்ற அபலையிடம் திரும்பி வரவே வேண்டாம். என்னைப் பற்றி ஒரு போதும் எண்ணவும் வேண்டாம். சங்கரா, உன்னுடைய காரியங்களுக்கு நான் இம்மிகூடக் குந்தகமாக இருக்க வேண்டாம். ஆகையால், என்னைப் பற்றிய நினைப்பே இல்லாமல் நீ போய்.....''

இதயத்தைக் கூறு கூறாகப் பிளந்து கொண்டு வரும் வார்த்தைகளுடன் ஆரியை முடித்தாள். ''நீ போய் வ....ராதே!''

சங்கரரின் நெஞ்சம் நைந்தே போய் விட்டது. 'தாயிற் சிறந்த தயாவான தத்துவன்' அவர். எனினும் தாயாக இருந்து அருள் செய்யும் சுயம்புவான அவருக்கும் ஒரு தாய் வாய்த்த இப்போதுதான் அன்னையுள்ளம் முற்றிலும் தெரிந்தது. அந்த அன்னை தன்னைத் தன்னுவதை அவராலேயே தாளமுடியவில்லை. ஆவேசமாகக் கூறினார்:

''அம்மா! என்னை அப்படி ஒரேயடியாகப் புறக்கணித்து விடாதே. கணவன் இல்லாத அகதிப் பெண் ஒருத்தியைப் பொறாமையும் பொருளாசையும் நிறைந்த பங்காளிகளிடம் காட்டிக் கொடுத்து விட்டு ஓடிய துரோகியாக என்னை ஆக்காதே. அம்மா, கடைசியாக நினைவிழக்கும் முன் நீ என்னை நினைத்துக்கொள். நான் இந்நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் சரி, எந்த அகால நேரமாக இருந்தாலும் சரி, எவ்வளவு முக்கியமான அநுஷ்டானம் செய்து கொண்டிருந்தாலும் சரி அதை யெல்லாம் பொருட்படுத்தாமல் உடனேயே உன்னிடம் ஓடிவந்து விடுகிறேன். உன் இறுதி விநாடிகளில் உன்னை என் மடியில் சாய்த்துக் கொண்டு ஆசுவாசப்படுத்தி உன்னை மேல் உலகம் அனுப்பி வைக்கிறேன். உனக்கு உத்தமமான உயர் கதி கிடைக்கச் செய்கிறேன். உனக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்ததற்காக நானே தகனமும் செய்கிறேன்.'' உணர்ச்சி வயப்பட்டு விட்ட சங்கரர் நாத் தழுதழுக்கப் பேச்சை நிறுத்தினார்.

இறுகிக் கொண்டு வந்த ஆரியையின் உள்ளம் அதே சமயத்தில் மீண்டும் உருகத் தொடங்கியது. சங்கரருடைய வாக்கைக் கொண்டே அவரைத் தன்னுடன் இருத்திக் கொள்ள இறுதியாக முயற்சி செய்தாள் அவள்.



''சங்கரா! அதெல்லாம் சரி. ஆனால் ஒரே பிள்ளையாகப் பிறந்தவன் எனக்குப் போல் உன் அப்பாவுக்கும், அவருடைய முன்னோர்களுக்கும் பிதிரு கடன்கள் தீர்க்க வேண்டாமா? வம்சம் விளங்க வாரிசு ஏற்படுத்தாமல், வழி வழியாக வந்த வீட்டு வழிபாட்டை ஏற்று நடத்தாமல் துறவறம் பூணுவது சாஸ்திர விரோதமில்லையா? வழிவழியாக நம் குலம் வேதத்தைக் காத்துத் தர வேண்டும் என்பது கடமையில்லையா? தியாகம், துறவு என்கிறாயேடா குழந்தை! இல்லறம் நடத்துபவனின் தியாகமும், துறவும்தான் பெரியது—தேவர்களுக்கும், பிதிருக்களுக்கும், சமூகத்துக்கும், சகல ஜீவராசிகளுக்கும் தன் உடல் பொருள் ஆவியை யெல்லாம் தருவதே குடும்பத்தானுக்கு விதித்த கடமை என்று உன் அப்பா சொல்லியிருக்கிறார். ஒன்றும் தெரியாத அவலமாக என்னை எண்ணி ஏமாற்றுதேடா சங்கரா!'' என்றாள்.

மிகமிக நயமாகவும், சொகுசாகவும் குரலைப் பதப்படுத்திக் கொண்டு சங்கரர் விடை கூறலானார்: ''தாயே, இல்லறத்தினில்லா விட்டாலும் முந்தையருக்குச் செய்ய வேண்டிய கடன்களைத் தீர்க்க முடியும் என்றும் சாஸ்திரமே சொல்கிறது. ஒருவன் நியமம் வழுவாது உத்தம சந்நியாசியாக வாழ்ந்தால் அவனது மூதாதையர் இருபத்தொரு தலைமுறைக்கு நற்கதி பெறுவார்களாம்.

''தாம்பத்தியம் இல்லாது வாழ மக்களால் முடியாது என்பதற்காகவே அதை

ஒப்புக் கொண்டு, சிராக்கித் தந்தன நம் சாஸ்திரங்கள்; ஆனல் அதுதான் ஒவ்வொருவனுக்கும் நிர்ணயமான வாழ்முறை என்பதை நான் ஏற்க முடியவில்லை. 'ஆழ இழுத்துச் செல்லும் உளை சம்சாரம்; அது விடுதலைக்கு இடையூறுனது' என்று மகான்கள் சொல்லியிருப்பதெல்லாம் அப்பியாசத்துக்குத் தேவையற்ற ஏட்டுவாதமா? வேதக் கிளை ஒன்று என்னுல் முறிபடும் என்றும் அஞ்சாதேஅம்மா! இறுமாப்புஏதும்இன்றியே சொல்கிறேன். இந்த நாடெங்கிலும் வேத நெறி தழைத்தோங்கச் செய்வதுதான் என் பணி. அதேபோல இந்தத் தேசம் முழுவதிலும் பக்தியை வளர்த்து, அறுசமய நீதியினை நிலைநாட்டுவதற்காகவே அகத்து ஆராதனையைக் கைவிடுகிறேன். நான் உண்மையான சந்நியாசியாக இருந்து இந்தப் பணிகளையெல்லாம் செவ்வனே செய்வதற்கு ஆசி கூறுவாய்!" என்று சொல்லியபடி ஆரியாம்பிகையின் பாதத்தில் பணிந்தார்சங்கரர். துறவியும் தனது அன்னையை வணங்கியே ஆக வேண்டும் என்பது சாஸ்திரம்.

கலங்கிக் கிடந்த ஆரியாம்பிகையின் உள்ளம் சங்கரனுடைய உறுதியை மெச்சித் தாளுகவே தெளிந்தது.

குழந்தையின் தோளைப் பற்றி எடுத்துத் தழுவிக் கொள்ள வேண்டும் என்று துடித்துக் கொண்டு முன் சென்ற ஆரியாம்பிகையின் கைகள் தாமாகவே கூப்பிக் கொண்டு அஞ்சலி செய்தன. போக போக்கியங்கள் எல்லாம் ஏராளமாக இருக்கும் போது அவற்றைத் துச்சமாகக் கருதி உதறி விட்டு, நாட்டை வாழ்விப்பதற்காகத் தன்னந் தனியாக, நிராதரவாகக் கிளம்பும் அந்தச் சின்னஞ் சிறு உருவத்தைக் காணும் போது உருவெடுத்த தியாகத்தைக் கண்டாற்போல அவள் கண்கள் பனித்துப் பெருக்கெடுத்தன.


ஆல்வாய்ப் புழையிலும் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. நீர் மட்டம் உயர்ந்துகொண்டே வந்தது. கரை ஓரத்தில் இருந்த கண்ணனின் திருக் கோயிலுக்குள்ளும் நீர் புகுந்தது. வெள்ளத்துக்குள் மூழ்கிக் கொண்டிருந்த கிருஷ்ணமந்திரத்துக்குள் புகுந்தார் சங்கரர். பரந்தாமனின் திவ்விய விக்கிரகத்தைத் தம் திருக் கையாலேயே எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். வேறு இடத்தில் மூர்த்தத்தைப் பிரதிஷ்டையும் செய்தார்.


"அம்மா, இனி இந்தக் கோபாலன் தான் உன் பாலன். இவன் உன்னை விட்டு ஒரு நாளும் போக மாட்டான். இவனைப் பற்றி நீ ஒரு விதமான கவலையும் படவேண்டியதில்லை. இவனை நீ பார்த்துக் கொண்டேயிருப்பாயாஞல் இவனும் உன்னைப் பார்த்துக்கொள்வான். பிறகு பார்ப்பவள், பார்க்கும் வஸ்து, பார்வை எல்லாம் ஒன்ருய்ப் போய் விடும்.

"நான் வரட்டுமா?"

'இந்த அமுத மொழிகள் காதில் நிரம்புவது இதுதான் கடைசிமுறையா?' ஆரியாம்பிகையின் கண்கள் நிரம்பின.

'இந்தப் பேதைக் கண்கள் ஏன் நீரைச் சுரந்து என் பார்வையை மறைத்துத் தொலைக்கின்றன? தன் சின்னஞ் சிறிய மெல்லடி பெயர்த்துப் பெயர்த்துக் கால் வலிக்கச் செல்லும் மகனைக் கண்கள் வலிக்கும் வரை பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டாமா? நாலாண்டுகளுக்கு முன் குட்டி சங்கரன், சர்க்கரைக் குட்டியாகத் தன் குண்டுக் கால்களை நீட்டிக் காட்டிய போது, அவற்றைப் பிடித்து விட்டதுதான் கடைசி. அப்புறம் வீதி வீதியாகப் பிட்சை கேட்டு அந்தக் கால்கள் வாழைத் தண்டாக மெலிந்தன. இப்போது எங்கெல்லாம் நடந்து தொய்ந்து போகுமோ? ஊர்ப் பெண்கள் எல்லாம் தாய் என்ருனே! அவர்களில் யாராவது, அதோ வேகமாகப் பின்னிக் கொண்டு செல்லும் அந்த இளம் கால்களைப் பிடித்து விடுவார்களா? ஈர வஸ்திரத்தைப் 'பட்பட்'டென்று தள்ளிக் கொண்டு செல்லும் அந்தக் கால்களுக்குக் குடைச்சல் கண்டால் யாரேனும் குளிர் காய்ச்சுவார்களா? இந்தக் கவலை யேதுமில்லாமல் என் பிரிய குழந்தை என்னைப் பிரிந்து செல்கிறது. பொம்மைகளையும் சொப்புக்களையும் வைத்துக் கொண்டு விளையாட வேண்டிய எட்டு வயசுக் குழந்தை உலகை யெல்லாம் உய்விக்க வேணுமென்ற கருணையுடன், திட மனத்துடன் தளர்ச்சியில்லாமல் செல்கிறது! அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கச் செல்கிறது. அதோ, கண் பார்வையை மீறிச் சென்றே விட்டது. எனவே, கண்களே, முடிந்த மட்டும் நீரைப் பெருக்குங்கள். உலகம் தோன்றிய நாளாக இந்த மகனைவிட எந்த ஓர் அரிய பொருளை யார் தியாகம் செய்திருக்க முடியும்? பயனற்ற பேதையான என்னை அவன் துறந்தது பெரிதில்லை. அவனை நான் உலகுக்காகத் தியாகம் செய்யும் பெருமையைப் பெற்றேனே, அது என் பாக்கியம். அதற்காகப் பொங்கிப் பொங்கி ஆனந்தக் கண்ணீர் பெருக்குவதைவிட இந்தக் கண்களுக்குத் தான் என்ன வேலை?' தியாகம் அளித்த ஆனந்தத்தின் வழியே அமைதி கண்டாள் ஆரியாம்பிகை. (தொடரும்)


இந்தியா


"தூக்கமே வரவில்லையே"
"தலையணையை மாற்றிப் பாருங்கள்"
உலகம்

அநீதியான மசோதா

கொழும்பு, மே 29—

இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத்துக்கு ஜனாப் சையது முகம்மது மௌலானா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் அவர் தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது விசேஷமாகக் குறிப்பிடத் தக்க சம்பவமாகும். சாதாரணமாக இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத்தின் தலைமைப் பதவிக்குப் போட்டி யிருப்பது வழக்கமல்ல. திரை மறைவில் கமிட்டியினர் ஒருவரைத் தெரிவு செய்து அவரே ஏகமனதாகத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவது வழக்கம். இம்முறை அதற்கு மாறாகத் தற்போதையத் தலைவர் வி. எஸ். அருளானந்தத்துடன் ஜனாப் சையது மௌலானாவும் போட்டியிட்டார். திரு அருளானந்தம் கடந்த ஆண்டு தலைமைப்பதவியைத் திறமையுடனும் சாதுர்யமாகவும் வகித்தாரென்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆயினும் 'தலைமைப் பதவியை ஒருவரே ஏன் வகிக்க வேண்டும், மற்றவர்களுக்கும் ஏன் ஒரு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது?' என்று பலர் கருதினார்கள். இதனால் போட்டி ஏற்பட்டது. இந்தப் போட்டி ஓரளவு ரசாபாசமான முறையில்கூட நடைபெற்றதாகக் கேள்வி. இரு தரப்பிலும் பிரசாரம் மிகக் கடுமையாக இருந்தபடியினால் வெற்றி யாருக்கு என்பதை அறிவதில் இவ்வருடத்தைப்போல் வேறு எவ்வருடமும் இத்தனை அக்கறை இந்திய வர்த்தகர்களுக் கிடையில் ஏற்பட்டிருந்தது கிடையாது. 27 அதிக வாக்குகளினால் ஜனாப் சையதுமௌலானா தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உதவித் தலைவர் பதவிக்குப் பிரபல ஆடிட்டரும் ஸ்ரீ ராமகான சபையின் தலைவருமான திரு எம். சுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மிகப் பெரிய அநீதி

தோட்ட வேலைகளில் இலங்கைப் பிரஜைகள் நியமிக்கப்படுவதைச் சட்ட பூர்வமாகக் கட்டாயப்படுத்த இலங்கை அரசாங்கம் ஒரு விபரீதமான மசோதாவை பார்லிமெண்டு சபைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இது தோட்டத் தொழிலாளரான இந்திய வம்சாவளியினர்களுக்குச் செய்யும் மற்றொரு மிகப் பெரிய அநியாயமாகும். மேலெழுந்த வாரியாகக் கவனிப்பவர்களுக்கு இந்த மசோதாவில் நியாய விரோதமான அம்சம் ஏதும் இருப்பதாகத் தெரிய மாட்டாது. சொந்த நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க ஒரு ஜனநாயக அரசாங்கம் சட்டம் இயற்றுவதில் தவறு ஏதுமில்லை. தவிரவும் இலங்கை அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் மசோதாவில் தற்சமயம் வேலைகளில் இருக்கும் இலங்கையரல்லாதாரை வேலைகளிலிருந்து நீக்கி அந்த வேலைகளை இலங்கையர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் ஓய்வு பெற்று அந்த வேலைகள் காலியாகும்பொழுது தான் அவற்றை இலங்கையர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மசோதா கோருகிறது. அப்படியிருக்கையில் இது எப்படித் தர்ம விரோதமாகுமென்று வாதிக்கலாம். ஆனால் இலங்கைத் தோட்டங்களில் நிலைமையை அறிந்தவர்களுக்கு மட்டும்தான் இந்த மசோதா எவ்வளவு பெரிய அநியாயத்தைச் செய்கிறதென்பது சரியாகப் புலப்படும்.

முதலாவதாகத் தோட்டங்களில் வசிக்கும் சுமார் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களில் யார் இலங்கையர், யார் இலங்கையரல்லாதார் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இலங்கையிலேயே பிறந்து வளர்ந்த இவர்கள் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள மனுப் போட்டும் நியாயமும் நேர்மையுமற்ற முறையில் அந்த மனுக்களை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. இந்திய வம்சாவளியினர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்காகவென்று இயற்றிய தனது சட்டத்தையே மீறிப் பிரஜாவுரிமையை மறுப்பதற்காக அந்தச் சட்டத்தை அரசாங்கம் எப்படிப் பயன்படுத்திக் கொண்டு வந்துள்ளதென்பதை கனம் நீதிபதி திரு டி. எஸ். பெர்னாண்டோ போன்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பல அப்பீல் வழக்குகளில் ஆணித்தரமாக இடித்துக் காட்டியிருக்கிறார்கள். எனவே தோட்டப் பகுதிகளில் சுமார் எட்டு லட்சம் இந்திய வம்சாவளியினர் இலங்கைப் பிரஜைகளாகாமல் நாடற்றவர்களாக்கப்பட்டிருப்பது அவர்களுடைய குற்றமல்ல. இரண்டாவதாக எல்லாப் பிரஜாவுரிமை மனுக்களும் பட்டுவாடாச் செய்து முடித்த பிறகு எந்தத் தேசப் பிரஜைகளாகவும் இல்லாமல் நாடற்றவர்களாக இருப்பவர்களின் நிலைமையைத் திரும்பக் கூடிப் பேசி முடிவு கட்டுவதென்று இலங்கை-இந்திய அரசாங்கங்கள் ஏற்கனவே டில்லி ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டிருக்கின்றன. அப்படி முடிவு செய்யும் வரையில் இந்த மக்களின் வயிற்றில் அடிப்பதில்லையென்று இலங்கை அரசாங்கமும் ஒரு புனிதமான வாக்குறுதியளித்திருக்கிறது. இப்பொழுது இலங்கை அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் மசோதா இந்த வாக்குறுதியையும் டில்லி ஒப்பந்தத்தையும் காற்றில் பறக்கவிடுகிறது. டில்லி ஒப்பந்தத்தின்படி இரு தேச அரசாங்கப் பிரதிநிதிகளும் மறுபடியும் கூடி நாடற்றவர்களாக்கப்பட்டிருக்கும் இந்திய வம்சாவளியினர்களிலே யார் இலங்கையர்கள், யார் இலங்கையரல்லாதார் என்பதைத் தீர்மானித்து முடிவு கட்டும் வரையில் அந்த மக்களில் யாரையும் இலங்கையரல்லாதார் என்று ஒருதலைப்பட்சமாக இலங்கை முடிவு கட்டமுடியாது. அவ்வாறு செய்வதும் அந்த அடிப்படையில் மசோதாக்களைக் கொண்டு வந்து பார்லிமெண்டில் நிறைவேற்றுவதும் அதர்மமாகும்.

—ரஜனி

யாரோ இவள் யாரோ?

என யாரும் கேட்க, எவரும் வியக்க..



உங்கள் மேனியெழிலை மிளிரச் செய்வது
செங்கமல வண்ண ப்ரீஸ்



இணங்கி இணைபிரியா நறுமண நலங்கோ..
எழிலுக்கொரு செவ்வண்ண நீராஞ்சனமோ..
செங்கமல வண்ண ப்ரீஸ் ஸ்நானமோ!
அரவணைத்து உங்கள் உரிமைப் பொலிவுக்கு
மெருகிழைக்க உருவெடுத்த அழகுசாதன சோப்..
உங்கள் வனப்புக்கு வனப்பு...ஒளிச் சிறப்பு!

இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. BZ. 22-X52 T

சிந்தனை மேடை

அரவிந்தன்

நிறையாத மனம்

இவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் இரண்டு பிரிவுகள். வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை. வாழ்வதற்கு ஆசைப் பட்டுக் கொண்டிருக்கும் வாழ்க்கை. இவற்றில் இரண்டாவது பிரிவு மிகவும் அந்தரங்கமானது. அன்றியும் மனிதனுடைய நினைவை அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது. வாழ்ந்து கொண்டிருப்பதைவிட வாழவேண்டியதற்கு ஆசைப்படுவது அதிகம் என்பதை அந்தரங்கமாகவைத்துக்கொண்டாலும் மனித இயல்பை ஒட்டி அதை நாம் புரிந்து கொள்ள முடியும். பொதுவாக நடுத்தரக் குடும்பத்து மனிதர்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் வாழ்ந்து கொண்டிருக்கிற நிகழ்காலச் சூழ்நிலையை முற்றிலும் நிறைவாக நம்பிவிடாமல் வாழ ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையை எதிர்பார்த்தே வாழ்கிறார்கள்.



வசதிகளோடு கட்டுப்பாடும், இட்டமும் உள்ள ஒழுங்கான வாழ்க்கையை இன்று வரை ஏதேதோ காரணங்களால் நீான் வாழ முடியாமல் போய் விட்டது போலவும், இனிமேல்தான் அந்த வளமான வாழ்க்கையை அநுபவிக்கும் சுகமான நாட்கள் தன்னுடைய வாழ்க்கையில் நேர வேண்டும் போலவும் ஒவ்வொரு மனத்திலும் ஓர் ஏக்கம் இருக்கிறது. வசதியாக இருப்பவர்களுக்கும் அவர்கள் நிலைக்கு ஏற்ப இந்த ஏக்கம் உண்டுதான்.


வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையை விட வாழ ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற வாழ்க்கையில் கவர்ச்சியும் மோகமும் அதிகம். ஏனென்றால் அது அருகில் வருவது போல் தோன்றியபடியே விலகி விலகிப் போய்க் கொண்டிருப்பது.

தொழில் முறையிலும்கூட :

வக்கீலாயிருந்து தொழில் நடத்திக் கொண்டிருப்பவர், பக்கத்து வீட்டில் டாக்டராக இருப்பவரைப் பார்த்து அவருடைய வருமானம் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏங்குவதும், டாக்டர் தம்மைக் காட்டிலும் செழிப்பான வருவாய் உள்ள வியாபாரி ஒருவரைப் பார்த்துத் தம்முடைய வருமானம் குறைவு என்று ஏங்குவதும், வியாபாரி அரசியலில் புகழும் பதவியும் செல்வாக்குமாக வாழும் மந்திரியைப் பார்த்து ஏங்குவதுமாக வாழ்க்கையும், அதில் உள்ள மனோபாவங்களும் ஏதோ ஒரு விதத்தில் நிறைவு அடையாதவைகளாக இருந்தபடியே நிறைந்தது போல் தோன்றிக் கொண்டிருக்கின்றன. உள்ளே காற்று நிற்கும் இடைவெளிக் குழலாகி வெளியே மட்டும் பருத்துத் தோன்றும் மூங்கிலைப்போல் மனிதனுடைய மனத்தில் இடைவெளியாயிருக்கிற பகுதிகளையெல்லாம் ஏக்கங்கள் நிறைத்துக் கொண்டிருக்கின்றன. ஏதாவது சில ஏக்கங்கள் தீர்ந்தால் எப்பொழுது எதற்காகத் தோன்றியவை என்றே தெரியாமல் வேறு சில ஏக்கங்கள் அந்த இடங்களில் வந்து நிரம்பிக் கொள்கின்றன.

'சுகத்துக்குக்கூட ஆசைப்படாமல் இருப்பதுதான் பெரிய சுகம்' என்று ஒரு தத்துவம் உண்டு. தத்துவங்களைத் தேடிச் சராசரி மனிதன் திருப்தி அடைய முடியாது. சராசரி மனிதனுடைய வாழ்க்கை இலட்சியம் தன்னளவில் துன்பங்களைத் தவிர்ப்பதும் சுகங்களைத் தேடுவதும்தான். சராசரி மனிதன் அதிகபட்சமாகச் செய்ய முடிந்த பொதுநலச் செயல் தன்னைத் தவிர இன்னொரு மனிதனுக்குத் துன்பம் வரும்போது சிறிது அநுதாபம் கொள்வதுதான். தானும் ஒரு மனிதன் என்பதை நிரூபித்துக் கொள்வதற்காக அவன் இதற்குமேல் எதுவும் செய்ய முடியாது. ஆனால் இந்த அளவில் தானும் தன் மனிதத் தன்மையும் மறந்து போய் விடாமலாவது வாழ்வதற்கு முடியும்.

தொழில் முறையில் மாறி மாறி ஏக்கங்கள் அமைந்திருப்பதைப் பற்றிச் சொன்னேன். சராசரி மனிதனுக்கு முக்கியமான தொழில், வம்புகள் இல்லாமல் கூடிய வரை சௌகரியமாக வாழ்வதுதான். சௌகரியமாக வாழ்கிறவர்களுக்கும், ஏதோ சில காரணங்களால் அப்படி வாழ முடியாதவர்களுக்கும், நடுவில் உள்ள வாழ்க்கைப் போட்டிதான் உலகெங்கும் வியாபித்துள்ள பெரிய கட்சிகளின் அடிப்



படை உணர்ச்சி. சௌகரியமாக இருப்பதாக மற்றவர்களால் நினைக்கப்படுகிறவர்களுக்கும் சில அசௌகரியங்கள் இருக்கும். ஏனென்றால் உலக வாழ்க்கையில் முடிவான சௌகரியங்கள் எவை என்பது இந்த விநாடி வரை கணிக்கப் படவில்லை. என்னென்ன சௌகரியங்களைப் பெற்றால் தான் திருப்தி அடைய முடியுமோ

அவற்றைப் பெருமளவே அந்தத் திருப்திகளை அடைந்துவிட முயல்கிறவன் தீரன். அவன் எந்தத் தொழிலைச் செய்துகொண்டிருந்தாலும் அதில் சுகமும், நிறைவும் காண முடியும். அவன் செய்து நுகர்கிற தொழில் 'துன்பப்படுதல்' என்ற ஒன்ருக இருந்தாலும் அதை அவனுல் பொறுத்து நிற்க முடியும்.

திட்டமான வாழ்க்கை

தன்னுடைய வருவாய்க்கு மீறிய செலவும், செலவுசெய்து காக்க முடியாத குடும்பமுமாக வாழ்கிற நகரவாசியின் வாழ்க்கையில் திட்டப்படி நடப்பது என்பது முடியாத காரியம். அவனுடைய வாழ்க்கை ஆற்றில் விழுந்த துரும்பைப் போல இழுபடுவது.



''விஷமம் செய்யாமல் நான் பூராவும் இருந்தால் நீ கேட்டதைத் தருகிறேன் என்றேன். என்ன கேட்கப் போறே?''
''நாளை பூராவும் நான் விஷமம் பண்ண அனுமதி கேட்கிறேன்!''

மனித உடம்பில் இது மோதிரம் அணிகிற இடம், இது பூ வைத்துக் கொள்ளுகிற இடம், இது காப்புப் போட்டுக் கொள்கிற இடம் என்று அணிபவற்றுக்கும், அணிவதற்கு ஏற்பவும் பகுதிகள் இருப்பது போல் கொள்கைகளைப் பூணுவதற்கு இதயம் இடமாக இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் அங்கேயும் எந்த அணிகளை அணிந்தாவது அலங்காரம் செய்தாக வேண்டும்.

'கழற்ருமல் பூணுவது' என்ற பொருள் நயம் கிடைக்கும்படி கொள்கைக்குப் 'பூட்கை' (பூணுவது) என்று பழைய தமிழில் பெயர் வைத்திருக்கிருர்கள்.

'பூக்கை இல்லோன் யாக்கை போல'—

என்று புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வருகிறது. இந்தப் பாடலில் வருகிற 'பூட்கை' என்ற பதத்துக்கு மட்டும் எல்லையற்ற பொருள் உண்டு. அந்தப் பதத்தைச் சரியான படி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டுமென்ருல் settled principles எனச் சொல்ல வேண்டும். உடம்பு இளமையாகவும், வலிமையாகவும் இருப்பது அந்த உடம்பை ஆள்கிறவன் வகுத்துக் கொண்டிருக்கிற திட்டமான கொள்கைகளைப் பொறுத்தது. முகமும், கண்களும், மூக்கும், உதடுகளும், பிறப்பிலேயே அழகாக வாய்ப்பது போல் கொள்கைகள் நன்ருகவும், திட்டமாகவும் வாய்ப்பது மனத்துக்கும் உடம்புக்கும் அழகு. 'நாம் திட்டமாக நமக்கென்று வகுத்துக் 'கொண்ட ஒழுங்குகளுடன் கட்டுப்பட்டு வாழ்கிறோம்' என்று நினைப்பதற்கே பெருமையாக இருக்கிறதல்லவா?

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும், திட்டப்படி வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையில் எந்த இடத்திலாவது எந்த வேளையிலாவது திட்டம் மாறினுல் அந்த மாறுதலுக்கு ஆளானவனுடைய மனம் ஏதோ பெரிய பிழைசெய்து விட்டாற் போல எண்ணி எண்ணித் தவிப்பது உண்டு. இந்தத் தவிப்பை உண்டாக்குவதும் மனச்சாட்சிதான். திட்டமிட்டுக் கொண்ட வழிகளிலிருந்து தவறும் போது இப்படி இடித்துரைக்கிற மனச்சாட்சிப் பண்பு எதுவோ அதை நமக்குள்ளேயே ஒவ்வொரு நாளும் நன்ருக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆக்க நினைவுகள்

சிலருக்கு எந்தப் பிரச்னைகளைப் பற்றிச் சிந்தித்தாலும் இருண்ட முடிவுகளே தோன்றும். தெளிவற்ற பல முடிவுகளை அடைகிற சிந்தனையை விடத் தெளிவோடு கூடிய ஒரே முடிவை அடைகிற சிந்தனை உயர்ந்ததாகும்.

மனமும் நினைவுகளும் இருளடைந்து போய் விடாமல் காத்துக் கொள்வதற்கு முயலவேண்டும். எப்போதும் ஆக்க பூர்வமான சிந்தனைகளைச் சிந்திப்பதற்குப் பழகிக் கொண்டால் மனம் மலர்ச்சியடைந்த நிலையிலேயே இருப்பதைக் காப்பாற்றிக் கொள்ளலாம். சிறியதைப் பெரிதாக்கி, இல்லாததை இருப்பதாக எண்ணி நாமாகக் கற்பித்துக் கொண்டு வேதனைப்படுகிற கற்பனைத் துன்பங்களை நினைவுக்குள் நுழைய விடாமல் தவிர்க்க வேண்டும். சோர்வு காரணமாகவும், தாழ்வு மனப்பான்மையின் காரணமாகவும் பிறர் நம் முன் பேசுகிற சொற்களை மாறுபட உணர்வதன் மூலமாகவும் பொய்த் துன்பங்களாக மனத்தில் ஏற்படுகிற பிரமைகளைத் தடுக்க வேண்டும்.

சிந்தனையில் இருளடைந்த எண்ணங்கள் புகுவதன் காரணமாக மனம் அடிமைப்பட்டுப் போகும். இப்படிக் குருட்டு எண்ணங்களுக்கு அடிமைப்படும்படி மனத்தைச்சோர்ந்த வேளைகளில் கூடப் பழக்கப்படுத்தலாகாது. செல்வம் காரணமாகவும், செல்வாக்குக் காரணமாகவுமே ஆக்கம் பெறுவதாக நினைத்து மன நலத்தைப் புறக்கணிக்கக் கூடாது.

'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்று திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிருர். நல்ல மனமும், பொய்க் கலப்பில்லாத எண்ணங்களும் இருந்தால் வாழ்நாள் பெருகும் என்று நம்பலாம். பெரிய ஞானிகள் 'தியானம்' செய்வதை இரண்டு வகையாகப் பிரித்திருக்கிருர்கள். 'சுக்லத் தியானம்' 'கிருஷ்ணத் தியானம்' என்ற இரு வகைகளில் சுக்லத் தியானம் ஒளிமயமாகச் சிந்திக்கப் பழகுவது. 'கிருஷ்ணத் தியானம்' இருள் மயமாகச் சிந்திக்கப் பழகுவது. இருள் மயமாகச் சிந்திக்கும் சோர்வு மனப்பான்மை



ஓட்டுபவர் கற்றுக்குட்டி என்பதைப் பிறருக்கு அறிவிக்க L போர்டு மாட்டி வருகிறார்கள்....



அதை ஓட்டுபவருக்கும் அறிவிக்க முன் னாலும் ஒரு L போர்டை மாட்ட வேண்டியது அவசியமல்லவா?

வந்து விட்டால் ஞானியும் பாமரனுகி விடு வான். அவனுக்கு மன நலமும் அதனுல் வருகிற ஆக்கமும் இல்லே. வாழ்க்கையில் நாம் பெற வேண்டிய வளங்களில் சிறந்தவை திட்ட மிட்ட ஒழுங்குகளும், ஆக்கமயமான சிந்தனே களும்தான். இந்த இரண்டுமே மனிதனுடைய மனத்தை நிறைவாக வைத்துக் கொண்டிருப் பவை என்பதை உணர வேண்டும்.


சமுதாய நம்பிக்கை

மனிதர்களின் தனித்தனி ஆசைகளாலும், தனித் தனி நம்பிக்கைகளாலும் விளேகிற பயன்கள் அந்த மனிதனுக்கும் அவன் குடும் பத்துக்குமே சேரும். ஆனுல் இத்தகைய நம்பிக்கைகளால் மொத்தமான சமுதாயப் பயன் எதுவும் ஏற்பட முடியாது. ஒரு நகரமோ, நாடோ, மக்கள் இனமோ முன் னேறுவதற்கு ஒன்றுபட்ட சமுதாய நம்பிக்கை வேண்டும். ஒவ்வொரு மனிதனுடைய திட்ட மிட்ட வாழ்விலும், திட்டமிட்ட சிந்தனேகளி லும் ஒரு பகுதி பொதுவான சமுதாய நம் பிக்கைக்குப் பயன்பட வேண்டியது அவசியம். ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கை நன்ருக இருப்பதற்கு எளிமையான சிந்தனேகளும், கட்டுப்பாடுகளும் எவ்வளவுக்கு வேண்டுமோ அவ்வளவுக்குப் பொது வாழ்வு நன்ருக இருப் பதற்குப் பல தனி மனிதர்களின் சமுதாய நம்பிக்கை வேண்டும். 'நான் வளமாக வாழ வேண்டும்' என்று மட்டும் ஆசைப்படுவது என்னுடைய சொந்த வாழ்க்கை நம்பிக்கை. 'எல்லாரும் வளமாக வாழ வேண்டும்' என்று என்னேயும் அதில் சேர்த்துக் கொண்டு பொது வாக ஆசைப்படுவது சமுதாய நம்பிக்கை. இந்த நூற்றுண்டில் சராசரி மனிதனுடைய திருப்தி இந்த இரண்டு நம்பிக்கைகளேயும் பொறுத்ததாகவே இருக்கிறது. சமுதாய நம்பிக்கை சிறிதுமே இல்லாதவனுடைய சுகம் பல பேர்களுடைய தாக்குதலுக்கு ஆளா கிறது. அந்தச் சுகத்தைப் 'பூர்ஷுவா மனப் பான்மை' என்று சொல்லி இகழவும் முடியும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளேயும் கடந்து சமுதாய நம்பிக்கையை மிகவும் ஆழமாக வேரூன்றச் செய்ய வேண்டும்.

ஒரு நாட்டின் வாழ்க்கை வளமாயிருக்க வேண்டும் என்பதோடு அந்த வளம் எந்த விதத்திலும் தேசிய நலத்துக்குப் புறம்பான தாக இருக்கக் கூடாது. தேசிய நலனேயும் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றி வளர்ப்ப தற்கு அடிப்படையான தூண்டுதல் ஒவ்வொரு தனி மனிதனுடைய மனத்திலும் சமுதாய நம்பிக்கையும் சேர்ந்து வளர்வதுதான்.

மனம் நிறையாமை, சௌகரியங்களே மாறி மாறி எண்ணி ஏங்குதல்,—போன்ற சமுதாயக் குறைகளே மறந்து ஆக்கப் பணிகளில் ஈடு பட்டு நாட்டை வளர்ப்பதற்குச் சமுதாய நம்பிக்கையைப் பெருக்கி வளர்க்க வேண் டும். தேசிய ஒருமைப்பாடு, மொழிவாரிப் பிரிவுகளேக் கடந்து நிற்கும் மனிதாபிமா னத்தை உருவாக்கவும் சமுதாய நம்பிக்கை நிறைந்தால்தான் முடியும். இன்றைய நிலேயில் இந்த நாட்டுக்கு நாம் செய்ய முடிந்த பெரும் பணி சமுதாய நம்பிக்கை உள்ளவர்களாக வாழ்வதும் வாழப் பழக்கிக் கொள்வதும்தான்.

குரு தட்சிணை



"ஓய் ஓதுவார்! உங்களை யார் இன்னிக்கு வந்து பாடச் சொன்னது? நேற்றோடு உங்க கணக்கைத் தீர்த்து இந்தத் தேவஸ்தானத்திலேயிருந்து உங்களை விலக்கியாச்சே! நிறுத்தும் உம்ம பாட்டை....!"

பேஷ்கார் பெரியண்ணப் பிள்ளையின் குரல் ஆலயமெங்கும் எதிரொலித்தது. அதிர் வேட்டுப் போல் எழும்பிய பேஷ்காரின் மிரட்டலைச் சிறிதும் எதிர்பாராத முருக ஓதுவார் ஒரு கணம் திகைத்துப் போனார். சுதிப் பெட்டியோடு அளவளாவிக் கொண்டிருந்த அவரது கை, புதிதாகப் புக்ககம் வந்த பெண் புருஷனோடு சல்லாபித்துக் கொண்டிருக்கையில் மாமியாரின் அதிகாரக் குரலைக் கேட்டதும் விரைந்து விலகிப் போவது போல் ஒருபுறம் ஒதுங்கி விட்டது. நாத வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த இறைவன் சந்நிதியில் இப்போது நிசப்தம் குடிகொண்டது. முருக ஓதுவாரின் நெற்றியில் அரும்பிய வியர்வைத்துளிகள் ஒவ்வொன்றாகக் கீழிறங்கி மூப்பட்டையாக அணிந்திருந்த திருநீற்றை ஈரமாக்கின. அவருடைய முகம் இலேசான புன்னகையால் மலர்ந்ததென்றாலும், தரிசனத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்த ஜனங்கள் எதிரில் தமக்கு ஏற்பட்ட அவமான உணர்ச்சியும் அப்புன்னகையில் இழையோடியது. தம்மைச் சமாளித்துக் கொண்ட முருக ஓதுவார், "உங்க சம்பளத்தை எதிர்பார்த்து நான் இன்னிக்குப் பாட வரலிங்க!" என்று முகத்தில் அடித்த மாதிரி பதில் சொன்னது பெரியண்ணப் பிள்ளையை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

"ஏது ரொம்பக் கொழுப்பு ஏறிப் போச்சு ஓதுவாரய்யாவுக்கு! மருடேசுவரர் தேவஸ்தானத்துச் சோறு அல்லவா உம்ம வாயை இப்படி வளர்த்து வைச்சிருக்கு!"

இதைக் கேட்ட முருக ஓதுவாருக்குக் கோபமும், துக்கமும் கலந்து பொங்கின. என்றாலும் சூழ்நிலையை உத்தேசித்து அவர் அடக்கிக் கொண்டார்.

"ஒவ்வொரு மாசமும் உங்களிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கினது ஒரு மரியாதைக்காகப் பார்க்கிறேனுங்க! இல்லேன்னா இதை உங்களுக்குப் பதிலாகத் திருப்பிச் சொல்ல முடியுங்க! எனக்கு இந்த மருடேசுவரரைத் தவிர்த்து வேறே நாதியிடையாது. நான் ஒற்றைக் கட்டை. அப்பர் சுவாமிகள் சொன்ன மாதிரி 'நாமார்க்கும் குடியல்லோம்......' என்று இனம் பாடறவன் நான். கோயில் சந்நிதி எல்லாருக்கும் பொது. ஆண்டவன் முன்னாலே உட்கார்ந்து பாடக் கூடாதுன்னு நீங்க சொன்னா. நான் ஒன்னும் போராடப் போகிறதில்லே."

பெரியண்ணப் பிள்ளைக்கு வாய் அடைத்துவிட்டது. கற்சிலை போல் அசைவற்று நின்றுவிட்டார். முருக ஓதுவாரின் கை மறுபடியும் சுதிப் பெட்டியை இயக்க ஆரம்பித்தது. அப்போதுதான் அர்ச்சகர் அர்ச்சனையை முடித்து மருடேசுவரருக்குத் தீபாராதனை காட்டிக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியில் ஒன்றிப்போன ஓதுவார் உணர்ச்சியால் உந்தப்பட்டு, "மற்றுப் பற்றெனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்" என்று






வித்வான்
வி. துரைசாமி

தொடங்கும் பஞ்சாட்சரப் பதிகத்தைப் பாட ஆரம்பித்தார். சுந்தரமூர்த்தி நாயனார் அந்த க்ஷேத்திரத்துக்கு வந்தபோது பாடிய பதிகம் அது. இரண்டு கண்களிலும் தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது. சுமார் பதினைந்து நிமிஷங்கள் இசை அமுதத்தைப் பொழிந்த முருக ஓதுவார் சட்டென்று, ''ஆறிரு தடந்தோள் வாழ்க... அறுமுகம் வாழ்க.....'' என்று வழக்கம்போல் முத்தாய்ப்பு வைத்துப் பாடி முடித்தார்.

''எம்பெருமானே! உன் சந்நிதியில் உட்கார்ந்து பாடும் பாக்கியம் எனக்கு இத்தனை நாள் இருந்தது. இனிமேல் என் மனக் கண்ணில் உன் சந்நிதியை அமைத்துக் கொண்டுதான் பாட வேண்டும். ஆமாம்! நீ இருப்பது இந்தக் கோயிலில் மட்டும் தானா! வருகிறேன், என் அப்பனே!'' என்று ஓதுவாரின் வாய் முணுமுணுத்தது. சுதிப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு பேஷ்கார் உட்கார்ந்து கொண்டிருக்கும் அறைக்கருகில் சென்று, ''நான் போயிட்டு வரேன், ஐயா! வணக்கம்'' என்று சொல்லி விட்டு வேகமாக வெளியில் வந்து விட்டார். பெரியண்ணைப் பிள்ளை ஓதுவார் உருவம் மறையும் வரையிலும் முறைத்தபடி பார்த்துக் கொண்டே யிருந்து பிறகு கையில் வைத்திருந்த பொடியை மூக்கில் உறிஞ்சி விட்டுக் கையை ஓர் உதறு உதறினார்.

ஃ ஃ ஃ

திருப்பாண்டிக் கொடுமுடி மகுடேசுவரர் கோயிலில் சாயங்கால பூஜை முடிந்து மேள வாத்தியமும் மணியோசையும் நிற்பதற்கும், முருக ஓதுவார் சந்நிதிக்கெதிரே நந்தியெம் பெருமானுக்கு எதிரில் சற்று ஒதுக்குப்புறமாகச் சுதிப் பெட்டியுடன் உட்கார்ந்து 'திருச்சிற்றம் பலம்' என்று தொடங்கித் தேவார இன்னிசை ஆரம்பிப்பதற்கும் சரியாயிருக்கும். ஓதுவாருக்கு வயசு இருபத்தைந்து இருக்கலாம். நிறம் நல்ல சிவப்பு. தலையில் கிராப்பும் இல்லாமல் குடுமியும் இல்லாமல் இரண்டும் கெட்டானகக் கழுத்துவரை நீண்டு சுருள் சுருளாக அமைந்திருந்தது கேசம் நெற்றியிலும்



உடம்பிலும். எப்போதும் திருநீற்றுப் பட்டை இருந்து கொண்டிருக்கும். ''காவிரி யலங்கரம் தாவி வருகொடுமுடி'' என்று ஒரு கவிஞர் பாடியது போல் காவிரித் தாய் கொடுமுடியைத் தழுவிக் கொண்டு ஓடுகிறாள். ஸ்ரீ மகுடேசுவரர் சந்நிதியை வணங்கி விட்டுச் செல்லும் ஒரு தெய்வப் பெண் போல் ஆலயத்தின் எதிரே அவள் குமிழியிட்டுப் பாய்ந்து வந்து அங்கிருந்து பின் திசை மாறிக் கம்பீரமாக நடப்பதை இன்றைக்கும் பார்க்கலாம். கோயிலுக்கெதிரில் மிக விசாலமான படித்துறை இருக்கிறது. முருக ஓதுவார் வெளியூர் போயிருந்தாலோ அல்லது உடல் நலம் இல்லாதிருந்தாலோ அந்தப் படித்துறையும் களையற்றுப் போய் விடும். விடியற்காலை ஐந்து மணிக்கும், சாயங்காலம் ஐந்து மணிக்கும் அங்கே யாரைப் பார்க்க முடியாவிட்டாலும் முருக ஓதுவாரைக் கட்டாயம் பார்க்கலாம். இரண்டு வேளைகளிலும் நீராடாமல் அவர் சந்நிதியில் தேவாரப் பாராயணம் செய்ய மாட்டார்; அவருடைய கவர்ச்சியான தோற்றம் பலரை வசீகரித்தது. போதாததற்கு அற்புதமான சாரீரமும் இசை ஞானமும் சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்!

முருக ஓதுவார் கொடுமுடிக்கு வந்து ஆறு மாதங்கள் ஓடி விட்டன. அவர் அவ்வூருக்கு வந்ததே பேஷ்கார் பெரியண்ணப் பிள்ளையால் தான். போன வைகாசி மாதம் திருவாபிஷேகக் காப் பஞ்சப் பிரகாரத்துக்கு முருக ஓதுவார் தேவார கோஷ்டியோடு வந்திருந்தார். அதே சமயம் தூரத்து உறவினர் குடும்பம் ஒன்றில் ஒரு பெரிய காரியத்துக்காக அவ்வூருக்கு வந்திருந்த பெரியண்ணப்பிள்ளை பஞ்சப் பிரகார ஊர்வலத்தில் கலந்து கொண்டார். அவருக்குத் தேவார இசை என்றால் மிகவும் பிடிக்கும். கொஞ்ச காலமாகவே கொடுமுடி தேவஸ்தானத்துக்கு நிரந்தரமாக ஓதுவார் ஒருவரை நியமித்துவிட வேண்டும் என்ற ஆசையில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வந்தார். அன்றைய தினம் முருக ஓதுவாரின் இன்னிசையைக் கேட்டுச் சொக்கிப் போனார். மறு தினம் முதல் வேலையாக ஓதுவார் தங்கியிருக்கும் இடத்துக்குப் போய் அவரிடம் தம் ஆசையைத் தெரிவித்தார். அவருக்கும் இது போல் ஒரு நிலையான உத்தியோகம் கிடைப்பதில் மகிழ்ச்சிதான். ஏனென்றால் கவலை இல்லாமல் இத்தனை காலம் இசை உலகிலே காலம் கழித்தவர். போன வருஷம் அவர் ஊராகிய வேதாரண்யத்தில் அடித்த புயலில் அவர் வீடு அழிந்தது. தாயும் தகப்பனாரும் கடல் வெள்ளத்துக்குப் பலியானார்கள். ஏதோ முருக ஓதுவாருக்குக் கடவுள் கொஞ்சம் கருணை காட்டினார். அவர் வாயால் இன்னும் கொஞ்ச காலத்துக்குத் தன் பெருமையை இன்னிசையோடு பாடக் கேட்போம் என்பதுதான் ஆண்டவனின் எண்ணமாக இருந்திருக்க வேண்டும். அதனால் புயல் வீசிய தினத்தில் ஓதுவார் வெளியூருக்குத் தொழில் சம்பந்தமாகப் போயிருந்தார். அன்று மட்டும் அவர் போகாமல் இருந்திருந்தால் இப்படிப் பெரியண்ணப் பிள்ளையிடம் அவமானப்பட்டிருக்க முடியுமா?

குடும்பமே நாசமான அதிர்ச்சியில் சில நாட்கள் மூளை கலங்கிக் கிடந்தார் முருக ஓதுவார். அவருடைய தூர உறவினர் ஒருவர் ஓதுவாரைத் தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொஞ்சம் தேறியபின் தஞ்சையில் தம் வீட்டிலேயே வைத்திருந்தார். எங்கேயாவது கோஷ்டியோடு போனால் தமக்குக் கிடைக்கும் சொற்பப் பணத்தை அப்படியே கொண்டு வந்து வீட்டில் கொடுத்து விடுவார். அப்படிப்பட்ட நிலைமையில் பெரியண்ணப் பிள்ளை அழைத்தது முருக ஓதுவாருக்கு ஆனந்தத்தைத் தந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அதே பெரியண்ணப் பிள்ளைதான் இன்று அவரை வேலையிலிருந்து நீக்கினார்.

ஆசையோடு அழைத்துக் கொண்டு வந்து வாழ்வளித்த பெரியண்ணப் பிள்ளைக்கு ஆறே மாசத்தில் முருக ஓதுவாரை வேலையை விட்டுத் துரத்தும் அளவுக்குக் குரோதம் பொங்கக் காரணம் என்ன? தான் பயிராக்கி வளர்த்த மாமரம் தனக்குப் பலன் தராமல் ஊராருக்கு நிறையப் பலன் தந்தால் வளர்த்தவன் வயிறு பற்றி எரியாதா?

ஃ ஃ ஃ

விஷயம் சாதாரணமானதுதான். முருக ஓதுவாரின் இன்னிசையைக் கேட்ட கொடுமுடி ஜனங்கள் — அதிலும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் வீட்டில் வந்து குழந்தைகளுக்குத் தேவார இசையைக் கற்றுத் தரச் சொல்லி வேண்டினர். கேட்ட பணத்தைத் தருவதாகச் சொன்னார். ஆனால் ஓதுவார் எவர் வீட்டுக்கும் போய்த் தேவாரம் சொல்லித் தர முடியாதென்று மறுத்து விட்டார். தாம் தங்கியிருந்த திருமடத்திலேயே தேவார வகுப்பு ஒன்றை நிறுவினார். எல்லாக் குழந்தைகளும் அங்கு வந்து வகுப்பு மூலம் இசை கற்றுக் கொண்டார்கள். வீட்டில் வந்து சொல்லித் தர மறுத்து விட்டாரே என்ற ஆத்திரம் சில பேருக்கு இருந்தாலும் நாளடைவில் அது மறைந்து விட்டது.

இயற்கையாகவே இசைப்பிரியரான பெரியண்ணப் பிள்ளையின் ஒரே மகள் செல்லாயிக்கு அபூர்வமான சாரீரம் அமைந்திருந்தது. அழகு சுமார்தான். ஆனால் கேள்வி ஞானத்திலேயே அவள் அடைந்திருந்த சங்கீத ஞானம் ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தது. செல்லாயியின் தாயாருக்குத் தன் மகள் சினிமாவில் பின்னணிப் பாடகியாகிப் புகழும் பணமும் சம்பாதிக்க வேண்டும்—முடிந்தால் பிரபல சினிமா நட்சத்திரமாகி விட வேண்டும் என்று ஆசை. பெரியண்ணப் பிள்ளைக்கு அந்தப் பேச்சு எடுத்தாலே பிரமாதமாகக் கோபம் வந்து விடும்.

''ஓம் பொண்ணைச் சுத்தி நாலு பசங்க எப்பவும் பல்லை இளிச்சுக்கிட்டே இருக்கணும்னு நீ எதிர்பார்க்கிறியா?'' என்று மனைவியிடம் ஒரு சீறு சீறுவார்.

இந்த மாதிரி சமயத்தில்தான் முருக ஓதுவார் கொடுமுடிக்கு வந்து சேர்ந்தார். வந்த புதிதில் ஓதுவார் பெரியண்ணப் பிள்ளையின் வீட்டில் சில தினங்கள் சாப்பிட்டார். பிறகு ஹோட்டலில் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டு மடத்தில் தங்கினார். எனவே செல்லாயிக்கு ஓதுவாரின் இசையமுதத்தை அனுபவிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அன்றிலிருந்து அவள் அவரிடம் தேவாரப் பண்ணிசை கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்



சேலம் ஜங்ஷன் V. R. R. ஷேர்செக்டதார் ஸ்ரீ T. S. ராமச்சந்திர அய்யர் அவர்களின் ஷஷ்டி அப்த பூர்த்தி 25-4-62 அன்று பரணி 'தனுரில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்வைபவத்தை யொட்டி கோலா கலா மண்டலத்தாரின் கதக்களி நிகழ்ச்சியும் நடைபெற்றது.



பிரம்மோபதேசம்

திருவாரூர் மர வியாபாரி வி. ஆர். அண்டு சன்ஸ் உரிமையாளர் ஸ்ரீ ஆர். வேணு கோபாலய்யர் அவர்களின் சகோதரர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமய்யர் அவர்களின் குமாரன் செஞ்சிவி லக்ஷ்மிநாராயண னுக்குப் பிரம்மோபதேசம் வைகாசி 4-ம் தேதி வெகு சிறப்பாக நடந்தேறியது.

டான். ஒரே தடவைதான் செல்லாயி வீட்டில் பாடினுர். மிக உன்னிப்பாகக் கவனித்து வந்த செல்லாயி, அவ்வொரு தடவையிலே, 'மற்றுப் பற்றெனக்கு' என்ற பாட்டை அப்படியே மனத்தில் பதித்துக்கொண்டு தகப்பனுரிடம் பாடிக் காட்டினுள். ஓதுவார் அதைப் பாடும் போது என்னென்ன குழைவுநெளிவுகளைக் காட்டினுரோ அவை யெல்லாம் அப்படியே செல்லாயி மூலம் வெளிப்பட்டன. அன்றைக்கே பெரியண்ணப் பிள்ளை தம் மகளுக்குத் தேவார இசைப் பயிற்சி செய்து வைத்து விடுவதென்று தீர்மானித்து விட்டார். பின்னுல் ஓதுவாரிடம் தம் கருத்தைச் சொல்லி, வீட்டில் வந்து தினம் சொல்லித் தரும்படி கேட்ட போது, அவர் சொன்ன பதில் பிள்ளையைத் திடுக்கிட வைத்தது.

"எல்லோருக்கும் சொன்ன பதில்தானு எனக்கும் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் பெரியண்ணப் பிள்ளை.

"மன்னிக்க வேண்டும். வீட்டுக்கு வந்து சொல்லிக் கொடுப்பதில் எத்தனேயோ கஷ்டங்கள் இருக்குங்க. உங்களுக்குத் தெரியாதில்லே. உங்கள் நன்றியை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். ஆனுலும் இந்த ஒரு விஷயத்திலே உங்க ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாமல் தவிக்கிறேனுங்க. ஒரு பொது இடத்துலே தேவார வகுப்பு ஆரம்பிச்சிருக்கேன். அதில் எல்லாப் பிள்ளைகளோட நம்ப பொண்ணும் கலந்து படிக்கட்டுங்க."


"உம்மகிட்டே யோசனே கேட்க வல்லேய்யா! கத்தி வளேக்க ஏன் பேசறீர், முடியாதுன்னு ஒரு வார்த்தையிலே சொல்லுமே!"

"நான் என்ன சொல்றதுங்க. உங்களுக்கு உலகம் நல்லாத் தெரியும். நீங்களே இப்படி வற்புறுத்தினுல் என்ன செய்யறதுங்க?"

"நான் ஒண்ணும் முன் யோசனே இல்லாமல் உம்மை அழைக்கல்லே. எங்க பொண்ணுடைய குணம் எங்களுக்குத் தெரியும். உலகத்தைப் பற்றி நான் கவலேப்படறவன் இல்லே... ஹாம், சரி. நான் என் பொண்ணே உம்ம வகுப்புக்கு அனுப்பத் தயாராக இல்லே. வீட்டுக்கு வந்து சொல்லித் தர முடிந்தால் செய்யும். இல்லேயானுல் வேண்டாம்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார் பெரியண்ணப் பிள்ளை. அன்றையிலிருந்து ஓதுவாருக்கும் பெரியண்ணப் பிள்ளைக்கும் இடையிலிருந்த சுமுக உறவு போய் விட்டது. மாசா மாசம் சம்பளம் கொடுக்கிற தேதியில் பியூன் வந்து ஓதுவாரை அழைப்பான். அவர் பேஷ்கார் அறைக்குச் சென்று கையெழுத்திடுவார். பெரியண்ணப் பிள்ளை பணத்தை எண்ணி வைப்பார். ஓதுவார் அதை எண்ணிக் கூடப் பார்க்காமல் அப்படியே எடுத்துக் கொண்டு வந்து விடுவார்.

ஃ ஃ ஃ

இப்படியே ஆறு மாதங்கள் ஓடி விட்டன. நாட்கள் வளர வளரப் பெரியண்ணப் பிள்ளையின் குரோதமும் கூட வளர்ந்தது. ஆகையால் திட்டமிட்டபடி ஓதுவார் மீது பல புகார்களைக் கிளப்பி விட்டுத் தம் கையாட்கள் மூலம் 'பெட்டிஷன்' அனுப்பச் செய்து தேவஸ்தான நிர்வாகக் கமிட்டியிடமிருந்து உத்தரவு பெற்று முருக ஓதுவாரை விலக்கும் வரையிலும் பிள்ளையவர்கள் சரியாகத் தூங்கவே



இல்லே. ஆனுல் இந்த இரண்டு பேரின் எண்ணத்துக்கும் வேருக ஒரு சக்தி வேலே செய்து கொண்டிருந்ததை யாருமே தெரிந்து கொள்ள முடியவில்லே.

கொடுமுடி தேவஸ்தானத்துப் பேஷ்கார் உத்தியோகத்தைச் சுமார் இருபத்தைந்து வருஷங்களாக ஏகபோகமாக அனுபவித்து வந்தவர் பெரியண்ணப் பிள்ளை. யாருமே எதிர்பார்க்காதபடி அந்த வேலேக்கு இப்போது ஆபத்து வந்து விட்டது. முருக ஓதுவாரைத் தேவஸ்தானத்திலிருந்து விலக்கிய பத்தாவது நாள் அறநிலேய டிப்டி கமிஷனர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது

பிள்ளை அவர்களுக்கு. அதில் ஒரு மொட்டை பெட்டிஷனோடு, ''இதில் கண்டிருக்கும் குற்றச் சாட்டுக்களின்படி உங்களை ஏன் வேலையிலிருந்து நீக்கக் கூடாது என்பதற்குத் தக்க சமாதானத்தை இந்தக் கடிதம் கிடைத்த ஒரு வாரத்துக்குள் தெரிவிக்க வேண்டும்'' என்ற கமிஷனரின் குறிப்பும் அடங்கியிருந்தது. 'இது சந்தேகமே இல்லாமல் அந்த ஓதுவார் வேலைதான்' என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

இப்படி இரண்டு மூன்று நாட்கள் வரையிலும் உழன்று கொண்டிருந்த பெரியண்ணைப் பிள்ளைக்கு அன்று ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அவர் வீட்டுக்கு ஓடி வந்த பியூன், ''கமிஷனர் ஐயா வந்திருக்காங்க, உங்களை அழைச்சிக்கிட்டு வரச் சொன்னாங்க'' என்று சொல்லிவிட்டு ஓடினான். இடிந்து போய் உட்கார்ந்த பிள்ளை அவர்கள் சம்சாரத்தின் தேறுதல் வார்த்தைகளால் மனசைத் திடப்படுத்திக் கொண்டு கிளம்பினார். இது வரை கம்பீரமாக உட்கார்ந்து அதிகாரம் செலுத்தின தம் காரியாலயத்துக்குள் இன்று கைதிக் கூண்டுக்குள் நுழையும் குற்றவாளி போலப் பெரியண்ணைப் பிள்ளை நடுக்கத்தோடு நுழைந்த காட்சி பரிதாபமாக இருந்தது. சுமார் அரை மணிக்கு மேலாக அந்த அதிகாரி பெரியண்ணைப் பிள்ளையைப் பல கேள்விகள் கேட்டும், தஸ்தாவேஜுகளைக் 'காண்பிக்கச் சொல்லியும் விசாரணை செய்து கொண்டிருந்த போது, முருக ஓதுவார் தற்செயலாகத் தரிசனத்துக்காகக் கோயிலுக்குள் நுழைந்து கொண்டிருந்ததைக் கமிஷனர் பார்த்து விட்டார். ''டேய், முருகப்பா, இங்கே வா'' என்று கமிஷனர் ஓதுவாரை அழைத்ததைக் கண்டு பெரியண்ணைப் பிள்ளையும் மற்றவர்களும் திடுக்கிட்டுப் போய்விட்டார்கள்.

''அடேடே, நீங்களா, எங்கே இவ்வளவு தூரம்? என்ன வேலையாக வந்தீங்க? சென்னைப் பட்டணத்திலே வக்கீல் வேலை பார்க்கறீங்கன்னு கேள்விப்பட்டேன். இப்பவும்...''

''இப்ப நான் டிப்டி கமிஷனரா இருக்கேன். இந்தக் கோயில்லே ஒரு புகாரை விசாரிக்கிறதுக்காக வந்திருக்கேன்...... ஹூம், நீ இங்கேயா இருக்கே?''

''ஆமாம். இந்தத் தேவஸ்தானத்திலே தினம் பாராயணம் பண்ணி ஏதோ காலம் கழிக்கிறேன்....'' என்று சொல்லும்போது பெரியண்ணைப் பிள்ளையின் உடல் நடுங்கியது. இந்தப் பாவி நம் வேலையைத் தொலைத்து விடுவான் என்று நினைத்தார்.

ஆஸ்திகத்தின் போஷகர் மறைவு

திவான் ஸ்ரீ ஏ. சேஷய்ய சாஸ்திரிகளின் பேரர் கல்யாணசுந்தர சாஸ்திரிகள் தமது அறுபத்தி நான்காவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார். இவர் ஸ்ரீ காமகோடி ஆசார்யாளிடம் பரம பக்தி பூண்டவர். வேத தர்ம சாஸ்திர வளர்ச்சிக்காக ஐந்து வேலி நிலத்தைக் கொடுத்துதவியவர். இவர் கும்பகோணத்தில் கௌரவ மாஜிஸ்திரேட்டாகவும், நகரசபை கவுன்சிலராகவும் சேவை செய்தவர். ஆஸ்திக உலகம் ஒரு சிறந்த போஷகரை இழந்துவிட்டது.

''ஓஹோ, அப்படியா! உனக்கு அப்பவே தேவார இசையிலே நல்ல தேர்ச்சி. நானும் உன்னைப் பார்த்துப் பல வருஷங்களாச்சு. உன் குடும்பம் வேதாரணியத்திலே கடலுக்குப் பலியானதுக்கு அப்புறம் நான் உன்னைப் பார்க்கவே முடியல்லே... அப்பப்பா.... எப்படி நீ அந்தக் கஷ்டத்தைச் சமாளித்தேன்னு எனக்கே ஆச்சரியமாயிருக்கு.''

''ஆச்சரியமென்ன! அந்த அதிர்ச்சியிலே மூளை கலங்கி ஆஸ்பத்திரியிலே ஒரு மாசம் கிடந்தேன். தஞ்சாவூரிலே இருக்கிற என் மாமா என்னைக் காப்பாத்தினார்னு சொல்லலாம். அதுக்கு மேலே இதோ இந்தப் பேஷ்கார் பெரியண்ணைப் பிள்ளை எனக்கு வாழ்வு தந்தார். ஏதோ கவலையற்று இங்கே இருந்துக்கிட்டிருக்கேன். இனிமேல் மருதேசுவரரை விட்டு என்னால் பிரிய முடியாதுங்கிற நிலைமைதான் எனக்கு.''

இம்மாதிரி வார்த்தைகள் ஓதுவார் வாயிலிருந்து வரும் என்று பெரியண்ணைப்பிள்ளை நினைக்கவேயில்லை. கனவு காண்கிறோமோ என ஒருகணம் நினைத்தார். ஒரு வேளை இது ஒரு சூது நாடகமாக இருக்குமோ என்றும் தோன்றியது.

''இந்தப் பெரியண்ணைப்பிள்ளையா உனக்கு வாழ்வு தந்தது?'' என்று கேட்டார் அதிகாரி.

''ஆமாம். வெளியூரிலிருந்து என்னை வற்புறுத்தி அழைத்து வந்து இங்கே அமர்த்தினார். ஆனால் ஒரு மாசமாக என் உடம்பு சௌகரியம் இல்லாததனால் தேவஸ்தானத்திலிருந்து விலகியிருக்கிறேன்......'' என்று ஓதுவார் சொல்லிக் கொண்டிருந்தபோது பிள்ளையவர்களின் மனம் புல்லரித்தது.

''இவர் மீது வந்துள்ள புகார்களை விசாரிக்கத்தான் இங்கே திடீரென்று வந்தேன்.''

''என்ன! இவர் மீது புகாரா? எவன் சொன்னது? இந்தத் தேவஸ்தானம் இப்படி நல்ல நிலையிலிருக்கிறது என்றால் இந்தப் பெரியண்ணைப்பிள்ளைதான் காரணம். பொறாமைப் பேய் பிடிச்சவன் எவனோ வேண்டுமென்றே செய்த காரியம் இது.''


''முருகப்பன் சொன்னதுக்கப்புறம் அப்பீல் ஏது! மேலும் இப்போ விசாரிச்ச வரையிலும் கூட இவர் மேலே குற்றம் ஒன்றும் சரியா ருசுவும் ஆகலே. அதோட பெட்டிஷனும் மொட்டைப் பெட்டிஷன்! இதுக்கு ஆக்ஷனே எடுக்க வேண்டியதில்லே! இருந்தாலும் எப்படித்தான் இருக்குன்னு பார்வையிட வந்தேன். வந்ததுலே என் பழைய சிநேகிதனைக் கண்ட மகிழ்ச்சி எனக்கு ரொம்பப் பெரிசு. ஓய், பிள்ளைவாள், முருகப்பன் என் வாலிப சிநேகிதன். அவனை ஓர் உருப்படியாக்கி வைச்சிருக்கிறதுக்கு என் நன்றி. ஹூம், சரி நான் புறப்பட வேணும். முருகப்பா, உனக்கு ஒழிஞ்சபோது என் 'ஹெட்குவார்ட்டர்ஸ்'க்கு வா'' என்று சொல்லி விட்டுச் சிப்பந்தி சகிதமாகக் காரில் புறப்பட்டு விட்டார் கமிஷனர்.

பெரியண்ணைப் பிள்ளை முருக ஓதுவாரின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு சிறு பிள்ளை போலத் தேம்பித் தேம்பி அழுதார். முருக ஓதுவார் அவரைத் தேற்றி விடுவதற்கு ரொம்பப் பாடுபட வேண்டியிருந்தது.

''நிஜமாக உங்கள் மேலே எனக்கு ஒரு கோபமும் இல்லேங்க, ஏன் இப்படி வருத்தப்

கவுரவத்தை கொடுக்கக் கூடிய துணிகள் —





டெட்டினுல் சலவை செய்யப்பட்டதே

- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாகத் தோற்றமளிக்கும்.
  டெட்டின் சிறந்த சுத்திகரிப்புக் கலவை உங்களுடைய ஆடைகளைப் புத்தம்புதியதுபோல் பிரகாசிக்கச்செய்கிறது.
- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாகத் தோற்றமளிக்கும்.
  டெட் ஆடைகளைச் சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் சிறந்த பரிசுத்தகாரி. டெட்டினுல் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தையோ அல்லது வெண்மையாக்கும் பொருளையோ சேர்க்கவேண்டிய தேவையில்லை. காரணம் கண்கவரும் வெண்மையைத்தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.
- டெட்டினுல் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவது என்பது பொருள்.
  வென்னீரிலும், மென்னீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், ஸில்க், ரேயான், கம்பளி வெள்ளை அல்லது கலர்த்துணிகள்—எல்லாவிதமான ஆடைகளுக்கும் டெட்டைத் தாராளமாக உபயோகிக்கலாம்.

டெட் வெண்மையாகவும் பளபளப்புடனும் சலவை செய்கிறது.

Shilpi Sem 21 TAM

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்—1.

படறீங்க? ஏதோ கொஞ்ச நாள் நாம்ப இப்படிச் சித்தெ விலகியிருக்கனும்னு அந்த ஆண்டவனுடைய சங்கல்பம் இருக்கும்போது யாருங்க அதைத் தடுக்க முடியும்?''

''இல்லீங்க ஓதுவார், உண்மையிலே நான் பாவிதான். அநியாயமாக உங்களை விலக்கினேன். அது மட்டுமல்ல, முந்தா நாள்.... ஐயையோ, என்னை மன்னிச்சுடுங்க ஓதுவார்!''

ஓதுவார் முகத்தில் பழைய புன்னகை தோன்றியது. ''புரியுதுங்க பிள்ளே, ஆனால் எப்படிங்க அது நிறைவேறும்; இன்னிக்க நாம்ப மறுபடியும் கூடனும்னு இருக்கும் போது? தவிர நேத்துச் சாயங்காலம் நான் காவேரியிலே குளிச்சிக்கிட்டிருக்கும் போது ரெண்டு மூனுபேர் குசுகுசுன்னு பேசினது காதுலே விழுந்தது. அதுலே ஒரு ஆளு உங்க அருமை மச்சினன் வடிவேலுப் பிள்ளேங்க. அவங்க அரைகுறைப் பேச்சிலேயிருந்து, உங்க மேலே மொட்டைப் பெட்டிஷன் போட்டது அவங்கதான்னு தெரிஞ்சது. இதை ஓங்க கிட்டே நானே நாளைக்கு வந்து தெரிவிச்சு உஷார்ப்படுத்தனும்னு நெனச்சேன்...''

''அப்படிங்களா! ஐயோ, இந்தப் பாவி இந்த நேரம் வரைக்கும் நீங்கதான் அப்படிச் செய்ததுன்னு நெனைச்சேன்! கமிஷனரோட முதல்லே நீங்க பேசும்போதுகூட அப்படித்தான் முடிவு பண்ணினேன். தீமை செய்தவனுக்குக்கூட இப்படி நன்மை செய்யற உங்களை அநியாயமாக் கெடுத்தேனே...'' என்று சொல்லும்போது பெரியண்ணப்பிள்ளையின் குரல் தழுதழுத்தது.

ஃ ஃ ஃ

அன்று இரவு முருக ஓதுவாருக்குப் பெரியண்ணப்பிள்ளை வீட்டில் விருந்து. எட்டு மணி சுமாருக்குப் பின்னே அவர்களும் ஓதுவாரும் கோயிலில் அர்ச்சனை செய்து பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். அன்றைக்குப் பௌர்ணமியாகையால் பூரண சந்திரன் வானத்தில் ஒளி வீசி உலகை இன்ப வாரிதியில் ஆழ்த்திக் கொண்டிருந்தான். வாசற்படியில் வந்த இருவரும் சற்றுத் தயங்கி அப்படியே நின்று விட்டனர். உள்ளேயிருந்து அபூர்வமான தேவாரப் பாடல் ஒன்று அருமையான குழைவு நெளிவுகளுடன் செல்லாயி மூலம் தவழ்ந்து வந்ததுதான். காரணம் இருவரும் சுமார் இருபது நிமிஷங்கள் வாசலில் இருந்ததை உள்ளேயிருந்த செல்லாயியோ அவள் தாயோ கவனிக்க வில்லை. இரண்டு பாடல்கள் பாடி முடித்ததும் பெரியண்ணப் பிள்ளையும் ஓதுவாரும் உள்ளே நுழைந்ததைக் கண்டு செல்லாயி திடுக்கிட்டுப் போனாள்.

''ஒங்க பொண்ணு இந்த அபூர்வப் பாடல்களையும் சங்கதிகளையும் எங்கே படிச்சது? வேறெ யாராவது ஓதுவார் வைச்சுச் சொல்லிக் கொடுத்திங்களா?'' என்று வியப்போடு கேட்டார் ஓதுவார்.

''எனக்கு விஷயம் ஒண்ணும் தெரியாதுங்க! இது ஏதோ புதிராகத்தான் இருக்கு!'' என்று சொல்லி விட்டு மகளைப் பார்த்து, ''ஏம்மா! இதெல்லாம் எங்கே படிச்சே? இந்த வீட்டிலே எனக்கே தெரியாமல் இப்படி ஓர் அற்புதம் நடந்திருக்கே!'' என்று கேட்டார். இதே சம்பவம் நேற்று நடந்திருந்தால் பெரியண்ணப்பிள்ளையின் செயல் வேறுவிதமாக இருந்திருக்கும்! இன்றைக்குக் கோபமில்லாமல் சாதாரண நிலையில்தான் கேட்டார். என்றாலும் செல்லாயி பயத்தால் நடுங்கினாள். திடீரென்று தகப்பனார் காலில் விழுந்து தேம்பினாள். ஓதுவாருக்கும் பெரியண்ணப் பிள்ளைக்கும் ஒன்றுமே புரியவில்லை.

''அப்பா! உங்க உத்தரவு இல்லாமல், இந்தச் சங்கீதம் கத்துக் கிட்டதுக்கு என்னை மன்னிச்சுடுங்க. நான் யார்கிட்டேயும் நேராப் போய்ப் பாட்டுக் கத்துக்கலே. ஆறுமாசத்துக்கு முந்தி நான் தேவாரப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஆசைப் பட்டபோது நீங்க, 'வாத்தியார் நம்ப வூட்டுக்கு வரமாட்டேங்கிறாரு, அதனாலே நீ இந்த ஆசையை விட்டுடு' ன்னு சொன்னீங்க. ஆனால் என்னாலே ஆசையை விட முடியல்லே! என் பள்ளிக்கூடத் தோழி ஒருத்தி இவங்க கிட்டே தேவார வகுப்பிலே படிக்குது. அது மூலமா விஷயம் தெரிஞ்சுது. மடத்துலே இவங்க வகுப்பு நடத்தற நேரத்துக்கு நான் மடத்தை ஒட்டியிருக்கிற நந்தவனத்துக்குப் பூப்பறிக்கிற பாவனையிலே போய்ச் சுவருக்கு அப்பாலேயிருந்து காதாலே இசைம் கேட்டுட்டு யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வந்துடுவேன். என்னிக்காவது போக முடியல்லேன்னு அன்னிக்கு அந்தப் பொண்ணு கிட்டேயிருந்து நடந்த பாடத்தைத் தெரிஞ்சுக்குவேன். இது உங்களுக்கோ அம்மாவுக்கோ தெரிஞ்சா ஆபத்துன்னு நீங்க ரெண்டு பேரும் இல்லாத சமயம் பார்த்துக் கொஞ்சம் சாதகம் பண்ணிக்குவேன். அப்படியிருந்தும் போன வாரம் நான் பாடிக்கிட்டிருந்த போது அம்மா வெளியிலேயிருந்து வந்துட்டாங்க. அதனாலே அம்மாகிட்டே உண்மையைச் சொல்லிட்டேன். என் மேலே ஏதாச்சும் தப்பு இருந்தால் மன்னிச்சுடுங்க அப்பா!'' என்று விம்மினாள்.

இதைக் கேட்ட பெரியண்ணப் பிள்ளையின் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொங்கியது. ''இப்படிப்பட்ட சரஸ்வதி கடாட்சம் உனக்கு எப்படியம்மா கிடைத்தது?'' என்று பரவசத்தோடு சொல்லிக் கொண்டே குழந்தையின் தலையை இலேசாக வருடினார்.

''வாத்தியார் காலிலே விழுந்து கும்பிடு'' என்று உத்தரவிட்டாள் செல்லாயியின் தாய்.

''நான் ஏகலைவன் கதையைப் பெரியவங்க சொல்லக் கேட்டிருக்கிறேன். உங்க செல்லாயி காரியம் அதைவிடப் பிரமாதமாக இருக்கிறதே!'' என்று ஓதுவார் சொல்லும்போது செல்லாயி அவரை வணங்கி எழுந்து அம்மாவுக்குப் பின்னால் ஓடி மறைந்தாள்.

''ஏகலைவன் தன் குருவுக்குக் கட்டை விரலை வெட்டிக் குருதட்சிணை கொடுத்தான், உங்க பொண்ணு.....'' என்று முருக ஓதுவார் இழுப்பதற்குள் பெரியண்ணப்பிள்ளை இடைமறித்து, ''எங்க பொண்ணு அப்படி யெல்லாம் கட்டை விரலையும் காலையும் வெட்டித் தரமாட்டாள். அவள் தன் குருவுக்குத் தட்சிணையாகத் தன்னையே கொடுத்திடறதாகத் தீர்மானிச்சுட்டாள்!'' என்று பரவசத்தோடு சொன்னதும் செல்லாயி ஒரே ஓட்டமாக ஓடிச் சமையலறையை அடைந்தாள். ஏக காலத்தில் மூவருடைய கண்களிலும் நீர்முத்து அரும்பின.



ஹமாம்
ஸ்நானத்திலே
அதிகப்படி
புதுமலர்ச்சியை
அடைகிறேன்
HAMAM
the family soap
தாவர எண்ணெய்களின் விசேஷக்
கலவை ஹமாமைக் கடைசி வரை
யில் உறுதியாகவும் நறுமணத்தோ
டும் இருக்கச் செய்கிறது. ஹமாம்
வில்லை ஒவ்வொன்றும் நெடுநாள்—
உழைக்கிறது என்பது ஞாபகமிருக்
கட்டும்.
டாடா தயாரிப்பு
என் குடும்பத்
தினர் அனைவ
ரும் விரும்பு
வது ஹமாம
அதில் மறை
ந்திருக்கும்
குணம் " என
க்குமிச்சப்படு
த்த உத
வுகிறது
ஹமாமின்
அளவு
கடந்த நுரை
எனக்குப்
பிடித்திருக்கிறது.
இன்ப
நறுமண முள்ள
ஹமாம் என்
சருமத்துக்கு
இதமளிக்கிறது.
THY-20-TAM



அத்தியாயம் 17

இரக்கமா? ஏளனமா?

முன்பு எப்போதோ நடந்த சம்பவங்கள் என்றாலும் வடிவேலுவின் மனத்திலிருந்து அவை எண்ணக் குமிழிகளாக அடுத்தடுத்துக் கோவையாகக் கொப்பளித்து வெளியேறி வெடித்துச் சிதறின. ஆனால் அவையனைத்தையும் பற்றி ஆதியோடந்தமாய் அவன் தாராவிடம் விவரித்துச் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. சுருக்கமாக நடந்தவற்றைக் கூறிவிட்டு அவன் ஒரு புதிரைப் போட்டு அதனை விடுவிக்குமாறு தாராவைக் கேட்டுக் கொண்டான்.

''வெள்ளப் பெருக்கெடுத்து நுங்கும் நுரையுமாகப் பெரிய சுழல்களுடன் பாய்ந்தோடும் ஆற்றிலே சிந்திக்காமல் இறங்கிவிடுகிறான் ஒருவன். நீரோட்டத்தின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அடித்துச் செல்லப்படுகிறான். மூங்கி மூழ்கியே விடுவான் என்று தோன்றுகிற சமயத்தில் கரையில் நிற்கின்ற ஒருவன் அவனைக் காப்பாற்றுகிற நோக்கத்தோடு நதியில் குதிக்கிறான். மூச்சு முட்டித் திணறிக் கொண்டிருக்கும் முதல்வனை எப்படியோ கட்டிப் பிடித்து நீந்திய படியே இழுத்து வந்து பத்திரமாகக் கரை சேர்த்து நிலத்தில் உருட்டி விடுகிறான்.

''அதே சமயத்தில் அவன் கால் வழுக்கி விடுகிறது. களைத்துச் சளைத்துப் போன அவன் தடுமாறி விழுகிறான். வலுவிழந்து சக்தி குறைந்து இருக்கும் அவனை ஆறு பழி வாங்குகிறது. உயிரைக் காத்த ஒருவனுடைய உயிரையே காவு கொள்கிறது.

''தனக்குள்ள சக்தியின் அளவினை உணராமல் அறியாமையினால் நீரில் இறங்கிப் பிராணனை விட்ட அவனை நினைத்து எள்ளி நகையாடுவீர்களா; அல்லது மூச்சு முட்டிச் சாக விருந்த ஒருவனைத் தப்புவிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு தன் நிலையைப் பற்றிச் சற்றும் யோசியாமல் தண்ணீரில் குதித்த அவன் தீரத்தைப் பாராட்டுவீர்களா? சொல்லுங்கள், அவனுக்காக இரக்கப்படுவீர்களா? அல்லது சிரிப்பீர்களா?

தாராவின் தலை குனிந்திருந்தது. கோலம் போட்ட ஒரு விரலின் வழி விழி செல்ல அவள் ''சிக்கலான பிரச்னை'' என்று கூறினாள்.

''அங்கே உடல் உறுதி குறைந்தது. இங்கே உள்ளத்தின் உறுதி குன்றியது. வித்தியாசம் இவ்வளவுதான். இதை நீங்கள் எந்தக் கோணத்தில் வேணுமானாலும் பார்த்து, எது சரியென்று தோன்றுகிறதோ அந்த முடிவுக்கு வாருங்கள்.''

''என்னை விடை கேட்காதீர்கள்'' என்றாள் தாரா. ''எனக்குத் தெரியவில்லை, எந்த விதமான தீர்மானத்துக்கு வருவதென்று.''

''வேண்டாம். நீங்கள் குழப்பத்தில் ஆழ்ந்து சிரமப்படுவதை நானும் விரும்பவில்லை. அதற்கு அவசியமுமில்லை. பிரச்னையை உங்களுக்குச் சுலபமாக்கித் தருகிறேன் நான். குற்றம் புரிந்ததாகவே ஒப்புக் கொண்டு விடுகிறேன். ஆனால் உலகில் தவறு செய்யாதவர்கள் யார்?

திருந்த முயலுபவர்களிடம் அநுதாபம் கூடவா காட்டக் கூடாது? கேலிதான் செய்தாக வேண்டுமா?''

''இதையெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்கிறீர்கள்?'' வடிவேலுவின் பேச்சைக் கேட்டுத் தாராவின் மனம் சங்கடப் படுவதை அவள் முகம் பிரதிபலித்தது.

'''என்னிடம் மட்டும் ஏன் சொல்கிறீர்கள்?' என்பதாகக் கேளுங்கள் பொருத்தமாய் இருக்கும்'' — 'மட்டும்' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்துச் சொன்னான் வடிவேலு.

தாரா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கரிய புருவங்கள் நெறிந்தன.

''இந்தக் கதையை யெல்லாம் சகலருக்கும் உடைத்துச் சொல்லி அத்தானுக்கும் அவப் பெயர் தேடி வைத்து அதன் மூலம் என் மீதுள்ள பழிச் சுமையைப் பாதிக்கு மேல் குறைத்துக் கொண்டிருக்கக் கூடாதா நான்? ஆனால் இன்று வரை பாருவிடம் பச்சாத்தாபப் பட்டு இதை ரகசியமாகவே பாதுகாத்து வந்திருக்கிறேன். ஏச்சுக்கள் எல்லாவற்றையும் நானே ஏற்றுக் கொண்டிருக்கிறேன். முதன் முதலாக உங்களிடம் தான் மனம் திறந்து பேசியிருக்கிறேன். அதிலிருந்தே தெரியவில்லையா நான் உங்களை எவ்வளவு உயர்வாக மதிக்கிறேன் என்று?''

''போதும், ரொம்பப் புகழாதீர்கள்!'' என்றாள் தாரா, நாணத்தின் சாயல் படர அவள் மெல்லச் சிரித்தாள்.

''நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை தாரா! மற்றவர்கள் என்னை எவ்வளவு வைதாலும் லட்சியம் செய்யாமல் நான் தாங்கிக் கொள்வேன். ஆனால் சாமான்யமாக மற்றவர்களைக் கருதுவது போல் உங்களைப் பற்றி என்னால் நினைக்க முடியவில்லை. முழு விவரங்களையும் அறிந்தால் என் மீது உங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய வெறுப்பு ஓரளவுக்கேனும் குறையாதா என்று ஓர் அசட்டு நம்பிக்கை!''

கண் கலங்குவதை மறைத்துக் கொள்ள முயன்று தோல்வியுற்றாள் தாரா. நாத் தழுதழுக்கக் கூறினாள்: ''பாரு எதையுமே சரியாகப் புரிந்து கொள்ளாததால் என்னிடம் அவள் ஏதேதோ உளறி வைத்தபோது நான் உங்கள் நடத்தை குறித்து ரொம்பவும் வருத்தப் பட்டதென்னவோ வாஸ்தவம்தான். ஆனால் மனப்பூர்வமாகச் சொல்கிறேன். அப்போதும் சரி, எப்போதும் சரி லவலேசம் கூட உங்கள் மீது எனக்கு வெறுப்பு உண்டானதில்லை.''

''அது போதும் எனக்கு'' என்றான் வடிவேலு நிம்மதியுற்றவனாக.

'''யோசித்துப் பார்த்தால் என்மீது குற்றம் குறை கூறுவதற்கு இடமேயில்லை' என்று கூட நீங்கள் வாதாடலாம். நீங்கள் எடுத்துக் கொண்ட காரியங்கள் இரண்டு. முதலாவதாக உங்கள் தங்கையின் வாழ்க்கையில் இடி விழுவதைத் தடுத்து நிறுத்த முற்பட்டீர்கள்; அதில் வெற்றியும் கண்டீர்கள். அதே சமயத்தில் இன்னொருத்தியைக் கேவலமான ஒரு நிலையிலிருந்து மீட்டு அழைத்து வரப் பிரயத்தனப் பட்டீர்கள். உங்கள் அத்தான், சக்குபாயை அடியோடு மறந்து விடச் செய்ய வேறு நல்ல உபாயம் கிடையாதென்பதால் அவளை உங்கள் மனைவியாகவே ஆக்கிக்கொண்டு சீர்கெட்டிருந்த அவள் வாழ்க்கையைச் செப்பனிடவும் முயன்றீர்கள். 'இதில் நான் ஏமாற்றம் அடைந்த போதிலும் நோக்கம் உயர்ந்தது தானே?' என்று நீங்கள் கேட்டால் யாரால் மறுக்க முடியும் அதை?''

துள்ளி எழுந்து நின்றான் வடிவேலு, ஆச்சரியம் அடைந்தவனாக. ''எப்பேர்ப்பட்ட இதயம் உங்களுடையது? இதில் எள்ளத்தனை என் அப்பாவிடம் இருந்திருந்தால் சக்குபாய் விஷயத்திலும் நான் தோற்றுப் போயிருக்க மாட்டேன்....''

''அதெப்படி அவ்வளவு தீர்மானமாகச் சொல்கிறீர்கள்?''

''சக்குபாயும் ஜமாலும் பணத்தையே பிரதானமாகக் கருதியது உண்மை.



அவர்கள் போட்ட இரண்டாவது திட்டமும் அத்தானை வளைத்துப் போடத்தான் என்று ஆரம்பத்தில் நான் அபிப்பிராயம் கொண்டிருந்தேன். விரைவிலேயே அது தவறு என்பது என் மூளைக்கு எட்டியது. எனக்குத்தான் சக்கு வலை விரித்தாள். அதில் நான் நன்றாகச் சிக்கிக் கொண்டேன்.

''ஆனால் அவர்கள் கணக்குப் போட்டதில் ஒரு பெரிய தவறு செய்து விட்டார்கள். ஒரே மகனானபடியால் செல்லப் பிள்ளையாக வளர்ந்திருப்பான், பணத்தை வாரி இறைக்கத் தயங்க மாட்டான், பத்து வேலி நிலத்துக்கு அவன்தானே வாரிசு, கால் கட்டு என்பதாகவும் ஒன்றுமில்லை என்றெல்லாம் எடை போட்டுப் பார்த்துத் தங்கள் அதிர்ஷ்டத்தை எண்ணிச் சந்தோஷப் பட்டிருக்கிறார்கள். என் அப்பாவுடைய கருமித்தனத்தையும் கண்டிப்புத் தன்மையையும் அவர்கள் எதிர்பார்க்கவே யில்லை. அவர் மட்டும் இன்னும் கொஞ்சம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டிருந்தால் சக்கு நடு வீதியில் நின்று வறுமையில் வாட நேரிட்டிருக்காது. மருமகளாக அவளை ஏற்றுக் கொண்டிருந்தால் அப்பாவுடைய சிக்கன புத்தி அவளைச் சுக போகத்துடன் காலத்தை ஒட்ட அனுமதித்திருக்காது தான்; என்றாலும் சிங்கப்பூருக்குப் போனால் சீரும் சிறப்புமாக வாழலாமே என்ற எண்ணமாவது அவளுக்கு எழாமல் இருந்திருக்கும்.''

தூசியை உதறித் தட்டிக் கொண்டு எழுந்தாள் தாரா. ''சர்ச்சை என்று வந்துவிட்டால் இரு தரப்பிலும் எப்படி வேணுமானாலும் வாதாடலாம். 'புலியைக் கொண்டு வந்து முற்றத்தில் கட்டிப் பாலூற்றி வளர்த்தால் பூனையாகி விடுமா?' என்று கேட்கலாம் அல்லவா உங்கள் தகப்பனார். அவருடைய ஸ்தானத்தில் நாம் இருந்து பார்த்தால் அவர் செய்கை சரிதான் என்று படலாம்.''

''இல்லை, தாரா! அவருடைய குணாதிசயங்கள் உங்களுக்குப் பழக்கமாக வில்லை. நிகழ்ச்சிகளை அப்படி அப்படியே நோக்குகிறவர் அவர். அந்தச் சம்பவங்கள் நடக்கக் காரணமாயிருந்த மனிதர்களை, அவர்களுடைய மனப் போக்குகளை, அபிலாஷைகளை, அந்த ஆசைகள் அவர்களுடைய உள்ளத்தில் உருவாவதற்கான சந்தர்ப்பச் சூழ்நிலைகளை இவற்றையெல்லாம் அலசிப் பார்க்கும் திறமை அவருக்குக் கிடையாது.''

''பெரிய மனோதத்துவ நிபுணரோ நீங்கள்?'' குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள் தாரா.

''பெற்ற தகப்பனாரைப் புரிந்து கொள்ளத் தத்துவம் எதற்கு?'' என்று கேட்டான் வடிவேலு. சாதம் பிசைந்து கொண்டு வந்திருந்த டிபன் பாத்திரத்தையும் கூஜாவையும் கையிலெடுத்துக் கொண்டு அவள் பின்னோடு நடந்தான்.

''ஏன் உங்கள் அருமைச் சிநேகிதி பாருவையே எடுத்துக் கொள்ளுங்களேன், உதாரணத்துக்கு. அத்தான் மீது அவள் உயிரையே வைத்திருந்தாள் என்பதை என் அப்பா உணராதவரா? அப்படியிருந்தும் என்ன நடந்தது தெரியுமா? பாரு பி. ஏ. முதல் வருஷம் படித்துக் கொண்டிருக்கையிலேயே சிங்காரம் அத்தானுக்கு அவளைக் கட்டிக் கொடுக்கும் எண்ணமே போய்விட்டது அப்பாவுக்கு. 'பி. ஏ. படிச்ச என் பெண்ணுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஐ. ஸி. எஸ்.ஸாவது அகப்பட வேண்டாமோ? இந்த நிரட்சரக் குட்சிக்கா என் பாருவைக் கொடுப்பேன்' என்று வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டிருந்தார். தெய்வாதீனமாக அத்தானுக்கு அவருடைய மாமா ஒருவர் தமது சொத்தை யெல்லாம் எழுதி வைத்து விட்டுக் கண்ணை மூடினார். அதிலேதான் மயங்கி விட்டார் அப்பா. இல்லாத போனால் அத்தானுக்கும் பாருவுக்கும் கல்யாணம் நடந்திருக்குமோ என்னமோ, சந்தேகம்தான்!''

''அப்படியா சங்கதி! காலேஜ் நாட்களில் அவள் அடிக்கடி என்னிடம் 'படிக்காத மாப்பிள்ளையாகப் பார்த்து என் தலையில் கட்டிவிட நினைக்கிறார்கள்' என்று குறைப்பட்டுக் கொள்வாளே?''

''அதெல்லாம் வெறுங்கதை!''

''கதை யளப்பதில் உங்கள் தங்கை வெகு கெட்டிக்காரி'' என்று கூறிவிட்டுத் தாரா கலகலவென்று சிரித்த போது அவள் சிரத்தைச் சுற்றி வந்த புடவைத் தலைப்பு நழுவியது. அள்ளிச் செருகியிருந்த அடர்த்தியான கருங் கூந்தலைக் கவனித்தான் வடிவேலு. 'அந்த அளக பாரத்தை முல்லை அரும்புச் சரங்கள் இரண்டு அழகு செய்ய முடியுமானால்?..'

அவளுடைய வலக் கரம் மடிந்து பின்னால் சென்று தூக்கி முடிந்திருக்கும் கேசம் அவிழாதிருக்கிறதா என்று தட்டிக் கொடுத்துப் பரிசோதித்ததிலிருந்து அவனுடைய பார்வை சென்ற திக்கை அவளும் கண்டு கொண்டாள் என்பது தெளிவாகியது. ஆயினும் கருமேகக் குவியலாகத் திரண்டிருந்த அந்த நுண்ணிழைகளின் கூட்டத்தை அவள் போர்த்தி மறைத்துக் கொள்ள முயலாது வாளாவிருந்தது அவனுக்குத் திகைப்பைத் தந்தது. அத்துடன் நிற்க

எதிலுமே மிகச் சிறந்தது இலேசுத் தன்மைக்கு... இறகு

எதிலுமே மிகச் சிறந்தது ஆடைகளில்... **எஸ் ஆர் எம்**

புல்வாயில்கள் • பிரிண்டட் வாயில்கள்
பாப்லின்கள் • வேஷ்டிகள் • மல்கள்
வீலேனுக்கள் • கைக்குட்டைகள்






ஸ்ரீராம் மில்ஸ் லிமிடெட்,
பெர்குஸன் ரோட், பம்பாய்—13.

வும் இல்லை அவள். ''கதை யளப்ப தில் உங்கள் தங்கை கெட்டிக்காரி'' என்று சொன்னவள் தொடர்ந்து, ''உங்களையும் என்னையும் சம்பந்தப்படுத்திக் கூட இன்னும் என்னவெல்லாமோ அசட்டுக் கதைகளைக் காதோடு காதாக அவள் என்னிடம் கூறியிருக்கிறாள் தெரியுமா? ஆனால் நான் அவற்றை வாய் திறந்து சொல்ல மாட்டேன்!'' என்ற போது அவள் முகம் 'ஜிவ்'வென்று சிவந்தது. அதை அவனிடமிருந்து மறைக்கக் கையாண்ட யுக்தியாக அவள் சிறுவன் மோகனின் மணிக்கட்டுகளைப் பற்றிக் கொண்டு 'விர்'ரென்று தட்டாமாலை சுற்றினாள். மோகன் மகிழ்ச்சி மிகுதியில் போட்ட கூச்சலும் தாராவின் ஆனந்தச் சிரிப்பும் ஒன்று கூடி வடிவேலுவின் செவிகளில் பாய்ந்து அவனைப் பரவசத்திலாழ்த்தின. ஆடிப் பாடி மகிழ நினைக்கும் பருவப் பெண் போலவும் வயதிலும் அனுபவத்திலும் மிகவும் முதிர்ச்சியடைந்து விட்ட மங்கை போலவும் அவள் பேச்சிலும் நடையுடை பாவனைகளிலும் மாறி மாறித் தோற்ற மளிப்பதைக் கண்டு வியப்படைந்த போதிலும் ஒருவாறு அவளைப் புரிந்து கொண்டு விடவும் முயன்றான் வேலு.

மூச்சு முட்டி இரைற, தலை கிறு கிறுத்துத் தடுமாற அருகிலிருந்த மேம்பாலச் சுவரில் அமர்ந்து மோகனைக் கட்டி அணைத்து முத்தங்களைச் சொரிந்தாள் தாரா.



''ஜாக்கிரதை! பின்னால் கொஞ்சம் நகர்ந்தால்போதும். விழுந்து விடுவீர்கள்!'' என்று எச்சரித்தான் வடிவேலு. ''தம்பி!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். பக்கத்தில் நெருங்கி வந்த வாத்தியார் வெங்குவின் முகத்தில் ஈயாடவில்லை.

''என்ன சார்வாள்? எதையோ பறி கொடுத்து விட்டவர் போல் சிலையாகி விட்டீங்களே, என்ன விசேஷம்?''

"பறிகொடுத்து விட்டுத்தான் வந்திருக்கிறேன் தம்பி! உத்தியோகத்தையே பிடுங்கிக் கொண்டு விட்டார்களே!" என்றார் வெங்கு பரிதாபமாக.

"என்ன? எப்படி? ஏன்!" என்று கேள்விகளை அடுக்கினான் வடிவேலு ஒன்றும் விளங்காமல்.

"எல்லாம் உன்னால் வந்த வினைதான்" என்று அலுத்துக் கொண்டார் அவர். "உன்னோடே நான் தாராளமாப் பழகறேனாம். உன்னை ரயிலேத்திப் பட்டணத்துக்கு அனுப்பி வைச்சேனாம். அதை எந்தச் சண்டாளனோ பார்த்துக் கொண்டிருந்து விட்டு—அவனைப் பாம்பு பிடுங்க—மாடி விட்டுப் பொன்னம்பலத்துக்கிட்டே கோழிமூட்டியிருக்



கான். அவர் என்னைக் கூப்பிட்டுக் கண்டிச்சார். நானும் கொஞ்சம் பலக்கப் பேசிட்டேன். அதுக்குத் தண்டனை கிடைச்சுடுத்து எனக்கு. டியூஷன் வைச் சுண்டிருந்த இரண்டொருத்தர் ஆத்தி லேயும் அடிச்சு விரட்டறு பொன்னம் பலத்துக்குப் பயந்துண்டு.''

''பார்த்தீர்களா நான் எவ்வளவு பிரபலமாக இருக்கிறேன் என்பதை?'' என்று தாராவை நோக்கிக் கேட்டான் வடிவேலு.

''தம்பி! என் வயிறு பற்றி எரியறது உனக்கு வேடிக்கையா இருக்கா?''

''சும்மா விட்டுவிட மாட்டேன் சார்! ஏதாவது ஏற்பாடு செய்வோம். இரண்டு நாள் பொறுத்துக்கிடுங்க.''

''கிரகசாரம், கிரகசாரம்'' என்று தலையிலடித்துக் கொண்டு அவர் போனதும், ''எப்படிச் சரிக்கட்டுவதாய் உத்தேசம்?'' என்று கேட்டாள் தாரா.

''எனக்கு எப்படித் தெரியும்? ஆறுத லுக்கு ஏதோ சொல்லி வைத்தேன், அவ்வளவுதான்'' என்றான் வடிவேலு.

தாரா சிந்தனையில் ஆழ்ந்தவளாக மௌனமாய் நடந்தாள்.

அத்தியாயம் 18

அக்கப்போர்

மாடி வீட்டுப் பொன்னம்பலத்துக் குத் தடியை ஊன்றிக் கொண்டு நடக் கிற அளவுக்கு இன்னும் வயதாகி விட வில்லை. அப்படியிருந்தபோதிலும் 'வாக் கிங் ஸ்டிக்' இன்றி அவர் வெளியே கிளம்புவதே கிடையாது. அதன் நுனி யில் போடப்பட்டிருக்கும் வெள்ளிப் பூண் தரையில் பட்டால் தேய்ந்து விடும் என்றும் வெள்ளிக் கைப்பிடியைப் பற் றிக் கொண்டு சென்றால் அதன் மெருகு குன்றிக் கறுத்து விடுமென்றும் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே தடியின் நடுப் பாகத்தைப் பற்றி, அதை முன் னுக்கும் பின்னுக்குமாக அசைத்தபடியே தான் நடப்பார். அவர் சொக்காய் போட்டுக் கொள்வது, நான்கு தங்கப் பித்தான்களையும், அவற்றை இணைக்கும் தங்கச் சங்கிலியையும் அதன் ஒரு முனை யில் தொங்குகிற சிறிய அரச இலை போன்ற தங்க மெடலையும் உபயோகப் படுத்த வேண்டும் என்பதற்காக மட்டு மல்ல; நாலு பேர் அவற்றைப் பார்த்து, 'இரண்டு சவரனாவது இருக்குமா?' என்று மதிப்பிட வேண்டும் என்பதற் காகவும்தான். சட்டையின் ஒருபுறத்து ஓட்டைகளில் மட்டும் பித்தான்களைப் பொருத்தி மார்பு தெரிகிற மாதிரியாகத் திறந்து விட்டு விடுவதிலிருந்து இதை யாரும் ஊகிக்கலாம். இடக் கரத்தில் வெள்ளியில் வெற்றிலை பாக்குப் பெட் டியை அவர் பிடித்திருக்கும் விதம் மணிக் கட்டை அலங்கரிக்கும் தோட்டாலை எல்லார் கண்களிலும் படுமாறு காண் பிப்பது போலிருக்கும்.

இந்தக் கோலத்தில்தான் இன்றும் அவர் தமது தென்னந் தோப்பில் வளைய வந்து கொண்டிருந்தார். சற்றுத் தூரத் தில் விரைந்து போகும் ஓர் உருவத்தைக் கண்டதும் கரகரத்த தமது குரலில்,

''ஓய், சீமாச்சு! எங்கேடா நழுவப் பார்க்கிறே, வாடா இப்படி!'' என்று அதிகாரத்துடன் அழைத்தார் பொன் னம்பலம்.

''என்ன விளையாடறேளா?'' என்றார் சீமாச்சு அவர் கிட்டத்தில் வந்து. ''உங்க பார்வையிலேயிருந்து தப்பிச் சுக் கொள்கிறதாவது? சாத்தியமான காரியமா அது?''

''கழுகுக் கண் என்று குத்திக் காட் டறயா. அது இருக்கணுமப்பா இந்தக் காலத்துக்கு. நாளைக்கு இதே இடத்துக்கு வந்து நின்றால் அதோ அந்த மரத்திலே எத்தனை தேங்காய் குறையுதுன்னு கணக்காய்க் கண்டு பிடிச்சிடுவேன்!''

''அது சரி, இப்போ ஒரு இளநீரைச் சீவச் சொல்லுங்கோ. நாவறண்டு போச்சு.'' வம்பு வளர்ப்பதற்கு முன்னால் தொண்டையை நனைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைவூட்டினார் சீமாச்சு.

''வீட்டுக்கு வாயேன். அருமையான பட்டணத்துக் காப்பியா போட்டுத் தரச் சொல்றேன்.''

''அதுக்கென்ன அதையும் குடிச்சு வைச்சால் போச்சு!''

''எமகாதகப் பேர்வழின்னு நீதான்!'' என்றார் பொன்னம்பலம். ''யாரடா அங்கே! இளசா நாலு தேங்காய் வெட்டி எடுத்துக்கிட்டு வா வீட்டுக்கு.'' சவுக் கத்தை ஒருமுறை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நடந்தார் அவர். ''சீமாச்சு! வாயேன், எங்கே ஓடிப் போவுது இளநீர்?''

சீமாச்சு பொன்னம்பலத்தைப் பின் தொடர்ந்தார்.

''அந்தத் தடிப்பயல் பட்டாளத்திலே சேர்ந்ததும் டிமிலோகப்பட்டுப் போயி டுச்சாமே நிஜம்தானா?''

''யாரைச் சொல்றேள்?''

குடிகூரா போட்டிக்கு

உங்கள் கூப்பனை இன்றே அனுப்புங்கள்

ரூ. 6,000

ரொக்கப்பரிசுகளாக அளிக்கப்படும்

மேலும் விவரங்களுக்கு, உங்கள் அருகாமையிலுள்ள குடிகூரா வியாபாரியை நாடுங்கள்.



குடிகூரா

டால்கம் பவுடர்

NATIONAL C 188

பாமாலிவ் உபயோகத்தினால் வளரும்
நீண்ட அடர்த்தியான கேசம்

மிக அழகிய கூந்தல் அலங்கரிப்புக்கு

இயற்கையாக அமைகிறது!





பாமாலிவ்

பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்

மூன்று வசீகரிக்கும் வாசனைகள்: லவண்டர்-மல்லிகை-ரோஜா

''என்ன சீமாச்சு! ஒன்றுந் தெரியாத மாதிரி நடிக்கிறே? முத்தையாவோட பிள்ளையை நம்மாலே சமாளிக்க முடியாதுன்னு முசோலினி, குய்யோ முறையோன்னு கூச்சல் போட்டுக்கிட்டு ஓடிட்டானாம்! ஹிட்லர் கூடத் தலை தப்பியது தம்பிரான்புண்ணியம்னு மீசையைத் தடவிவிட்டுக்கிட்டுப் பறந்துட்டானாம்! கேள்விப்படவில்லையா நீ?''

''சரியான கிணற்றுத் தவளைன்னு நீர்தான்!'' என்றார் சீமாச்சு அழுத்தந் திருத்தமாக. ''பாட்டன் காலத்துப் பழங் கதையைப் பேசிண்டிருக்கேளே. அப்பாவுக்கும் மகனுக்கும் இடையிலே ஏதோ தகராறு. அதிலே, நான் பட்டாளத்துலே சேர்ந்துடறேன் பாருன்னு பிள்ளையாண்டான் பயமுறுத்தி யிருக்கான். அதை அரையும் குறையுமா கேட்டுண்டு வந்து அந்த எல்லன் என்னமோ உளறினுனென்றால் நீர் அதை அப்படியே விழுங்கி வைக்கிறதா ?''

''பூ! இவ்வளவு தானு? என்னவோ ஜகஜ்ஜாலப் புரட்சி பண்ணிடப் போறுன் அப்படி இப்படின்னெல்லாம் பீற்றிக் கொண்டாங்களே?''

''அப்படி ஒரேயடியாத் தூக்கி எறிஞ்சும் பேசி விடாதேயும்! அவன் பட்டணத்துக்குப் போனதுக்கு வேறே ஒரு முக்கியமான காரணம் இருக்கு ஸ்வாமி!''

''அதென்ன சமாசாரம்? யாரோ புதுசா விருந்தாளி வந்திருக்காங்களாமே முத்தையா வீட்டுக்கு. அதைச் சொல்லறயா?'' என்றார் பொன்னம்பலம்.

''சகலத்தையும் அறிஞ்சு வைச்சுண்டுதானே என்னை மெதுவாக ஆழம் பார்க்கிறீர்?''

''அட, உன் வாயாலே கேட்டு வைப்போமே என்றுதான்....''

''சாமான்யப்பட்ட விருந்தாளி இல்லே ஓய்! பெரிய தேச சேவகியாம். வடக்கே இரண்டாயிரம் மைலுக்கு அப்பால் கான்பூரிலே யிருந்து வந்திருக்கா!''

''ஓ!'' என்று நீட்டி முழக்கித் தலையாட்டினுர் பொன்னம்பலம்.

''நேற்றைக்கு என் சம்சாரம் முத்தையாவோட பெண்டாட்டி கிட்டே, இந்தச் சங்கதிகளை யெல்லாம் சேகரிக்கறத்துக்காக மெல்லப் பேச்சுக் கொடுத்துப் பார்த்திருக்கா. அந்தப் பாருக்குட்டி இருக்காளோ இல்லியோ? அவள் இந்தத் தாராவுக்குக் காலேஜ் சிநேகிதியாம். படிப்பு முடிஞ்சதும் தியாகி ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிண்டாள். அவன் சுபாஷ் போஸ் கட்சி. சுபாஷ் அவனைக் கலந்தாலோசிக்காமல் ஒரு காரியத்திலேயும் இறங்கறது கிடையாதாம்! அவன் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டாராம்! அப்பேர்ப்பட்ட மனுஷனுடை தலையெழுத்தைப் பாரு! ஜெயில்லே கிடந்து அவஸ்தைப்பட்டுப் பாவம், பிராணனை விட்டுட்டான். ஆனுல் அதுக்கு முன்னடியே பெண்டாட்டிக்கும் தேசத்தைக் குட்டிச் சுவராகப் போக விட்டுடக் கூடாதுங்கற எண்ணம் விழுந்துடுத்து. அகமுடையான் கிட்டே யிருந்து கத்துண்ட பாடம். இப்போ கூட, தோழியோட கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போகலாம்னு இங்கே வந்திருக்கிறதாய்ச் சொல்லிக் கொள்கிறளே ஒழிய உள்ளூற வேறே ஏதோ காரணம் இருந்தாகணும். வெள்ளைக்காரனை அடிச்சு விரட்டறத்துக்கு ஏதேதோ ரகசியத் திட்டங்களெல்லாம் போட்டிருக்கிறாராமே சுபாஷ் போஸ்; அவர்தான் அனுப்பி வைச்சிருக்கலாமோன்னு கூடத் தோணறது!''

தமது இல்லத்தின் வாசல்படி ஏறிய பொன்னம்பலம், ''பார்த்தால் சாது, பாய்ந்தால் புலி என்கிற மாதிரி எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டது?'' என்றார். திண்ணையில் உட்கார்ந்து ஜன்னலின் வழியே உள்ளே எட்டிப் பார்த்து, ''செல்லம்! சீமாச்சு வந்திருக்கான். ஸ்பெஷல் காப்பியா போட்டு எடுத்துக்கிட்டு வா!'' என்று உத்தரவு பிறப்பித்தார்.

தகப்பனாரின் தலை திரும்பியதும் மகள் அழகு காட்டுவது சீமாச்சுவின் கண்களுக்குத் தற்செயலாகத் தென்பட்டு விட்டது.

''உருக்கி வார்த்த தங்க விக்கிரகமா இருக்கா உங்க பொண்ணு. நல்ல வரனு அமையணும்'' என்றார் அவர்.

கிண்டலைப் பொறுக்காத செல்லம் சீற்றப் பெருமூச்சுடன் உள்ளே போய்ச் சேருகிற நேரத்தில், ''அந்தப் பயல் மட்டும் அப்படி தறுதலையாகச் சுற்றும விருந்திருந்தால் இதற்குள்ளாற என் பெண் கழுத்திலும் மூணு முடிச்சு விழுந்திருக்கும்'' என்று ஏக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கூறினுர் பொன்னம்பலம்.

''எதற்கும் பிராப்தம் என்று ஒண்ணு இருக்கோல்லியோ? பாடுபட்டுச் சேர்த்த பத்து வேலி நிலம், ரொக்கம் இருபதினுயிரத்துக்குக் குறையாது, ஒரே பிள்ளை, அவன் அம்மா கழுத்திலே கையிலே, போட்டுண்டிருக்கிற தெல்லாம் நாட்டுப் பெண்ணுக்குத்தான். மாப்பிள்ளை சிங்காரம் சீமான். நகை நட்டெல்லாம் அவனுக்கு லட்சியமில்லே.''

''எதற்காக என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறுய் நீ?'' அலுத்துக் கொண்டார் பொன்னம்பலம்.

''அடடா! என்னைத் தப்பா அர்த்தம் பண்ணிக்கக் கூடாது நீங்க. இப்போகூட

ஒண்ணும் குடி முழுகிப் போயிடலேன்னு சொல்ல வந்தேன்.''

''சீமாச்சு! அசட்டுத்தனமா ஏதாவது பிதற்றுதே. நான் கறார் ஆசாமி!''

''அதுக்கில்லே, பொன்னம்பலம்! இத்தனை நாளா இல்லாமே இந்தத் தேனூர் இவ்வளவு பெரிய பாக்கியத்தை அடைஞ்சிருக்கு. அதைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்ளாமே விட்டுடறதா நீங்க?''

''நீ எதைச் சொல்றே?''

''ரொம்பப் பிரபலமான தேசத் தொண்டருடைய மனைவி. நாட்டின் சேவைக்காகவே வாழ்நாளை அர்ப்பணிச்சிருக்கா. அவாளை ஒரு நாளைக்கு உங்க வீட்டிலே விருந்து வைச்சுக் கூப்பிட்டா, உங்களுக்குப் பெருமை; அவாளுக்கும் அருமை!''

''சொப்பனத்திலே வேணுமானால் சாப்பிடச் சொல்லலாம்; அதுகூட முத்தையாவின் காதுக்கு எட்டினால் சண்டைக்கு வந்து விடுவான்.''

''அதெல்லாம் ஒரு மண்ணுமில்லே. யுத்தத்துக்குப் போறேன்னு மல்லுக்கு நிற்கிற பையனைப் பற்றி அவர் என்ன கொஞ்சமாவா கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்? பிள்ளைக்குக் குடும்பப் பொறுப்பு உண்டாகணுமென்னு நினைச்சுண்டிருக்கிற சமயத்திலே இதைப் போல் நல்ல இடத்துச் சம்பந்தத்தை உதறித் தள்ள அவருக்கென்ன பைத்தியமா? பழங்கதையெல்லாம் மறந்துட்டு விருந்துக்கு அவரையும் அழைச்சுக்குங்கோ.''

''சீமாச்சு! வாஸ்தவத்திலே இப்படி என்னைச் செய்யச் சொல்றியா நீ? எந்த முகத்தோட அவன் எதிரே போய் நிற்பேண்டா நான்?'' சாளரத்தில் செருகியிருந்த விசிறியை உருவி எடுத்து வேகமாய்ப் படபடத்துக் காற்றோட்டம் உண்டாக்கினார் பொன்னம்பலம்.

''அதனாலே என்ன? அப்போ கண்டிக்க வேண்டிய 'டயம்.' காரமாகப் பேசினேன். இப்போ கரைய வேண்டிய காலம் வந்துடுத்துன்னேன்! இதோ, பாரு பொன்னம்பலம்! போனால் வராதுங்கிற மாதிரியான சந்தர்ப்பம் இது. நழுவ விட்டு விடாதேயும். தாராவைச் சாக்கிட்டுண்டு அவா எல்லாரையுமே தருவிச்சுப்பிடலாம். அப்புறம் உங்க பெண்ணோட சாமர்த்தியம்.''

''சீமாச்சு! கெட்டிக்காரன்தாண்டா நீ!'' வேண்டாவெறுப்பாக ஒப்புக் கொண்டார் மாடி வீட்டுக்காரர்.

''அதிலேயும் ஒரு சின்ன இடைஞ்சல் இல்லாமல் போகல்லே....''

''போட்டுட்டுல்ல அஸ்து; தெரியுமே உன் கதை!''

வேலையாள் வெட்டிக் கொடுத்த இளநீரைக் கையில் வாங்கிக் கொண்டு பதிலளித்தார் சீமாச்சு. ''அந்த வெங்கு வாத்தியாரோட வேலைக்கு உலை வைச்சேனோ இல்லையோ? அவன் வந்து இவளண்டே..... யாரு?''

''சொல்லித் தொலையேண்டா!''

''தாராகிட்டே... போய் ஒரு குரல் அழுதிருக்கான். அதையும்தான் பார்த்துப்புடுவோம்னு அவள் தஞ்சாவூருக்கே கிளம்பிப் போயிருக்காள், கலெக்டரைக் கண்டு சொக்குப்பொடி போட. இன்னிக்குத்தான் திரும்பினாளாம். அநேகமாக நாளைக்கு அல்லது மறுநாள் கலெக்டரே இங்கே நேரடியா வந்து நாலுநாள் காம்ப் போட்டுச் சகலத்தையும் விசாரிப்பார் அப்படீன்னு பேச்சு அடிபடறது.'' இளநீரை வாயில் கவிழ்த்தார் சீமாச்சு.

''வரட்டுமே, ஐயா! கலெக்டரானால் என்ன? இளநீர் கணக்கா தலையைச் சீவிப்புடுவானோ சீவி?''

''ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பார்கள்.....'' பொன்னம்பலம் பெண் குரல் கேட்டுத் துள்ளி எழுந்தார். ''அதே போலத்தான் கதர் கட்டுபவர்கள் சொல் கலெக்டரிடம் செல்லாது!'' என்றவாறே தாரா அங்கு வந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைத்தே போனார். சீமாச்சுவோ, இள நீரையெல்லாம் மேலே கொட்டிக் கொண்டு திண்டாடினார்.

ஒருவாறு தம் நிலையடைந்ததும் சீமாச்சு, ''கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து நின்ன மாதிரின்னா இருக்கு?'' என்று கேட்டுப் பொன்னம்பலத்தையும் விழிப்புறச் செய்தார்.

இந்த நேரத்தில், ''அப்பா! காப்பி கேட்டீங்களே?'' என்றவாறே வாசலுக்கு வந்து சேர்ந்தாள் செல்லம்.

''செல்லம்! என்ன இது? அவுங்க வந்ததும் வராததுமாகத் திண்ணையிலேயா காப்பியைக் கொண்டு வந்து நீட்டுவாங்க? உள்ளே அழைச்சுக்கிட்டுப் போய்ப் பாயைவிரிச்சு உட்காரவைச்சுக் கொடுப்பியா....போ! போ!'' என்று மகளைத் திருப்பி அனுப்பி விட்டு, ''வரணும், வரணும்'' என்று விசிறியைக் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு தாராவைக் கை கூப்பி வரவேற்றார் பொன்னம்பலம்.

'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போச்சே' என்று அங்கலாய்த்தார் சீமாச்சு. முக்கால்வாசிக்கும் அதிகமான இளநீரை மேலே யெல்லாம் சிந்திக் கொள்ள வைத்த தாராவிடம் தமது காப்பியையும் பறி கொடுத்து விட்டுப் பரிதாபமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தார் அவர். (தொடரும்)

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் பொக்கேயின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக்கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்





குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமானது. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!

காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB-G-18-TAM2


பவழத்தீவு 23
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி.
திடீரென்று ஆனந்தனையும் கந்தனையும் காணாது சேனாபதி நந்திவர்மர் கலங்கிப் போனார். இளவரசருக்கு என்ன ஆபத்தோ என்ற தவிப்போடு தேடி வருகிறார்...
அதே சமயம் தலை தெறிக்க ஓடி வருகிறான் ஆனந்தன்.....
அதோ... அதோ... அது... சேனாபதியார்— போலல்லவா இருக்கிறது.
இளவரசே, இது என்ன கோலம்? ஏன் இப்படி ஓடி-வருகிறீர்கள்? எங்கே-போயிருந்தீர்கள்? கந்தன் எங்கே?
சேனாபதியாரின் சரமாரியான கேள்விகளுக்கெல்லாம் சுருக்கமாகப் பதிலளித்த ஆனந்தன், தன் தகப்பனாரை விடுதலை செய்ய — உடனே சூலபாணியின் கோட்டையை முற்றுகையிட்டாக வேண்டும் என்று நிலைமையை விளக்கிப் படைகளுடன் கிளம்புகிறான்.
அப்போது நடுவழியில்.....
நந்திவர்மரே! அதோ, அதோ! பாருங்கள் கந்தனும் வந்துவிட்டான்.
கந்தா, கந்தா! நீ ஏன் உடனே வர-வில்லை? மூன்று நாளாக உன்னைக் காணாமல் நான் எப்படித் தவிக்கப் போகிறேன் தெரியுமா? ஏதாவது ஆபத்தா?
ஆபத்தைப் பார்க்க நேர-வில்லை ஆனந்தா... ஆனால் என்னிடம் ஒன்றை நீ-காப்பாற்றும்படி கொடுத்தாயல்லவா அதை......



புதையல் குறிப்பு ஆலபாணியின் கையில் சிக்கி விட்டதைக் கேட்ட ஆனந்தன், முதலில் திடுக்கிட்டாலும் உடனே கந்தன் அதைத்தன் மனத்தில் எழுதிக் கொண்டு வந்திருப்பதைக் குறிப்பிடவே; ஆலபாணி இந்திரபுரியின் இடி பாடுகளை நோக்கிக் கிளம்பு முன் அவனைத் தடுத்து நிறுத்துவ தோடு தந்தையையும் விடுதலை செய்ய வேண்டுமென்று ஆவேசத்துடன் ஆலபாணியின் கோட்டையைத் தாக்கினான்......
வீராவேசமான தாக்குதலும் உளவறிந்து வந்துள்ள கந்தனின் உபயோகமான குறிப்புகளும் ஆலபாணியின் படைகளை நிலைகுலையச் செய்தன......
அதோ தெரிகிறதே, அதுதான் அரண்மனை. அதனுள்தான் மன்னரைச் சிறை வைத்திருக்கிறார்கள்.
ஆலபாணி தோல்வியைத் தழுவினாலும் அரண்மனையை யாரும் அணுக முடியாதபடி வேட்டை நாய்கள் காத்து நின்றன.........
இடம் ஆலபாணியின் வீரர்களை நந்திவர்மரின் வீரர்கள் துரத்திக் கொண்டிருக்கும் போது சேனாபதி வெறிநாய்களைச் சமாளித்துக் கொண்டிருந்தார்.
ஆனால் வெறி நாய்க் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொள்ளவே......
இந்த வெறி நாய்களிடமிருந்து சேனாபதியைக் காப்பாற்ற ஒரே வழி தான்! அதை இப்போதே செய்கிறேன்.


புதிய இறைச்சியின் ருசியிலே இவை தங்கள் கடமையைக் கூட மறந்து விட்டன... கந்தனை எங்கே காணோம்?
நகரின் எந்தப் பகுதியிலாவது போராடிக் கொண்டிருப்பான். அது சரி இளவரசே, சிறைச்சாலை எந்தப் பக்கம்?
தோல்வியினால் கொதிப்பும் அவமானமும் அடைந்த சூலபாணி ஆத்திரத்திலே அறிவிழந்து சிறைச் சாலைக்குள் புகுந்து மஹீபாலனைக் கொல்ல முயலும் அதே சமயம்....
அற்பனே! என் மன்னரின் மீது கத்தியை ஓங்க அத்தனை துணிவா உனக்கு?
சூலபாணி சுருண்டு விழுந்த அதே சமயம் கிழவனை இரண்டு பேர்கள் இழுத்து வருகின்றனர்...
இந்தக் கிழவனின் மர்மம் தான் எனக்கு இன்னமும் புரியவில்லை. இந்தத் தாடி உண்மையான தாடியா? இல்லை- இல்லை....
ஹா.. மந்திரி தாமகேது... துரோகியா? இளவரசே, எங்கோ கேட்ட பழக்கமான குரல் என்று ஒவ்வொரு தடவையும் குழம்பினீர்களே, உண்மை தான்.
அரசே, உங்களைக் கைதியாக்கி இன்று இந்த நிலையை நான் அடைந்ததற்குக் காரணம் அந்தப் பாவி தாமகேது தான். அவனது ஆசை வார்த்தைகளை நம்பி மோசம் போனேன்.. ஹா.. ஐயோ...!
சூலபாணியின் மரண வஸ்தையில் எல்லோரது கவனமும் இருந்த போது காவல் வீரர்களின் கைப் பிடி தளரவே திமிறிக் கொண்டு தப்பியோடினான் மந்திரி- தாமகேது.
தொடரும்

உங்கள் சிந்தனைக்கு

(1) உன் அப்பாவோட தங்கையோட பிள்ளையோட மாமாவோட பிள்ளை யார்?

(2) சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குக் கப்பல் கிளம்பியது. அதில் இருந்த மொத்தப் பிரயாணிகள் — கப்பல் நிர்வாகஸ்தர்களையும் சேர்த்து — ஐந்நூறு பேர்கள். கப்பல் இடையில் எங்கும் நிற்கவில்லை. யாரையும் இறக்கி விடவும் இல்லை, ஏற்றிக் கொள்ளவும் இல்லை. சிங்கப்பூர் துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறங்கியபோது ஐநூற்று இரண்டு பேர் இருந்தார்கள். அது எப்படி?



(3) இரண்டு தகப்பனர்களும் இரண்டு பிள்ளைகளும் ஒரு நந்தவனத்துக்குள் போனார்கள். ஆளுக்கு ஒரு ரோஜாவைப் பறித்தார்கள். பறித்த மொத்த பூக்கள் மூன்றுதான். எப்படி?

(4) ஒருவர் தம்மிடமிருந்த 1000 ஏக்கரா நிலத்தைத் தமது நான்கு பிள்ளைகளுக்கும் கீழ்க்கண்டபடி பங்கிட்டுக் கொடுத்தார். மூத்தவனுக்கு இரண்டாமவனைவிட 10 ஏக்கரா அதிகம். இரண்டாமவனுக்கு மூன்றுமவனைவிட 20 ஏக்கரா அதிகம். மூன்றுமவனுக்கோ நான்காமவனைவிட 30 ஏக்கரா அதிகம். அப்படியானல் நான்காவது பிள்ளைக்கு எத்தனை ஏக்கர்?

(5) கோயில் நிலங்களை குப்பன் கப்பன் என்ற இரண்டு குடியானவர்கள் குத்தகைக்கு எடுத்தார்கள். குப்பன் சொல்லுகிறன்: கப்பனின் நிலத்திலிருந்து ஏழு காணி எனக்குக் கிடைத்தால் எங்கள் இரண்டு பேருடைய நிலங்களும் சரிசமமாக இருக்கும். கப்பன் சொல்லுகிறன்: குப்பனின் நிலத்திலிருந்து ஏழு காணி எனக்குக் கிடைத்தால் அவனுடையதைப் போல் என் நிலம் இரண்டு மடங்காகிவிடும். அப்படியானல் ஒவ்வொருவருக்கும் குத்தகையில் கிடைத்த நிலங்கள் எத்தனை?

விடைகள்: (1) சாட்சாத் நீதான்! (2) நடு வழியில் கப்பலில் நிறை கர்ப்பிணியாக இருந்த இரண்டு பெண்கள் பிரசவித்தார்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள்தான் அதிகப்படியான அந்த இரண்டு பேரும்! (3) ஒரு கிழவர், அவரது மகன், அவரது பேரன் மூன்று பேர்தான் நந்தவனத்துக்குச் சென்றது. (4) கடைசிப் பிள்ளைக்கு 215 ஏக்கர்கள். (5) குப்பனுக்கு 35 காணி; கப்பனுக்கு 49 காணி.

மனிதன் கற்றுக் கொண்டான் – 2

ஆதி மனிதன் மாடமாளிகைகள் கட்டியா வாழ்ந்தான்? இல்லை, வெயிலும் மழையும் பனியும் அவன் உடலை வருத்திய போது மலைக் குகைகளை நோக்கி ஓடினன் மனிதன். குகைவாசியாக வாழ்ந்த மனிதனுக்குப் பருவ காலங்களின் மாறுபாடுகளுக்குத் தக்கபடி வாழத் தனக்கெனக் குடிசை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது. ஆனல் எப்படிச் சுவர் எடுப்பது? கலங்கி நின்ற அவனுக்கு வீடு கட்டச் சொல்லிக் கொடுத்தது ஒரு பறவை — குருவி. குளங்குட்டை, நீர்த் தேங்கங்களின் கரையோரம் உள்ள ஈர மண்ணைச் சிறு சிறு உருண்டைகளாக்கி அலகில் கவ்விக்கொண்டு போய் ஒன்றன்மேல் ஒன்ருக வைத்துக் கூடு கட்டுவதைக் கண்டான் மனிதன். மண் உருண்டைக் குவியல் காய்ந்ததும் உறுதியாக இருப்பதைப் பார்த்தான். இப்படிக் கிண்ணம் போன்று கட்டிய மண் கூட்டிலே குருவி (ஸ்வாலோ) முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துக் குடும்பம் நடத்தும் அழகைக் கண்டான். உடனே அதே போலத் தானும் மண்ணை உருட்டி ஒன்றன் மீது ஒன்ருக அடுக்கிச் சுவர் எழுப்பினன். வீடு கட்டக் கற்றுக் கொண்டு விட்டான் மனிதன்!

இன்று மனிதன் செங்கல் சுவருக்குச் சிமெண்ட் பூசி மழமழப்பாக்குகிறனே, இதையும்கூட எத்தனையோ ஆண்டுகளாகக் கேவலம் ஒரு பூச்சி செய்து வருகிறது. குளவி கூடு கட்டுவதைப் பார்த்திருக்கிறீர்களா? மிகவும் நைஸானதும் மிருதுவானதுமான மண்ணை உருட்டிக் கொண்டு வந்து குடம் போலவும் குழல் போலவும் குழைத்துக் குழைத்துத் தன் கூட்டை அமைக்கிறது. இப்படி அமைத்த கூட்டுக்குள் முட்டையிலிருந்து வெளி வந்த குழந்தைகளுக்கு நிறைய உணவைச் சேமித்து வைத்து விட்டு அதை அழகாக மூடியும் விடுகிறது குளவி. இன்றைக்கும் கூடக் குளவியின் முறைப்படி நம் கிராம மக்களும், ஆப்பிரிக்கத் தேசத்தின் சுதேசிகளும் மண்ணைக் குழைத்துச் சேருக்கிச் சுவர்களிலும் களஞ்சியங்களிலும் பூசுவதைப் பார்க்கலாம். முதல் பூச்சுக் காய்ந்ததும் மறு பூச்சுப் பூசுவார்கள். இப்படி முறைப்படி மண் பூசிக் கெட்டிப்பட்ட சுவரின் மீது கூரை வேய்ந்து விட்டால் அந்தக் குடிசை இருபது வருடங்கள் வரை குலையாமல் இருக்கும். மண் பூசும் பழக்கத்திலிருந்துதான் மனிதன், (மண்ணுக்குப் பதில்) சிமெண்டைக் கண்டுபிடித்தான். ஆனல் நைஸான ஒரு பொருளைக் கொண்டு உறுதியான உப்பரிகைகளைக் கட்டலாம் என்ற எண்ணத்துக்கு முன்னேடியாக இருந்தது கேவலம் ஒரு பூச்சி—குளவிதான் என்ருல் வியப்பாக இல்லையா?





பந்தின் கதை

பந்தாட்டம் என்றால் உங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம்தான் இல்லையா? உனக்கு மட்டுமென்ன, பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலிருந்தே மனிதன் பந்தாட்டத்தில் இன்பம் கண்டிருக்கிறான். கற்கால மனிதக் குழந்தைகள் பொழுதெல்லாம்கூழாங் கற்களைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் பந்து அது. கூழாங்கல் உடலில் பட்டு உபத்திரவம் தருவதைக் கண்ட பிறகு மனிதன் செயற்கைப் பந்து தயாரிப்பதில் முனைந்தான். புல்லையோ, வைக்கோலையோ சேர்த்து அமுக்கிக் கயிற்றினால் கட்டி உருண்டையான உருவத்தில் பந்து தயாரித்தான். தோலின் உபயோகம் தெரிந்த பிறகு கம்பளி, பறவைகளின் இறகு இவைகளை உள்ளே வைத்துத் தினித்துத் தைத்துப் பந்து தயாரித்தான். மனிதன் தயாரித்த முதல் விளையாட்டுச் சாதனம் இந்தத் தோல் பந்துதான் என்று கூறலாம். இதன் புகழும், பயனும் நெடுகப் பரவ ஆரம்பித்தன. பந்தாட்டம் உலகின் பல்வேறுபகுதி மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டாகி விட்டது. புராதன கிரேக்கர்கள், ரோமானியர்கள், எகிப்தியர்கள் எல்லாரும் பந்தாட்டத்தை விரும்பி விளையாடினர். ஒருவரே பல பந்துகளைக் கொண்டும் விளையாடி மகிழ்ந்தனர்.

நம் நாட்டில் ஆடப்படும் அம்மானையைப் போலப் புராதன எகிப்தியர்களும் பந்துகளைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடி யிருக்கிறார்கள். இரண்டு கட்சிகளாக இருந்து கொண்டு பந்தைத் தங்களுடையதாக்கிக் கொள்ளவோ, எதிரியின் விளையாட்டு வீட்டை நோக்கிப் பந்தை உதைத்துத் தள்ளவோ முயன்று பந்தாட்டத்தில் வேகத்தையும் விறுவிறுப்பையும் உண்டாக்கியவர்கள் ரோமானியர்கள்தான். சிறந்த பந்தாட்டக்காரர்களைக் கொண்ட சங்கம் நிறுவிக் கண்காட்சிப் பந்தாட்டங்களையும் நடத்தினார்கள் அவர்கள்.

இந்தச் சமயத்தில் இந்தியா, பாரசீகம், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் பந்தாட்டம் அன்றாட அலுவல்களில் ஒன்றாகி விட்டது. குதிரைகளின் மீ திருந் தபடியே பந்தை உந்திச் சென்று விளையாடும் 'போலோ' என்ற ஆட்டம் பாரசீகத்திலும் இந்தியாவிலும் பழக்கத்திலிருந்தது.

ஐரோப்பியர்கள் மெக்ஸிகோ நாட்டில் அடிஎடுத்து வைக்குமுன்பே அங்கு கூடைப் பந்தாட்டம் (பாஸ்கட்பால்) பிரபலமாகி யிருந்தது. அஸ்டெக் இந்தியர்கள் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மைதானங்களில் இதை ஆடக் கற்றிருந்தனர். ரப்பர்ப் பந்தின் பழக்கமும் இவர்களிடம் இருந்தது. கூடைக்குப் பதில் குச்சியை வளையமாக்கி அதில் வலை பின்னி அதை 'பாட்'டாகக் கொண்டு விளையாடினர். தோளினாலும் இடுப்பினாலும்தான் பந்தைத் தொடலாம் என்ற விதி வகுத்துக் கொண்டிருந்தனர். பர்மாக்காரர்களிடையேகூட, தோளினால் தட்டித் தள்ளி விளையாடும் பந்தாட்டம் பழக்கத்திலிருந்தது. உதை பந்தாட்டம் (புட்பால்) பிறந்து நாலுண்டுதான் ஆகிறது. ஆங்கிலேயரின் கண்டுபிடிப்பு இது. பழங் காலத்திலிருந்தே பந்து மனிதனின் விளையாட்டுச் சாதனமாக இருந்து வந்திருக்கிறது. காலப் போக்கில் பந்தைக் கொண்டு பலவித விளையாட்டுக்களை மனிதன் வகுத்துக் கொண்டிருக்கிறான். உலகில் எத்தனைவிதப் பந்தாட்டங்கள் இருக்கின்றன வென்று உங்களால் சொல்ல முடியுமா?



உனக்குத் தெரியுமா?

ஃ மிருகங்களிலேயே மிகப் பெரியது எது என்று கேட்டால் நீ உடனே யானை என்றுதானே பதில் சொல்லுவாய்? ஆனால் யானை பெரிய மிருகமில்லை. யானையைவிடப் பத்து மடங்கு நிறையுள்ள ஒரு பிராணி இருக்கிறது. ஆறு யானைகளை ஒன்றன் பின் ஒன்றாக நிற்க வைத்தால் எத்தனை நீளமோ, அத்தனை நீளம் இருக்கும் அந்தப் பிராணி. அது என்ன பிராணி தெரியுமா? திமிங்கிலம்தான். கடலில் வாழுவதினால் இது மீன் வகையைச் சேர்ந்தது என்று உங்களில் பலர் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். ஆனால் திமிங்கிலம் மீனல்ல. இதற்குச் செவுள்கள் கிடையாது. உன்னைப் போலவே தான் அது ஆகாயத்தில் உள்ள காற்றைச் சுவாசிக்கிறது. மூச்சைப் பிடித்துக் கொண்டு நீண்ட நேரம் இது நீரின் அடியில் நீந்திக் கொண்டிருக்கும். எப்படியும் இது மறுபடியும் சுவாசிக்க நீர் மட்டத்துக்கு மேல் வந்துதானாக வேண்டும். ஒரு தடவை இது தன் சுவாச கோசங்களில் காற்றை நிரப்பிக் கொண்டால் பிறகு நீண்ட நேரத்துக்குச் சுவாசிக்க வேண்டியதில்லை. திமிங்கிலம் முட்டை இடுவதில்லை. குட்டிதான் போடுகிறது.


ஜூன் 8உ முதல்!
சென்னை
காஸினோ
ஸ்ரீகிருஷ்ணா
உமா மற்றும்
தென்னாடெங்கும்
விஜயாவின்
மனிதன் மாறவில்லை!
டைரக்ஷன்.. சக்ரபாணி
பாடல்கள்
கண்ணதாசன்
தஞ்சை
ராமையாதாஸ்..
வசனம்
தஞ்சை
ராமையாதாஸ்
சங்கீதம்
கண்டசாலா
ஒளிப்பதிவு
பார்ட்லி
தயாரிப்பு.. நாகிரெட்டி • சக்ரபாணி
ஸ்டுடியோ.. விஜயா - வாஹினி



பலே பாண்டியா!

— காந்தன் —

"வீரத் திருமகன்", "செங்கமலத் தீவு" போன்ற அடிதடிப் படங்கள் ஓடிப்போய்க் கொண்டிருக்கும் தருணத்தில் பத்மினி பிக்சர்ஸாரின் "பலே பாண்டியா!" வெளிவந்திருக்கிறது.

ஒருவரைப்போல் இன்னொருவர் இருப்பது சகஜம். இந்த அடிப்படையைக்கொண்டு எல்லாரையும் சிரிக்க வைப்பதற்காக, "பலேபாண்டியா" தயாரிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்ணியின்கொடுமை தாங்காமல்வீட்டைவிட்டு வெளியேறிய பாண்டியன் ஓர் உயரமான கட்டடத்தின் மேலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயலுகிறான். வில்லன் கபாலி பாண்டியனைத் தனது கையாள் ரௌடி மருது என நினைத்துக் காப்பாற்ற மேலே போகிறான். ஆனால் இவன் வேறு ஆள் என்று அறிந்ததும், பாண்டியன், ரௌடி மருது ஆகியவர்களின் உருவ ஒற்றுமையைக் கொண்டு பெரிய சதிக்கு ஏற்பாடு செய்கிறான். மருதுவின் ஆயுள் இன்ஷூரன்ஸ் தொகையான லக்ஷம் ரூபாயை அபகரிக்கப் பாண்டியனைத் தீர்த்துக் கட்டப் பார்க்கிறான். ஆனால் பாண்டியன் சாக மறுக்கிறான். கீதாவின் காதல்தான் அதற்குக் காரணம். எதிர்பாரா தவிதமாய்க்கைலாசமலை எஸ்டேட் உரிமையாளரின் ஸ்வீகாரப் புத்திரனாகப் பாண்டியன் ஏற்றுக் கொள்ளப்படுகிறான்...., கதை இப்படி ஆரம்பித்து எப்படியெல்லாமோ போகிறது.

சிவாஜி கணேசன் ஏற்றிருக்கும் மூன்று பாத்திரங்களும் மூன்றுவித குணதிசயங்கள் உள்ளவை. பாண்டியன் அப்பாவி, உலகமே தெரியாதவன்; ரௌடி மருது பெரிய அயோக்கியன்; விஞ்ஞானி சங்கர் இரண்டாந் தாரம் மணந்து கொண்டு அந்த மோகினியின் கைப் பாவையாக விளங்கிய கடன்காரர்.

இந்த மூன்று பாகங்களையும் சிவாஜி கணேசன் திறமையாகக் கையாள்கிறார்.

எம். ஆர். ராதா இரண்டு பாகங்களில் தோன்றுகிறார்; தனவந்தர் அமிர்தலிங்கம் பிள்ளையாகவும், வில்லன் கபாலியாகவும் வந்து ஒரேயடியாகக் கத்தாமல் தமது பொறுப்பைக் கருத்தாக நிறைவேற்றி யிருப்பது பாராட்டுக்குரியதுதான்.

இவர்களைத் தவிர பாலாஜி வேறு வந்து குதி போடுகிறார்!

தேவிகா பலே பாண்டியனைக் காதலிக்கும் பலே கைகாரி! தனவந்தர் அமிர்தலிங்கம் பிள்ளையின் மகள் கீதாவாகக் கவர்ச்சிதநதும் பத் தோன்றிப் பாண்டியனைக் காதலித்து மணந்து, ரௌடி மருது இறந்து கிடப்பதைக் கண்டு பாண்டியன் என்று நினைத்துக் குழம்பி, விஞ்ஞானி சங்கரைத் தன் கணவனெனக் கருதிக் கொஞ்சி, கடைசியில் பாண்டியனுடன் சேர்ந்து விடுகிறார்!

வசந்தி கைலாசமலை எஸ்டேட் அதிபரின் மகளாக வந்து பாண்டியனை அண்ணனாக அடைகிறார். அவரும் ஒரு பைத்தியம். அப்புறம் வேறென்ன வேண்டும்! வசந்தியின் தகப்பனார் பேச்சைக் கேட்டதுமே "சபாஷ் மீனா"வில் வரும் பைத்தியக்காரத் தந்தை நினைவுக்கு வருகிறார். அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் "பலே பாண்டியா"வைப் பார்க்க வேண்டியதில்லை. தமிழ்ப்பட ரஸிகர்களுக்கு ஞாபக சக்தியே கிடையாது என்ற எண்ணத்தில் இம்மாதிரி ஒரு படத்தில் வந்த காட்சிகளையே (அதுவும் ஒரு தமிழ்ப் படத்தில்......!) துணிந்து இன்னொரு படத்தில் புகுத்துவது எவ்வளவு கொடுமை!

"சபாஷ் மீனா" இன்னும் ஹாஸ்யங்கள் நிறைந்திருந்தது. சில பாடல்கள் நன்றாயிருந்தன. இதில் பாட்டைப் பற்றிப் பேசவே கூடாது! "அத்திக்காய் காய் காய்" என்னும் பாட்டு அமைப்பு நன்றாயிருக்கிறது. ஆனால் இசையமைப்பு கவர்ச்சியாயில்லையே!

டைரக்ஷன், ஒலிப்பதிவு இரண்டும் சிறப்பாகக் கூறும்படியில்லை.

'பலே!' என்று வியந்து பாராட்டப் படத்தில் எதுவுமே இல்லை. பெரிய நடிகர்களின் பெயரைப் பார்த்தும் ஏமாந்துபோய் இந்தப் படத்துக்குப் போகாமல் இருந்தால் அவர்களை வேண்டுமானால் "பலே பாண்டியா!" என்று பாராட்டி மகிழலாம்.



வெள்ளை வெளேரென்ற

பின்னியின்

கான்ஸல்

டிரவுசர் அணிந்து

தனிச் சிறப்புடன்

விளங்குங்கள்

அது நீடித்து
உழைக்கவல்லது

கான்ஸல்* ஓர் உயர்ந்த, மிருதுவான ஸாட்டின் டிரில். பார்வைக்கு அழகாக இருப்பதுபோலவே உழைப்பிலும் உறுதியானது. தயாரிப்பில் பயன்படும் உயர்தர பருத்தியிலுள்ள மினுமினுப்பும் உறுதியும் துணியில் இருக்கக் காணலாம். கான்ஸல் டிரவுசருடன் அணிய ஏற்றது பின்னி கான்கார்* பாப்லின் ஷர்ட். அதுவும் அழகியதோர் துணியே.

*ஸான்போரைஸ்ட்—யு. எஸ். ஏ. விலுள்ள க்ளுயட், பீபாடி கம்பெனியாரின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்

JWT/BC-C-1749a



QUALITY FABRICS

BINNY & CO. MADRAS LTD

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் கடைகளிலிருந்து கன்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்பெனி லிமிடெட்.
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
ஸ்தாபனத்தின் ஒரு மில்



நந்தவனம்

சோமு

23 செல்வியின் தீர்மானம்

திடீரென்று ஜமீந்தாரிணியின் உடல் நிலையில் என்ன நேர்ந்தது? கடந்த சில மாதங்களாக உடம்பும் உள்ளமும் தெம்பாக இருந்தவளுக்கு இப்பொழுது என்ன நிகழ்ந்தது!

சிங்கம்புத்தூர் மாளிகையில் இருந்த எல்லாச் சிப்பந்திகளும் இந்தக் கேள்விகளையே திரும்பத் திரும்பக் கேட்டனர். வைத்தியருமே இந்தக் கேள்விகளைக் கேட்டார்! அவருக்கும் குழப்பமாக இருந்தது.

'ஏதோ மன அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது!' என்று வைத்தியருக்குப் புரிந்தது. ஆனாலும் அதை, வெளியே சொல்வதற்குப் பயந்தார். ''அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை இந்தச் செந்தூரத்தைத் தேனில் குழைத்துக் கொடுங்கள்'' என்று சொல்லி இதயத் துடிப்பு சீராவதற்கான ஒரு மருந்தைக் கொடுத்து விட்டுச் சென்றார் அவர்.

தாமரைச் செல்விக்கு மனம் குழம்பியதோடு வேறொரு வேதனையும் அவளைத் துன்புறுத்தியது. அம்மாவுக்குத் திடீரென்று மன அதிர்ச்சி ஏற்படுவதற்குக் காரணம் தானே தான் என்றுஎண்ண எண்ணச் செல்வியால் அந்தத் துன்ப நினைவைத் தாங்கவே முடியவில்லை!

தாமரைச் செல்வி அப்படி என்ன செய்தாள்? தாயாருடைய உடம்பு

பதறும்படி அப்படி என்ன விபரீதத்தை அவன் செய்தான்?

சுப்பையாவிடம் தனியாகப் பேசி விட்டு, அப்பாவையும் செண்பகவனத்துக்கு அனுப்பி விட்டு, மறுபடியும் தனது அறைக்கு வந்து உட்கார்ந்த செல்விக்கு மன நிம்மதி ஏற்படவில்லை. வில்வநாதனுடைய நினைவும் அந்த விபரீதமான கடிதத்தின் வாசகமும் அவளை வேதனை செய்தன.

வில்வநாதன் சிங்கம்புத்தூருக்கு வந்த நாளிலிருந்து நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் மனத்துக்குள் எண்ணிப் பார்த்தாள் செல்வி. முக்கியமாக ரிஷிய சிருங்கரின் சித்திரத்தை வரைய முயன்று, அதன் நிமித்தமாகத் தனக்கு ஏற்பட்ட துயரமும், அதனால் வில்வநாதனுக்கு நேர்ந்த குழப்பமும் செல்வியின் நினைவிலே நெருப்பாகச் சுட்டன. அந்த நிகழ்ச்சியை இப்பொழுது எட்டி நின்று நினைவுக் கண்ணால் பார்த்துக்கொண்டே உள்ளத்துக்குள் விமரிசனம் செய்தாள்!

செல்விக்கு ஒரு விஷயம் மிகவும் தெளிவாகப் புலனாயிற்று. வில்வநாதனுக்கு அவளிடம் மட்டில்லாத அன்பு இருந்தது உண்மை. அதில் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த அன்பு வேறு. தனக்கு வில்வநாதனிடம் இருந்த அன்பு வேறு. இரண்டும் இரண்டு வேறு விதம். இரண்டும் அளவு கடந்த அன்பின் இரண்டு வேறு சாயல்கள்!

செல்வி நினைத்தாள், தனக்காக நியமிக்கப்பட்டிருந்த வாழ்க்கை முறையிலே வில்வநாதனுடைய ஸ்தானம் என்ன? அவனுடைய இதயத்தில் தனக்கு இருந்த இடம் என்ன?

செல்வியினுடைய மென்மையான இதயத்திற்கு இத்தகைய தீவிரமான உணர்ச்சிகளைத் தாங்கிக் கொள்வதற்குரிய தெம்பு இல்லை. தானே தனது உள்ளத்தில் எழுப்பிக் கொண்ட இந்தக் குழப்பமான கேள்விகளின் வேகத்தை அடக்க முடியாமல் இதயம் கண்ணீர் வடித்தது. அப்படியே நேராக நடந்து சென்று தாயாரின் அறைக்கு வந்தாள் தாமரைச் செல்வி.

''கண்ணே! ஏன் கண்ணெல்லாம் இப்படிச் சிவந்திருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தாள் ஜமீந்தாரிணி. கட்டிலில் அவளுக்கு அருகிலே போய் நின்றாள் செல்வி.

''ஒன்றுமில்லையே அம்மா!'' என்றாள் தாமரைச் செல்வி.

''ஒன்றுமில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே பரிவோடு மகளுடைய விழிகளையே பார்த்தாள் தாயார்.

''அம்மா! கடந்த சில மாதங்களாக உன்னுடைய உடம்பு நன்றாகத் தேறி வருகிறது. நீயாகவே நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொள்ளவும், பிறருடைய உதவியில்லாமல் ஓரளவு நடக்கவும் முடிகிறது'' என்றாள் செல்வி.

''நான் ஒன்று கேட்டால் நீ ஒன்று சொல்லுகிறாயே! என்னுடைய கேள்விக்குப் பதில் இல்லையே?'' என்றாள் ஜமீந்தாரிணி.

''அதைத்தான் சொல்ல வந்தேன், அம்மா! உடம்பு கொஞ்சம் இடமாகிக் கொண்டு வருகிற இந்தச் சமயத்தில், ஏன் எதேதையோ யெல்லாம் கேட்க ஆரம்பிக்கிறாய்?''

இவ்வாறு சொல்லும் போதே செல்விக்குக் கண்ணீர் பொங்கியது.

''செல்வி! இப்படியெல்லாம் பேசுவதற்குப் புதிதாகப் படித்துக் கொண்டு விட்டாயா கண்ணே! என்னுடைய உடம்பு இடமாக இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன? நீ கலகலப்பாக இருக்கிறாய். அதனால் நான் தெம்பாக இருக்கிறேன்! வைத்தியர் கொடுக்கிற மருந்தினாலா? இல்லையே!''

தாமரைச் செல்வி கட்டிலிலே அன்னையின் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''கண்ணே! என்னிடம் மறைக்காமல் சொல்லு. நீ சொல்லா விட்டால் ஏதேதோ எண்ணி எனக்குப் படபடப்பு வந்து விடும்! உன் கண் கலங்குவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை!''

''அம்மா! உன்னிடம் சொல்லவும் கூடாது. சொல்லவும் வேண்டும். இப்படி ஒரு நிலைமையில் இருக்கிறேன்!''

அடக்கிக் கொண்டிருந்த கண்ணீர் எல்லாம் அணையைப் பெயர்த்துக் கொண்டு பாய்ந்தது. நிமிர்ந்து உட்கார்ந்திருந்த ஜமீந்தாரிணி தனது முந்தானையால் தன் செல்வ மகளின் கண்களைத் துடைத்தாள்.

''கண்ணே! நீ சொல்லாமலே எனக்கு ஓரளவு புரிகிறது. ஆனாலும் — ''

தாமரைச் செல்வி தனது இடுப்பிலே செருகி வைத்திருந்த கடிதத்தை வெளியே எடுத்தாள். பதறுகிற கைகளிலே அதைப் பளிச்சென்று வாங்கிக் கொண்டாள் ஜமீந்தாரிணி. மறு விநாடி அதைப் பிரித்துப் படித்தாள்.

கடிதத்தைப் படிக்கும் போது அன்னையின் முகத்தில் என்ன மாறுதல்கள் தோன்றுகின்றன என்பதையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள் செல்வி. ஆச்சரியம் என்ன வென்றால் செல்வி எதிர்பார்த்தபடி எத்தகைய மாறுதலும் நிகழவில்லை, அன்னையின் முகத்தில்!

மிகுந்த நிதானத்தோடு கடிதத்தைப் படித்து முடித்ததும், ஜமீந்தாரிணியின் முகத்தில் ஓர் அசாதாரணமான தெளிவு நிலவியதைச் செல்வி கவனித்தாள்.

''அம்மா!'' என்றாள் செல்வி.

''கண்ணே! ஏன் இப்படி ஒரே அதிசயமாகப் பார்க்கிறாய் என்னை?''

''அம்மா! இந்தக் கடிதம் மாடி அறையிலே கிடந்தது. யாரோ ஜன்னல் வழியாகப் போட்டிருக்கிறார்கள்! எந்தப் படுபாவியோ இப்படி ஒரு அநியாயமான —''

''செல்வி! யார் எந்த நோக்கத்தோடு இந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தாலும் சரி. அப்படிச் செய்தவர்கள் புண்ணியசாலிகள். அவர்கள் பாவிகளில்லை அம்மா!''

இவ்வாறு சொன்னாள் ஜமீந்தாரிணி.

''அம்மா! என்ன சொல்கிறாய் நீ!'' என்று திகைப்போடு கேட்டாள் செல்வி.

''கண்ணே! ஒரு மிகப் பெரிய விபத்திலிருந்து இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறது அம்மா இந்தக் கடிதம்! இதை எழுதியவர்கள் உண்மையிலேயே நமக்குப் பெரிய உபகாரத்தைச் செய்திருக்கிறார்கள் அம்மா!'' என்றாள் ஜமீந்தாரிணி.

செல்விக்குக் கண்கள் மறுபடியும் கலங்கின.

''அம்மா ! அப்படியானால் இந்தக் கடிதத்தில் எழுதியிருப்பது உண்மையாகவே இருக்குமா அம்மா?''

இப்படிக் கேட்டாள் செல்வி எல்லையற்ற தாபத்தோடு!

''இது உண்மையாக இருக்கும் என்று தான் நான் நினைக்கிறேன் கண்ணே!''

ஜமீந்தாரிணியின் குரலில் நடுக்கம் இல்லை. உறுதியும் நிதானமும் ஒலித்தன.

''செல்வி! உலகம் தெரியாத ஒரு குழந்தைக்கு உலகத்தைப் பார் என்று கண்ணைத் திறந்து காட்டுகிறது இந்தக் கடிதம்!''

''அம்மா!'' என்று அழைக்கும் போதே செல்வியினுடைய குரலில் இதயம் முழுதும் எழுந்தொலித்தது.

''அம்மா! நான் அப்படி நினைக்கவில்லை. வில்வநாதன் இப்படிப்பட்டவர் என்று நான் எதிர்பார்க்கவில்லை!''

''செல்வி! நானும் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் இதைப் பற்றி இப்பொழுது ஆச்சரியமும் அடையவில்லை. இப்பொழுதாவது இந்தச் செய்தி நமக்குத் தெரிய வந்ததே என்று நிம்மதிப் படுகிறேன். ஆனால் ஒரே ஒரு துயரம். ஒரே ஒரு ஏக்கந்தான் என்னால் தாங்க முடியவில்லை.''

இவ்வாறு சொல்லும் போது, இது வரை தெளிவாக இருந்த ஜமீந்தாரிணியின் முகத்தில் கலக்கம் படர்ந்தது.

''அம்மா! அப்படிப்பட்ட துயரம் என்ன? அந்த ஏக்கம் என்னம்மா! நான் இதைத் தாங்க முடியாமல் தவிக்கிறேன் என்று நினைக்கிறாயா? இல்லை. அம்மா, நிச்சயமாகச் சொல்லுகிறேன். நான் என்னுடைய மனதை —''

''கண்ணே! இப்பொழுது கொஞ்ச நாட்களாக உன்னுடைய அப்பா மிகவும் நிம்மதியாக இருந்து வருகிறார்கள். உன்னுடைய வாழ்க்கையின் எதிர்காலம் நல்ல முறையில் உருவாகி வருகிறது என்று அவர்களுக்கு ஒரு திருப்தி. ஆனால் இனிமேல், இனிமேல் —''

''அம்மா! என்ன சொல்லுகிறாய்? அப்பாவுக்கு இந்தச் செய்தி தெரிந்தால் என்ன ஆகும் என்கிறாய் அம்மா?''

இவ்வாறு ஒரே பதற்றத்தோடு கேட்டாள் செல்வி.

''கண்ணே! குதிரையேற்றமும் யானையேற்றமும் உனக்கு வேண்டாம் என்று சொன்னேனே நினைவிருக்கிறதா? அந்த விநாடியிலிருந்து உன் அப்பாவின் மனத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. எந்த விஷயத்திலும் திடீர் திடீர் என்று ஒரு முடிவுக்கு வருகிற சுபாவம் அவர்களுக்கு! அந்த நிமிஷத்திலிருந்து பொன்னுத்துரையை வெறுத்து விட்டார்கள்! அதோடு நில்லாமல், எந்த நேரத்தில் வில்வநாதனை அவர்கள் பார்த்தார்களோ, அந்த நேரத்திலிருந்து அவர்களுடைய மனசில் அவன் 'குடியேறி' விட்டான்! பொன்னுத்துரைக்கு அவர்களுடைய மனசில் என்ன இடம் இருந்ததோ, அந்த இடத்தில் வில்வநாதன் வந்து இருந்து கொண்டான்! உடல், பொருள், ஆவி என்று இந்த உலகத்திலே ஒரு பேச்சு இருக்கிறதே அப்படி, எல்லாம் வில்வநாதன் தான் என்று இருக்கிறார்கள் உன் அப்பா! அவர்களுடைய மனசு என்ன ஆகும் என்பதை நினைத்தால் — இல்லை — அதை நினைத்துப் பார்க்க முடியவில்லை!''

''அம்மா! இதற்காகவா இவ்வளவு குழப்பம்? இதற்காகவா இவ்வளவு தூரம் ஏக்கம் அடைந்தாய்? இல்லை. அதற்கு அவசியம் இல்லை. அவசியமே இல்லை. அப்பாவுடைய மனத்தில் அதிர்ச்சி ஏற்படாதவாறு நான்......''

செல்வி தனது வார்த்தைகளை முழுதும் முடிக்கவில்லை. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த ஜமீந்தாரிணி அப்படியே தலையணையில் சாய்ந்தாள்.

''அம்மா! என்ன இது? ஏன் உன்னுடைய கண் இப்படிச் சுழல்கிறது? அம்மா ஏன் இப்படி ஒரு மாதிரியாகப் பார்க்கிறாய். அம்மா, அம்மா!''

ஜமீன்தாரிணியின் கண்கள் செருகின. உதடு வறண்டது. நெற்றி யெல்லாம் குளிர்ந்தது.

''அம்மா! அம்மா! அம்மா!'' என்று கூக்குரல் இட்டாள் தாமரைச்செல்வி.

பணிப் பெண்கள் ஓடோடி வந்தார்கள். மாளிகையின் சிப்பந்திகள் எல்லாரும் பதறியடித்துக் கொண்டு வந்தார்கள். அரமனை வைத்தியர் வந்து நாடியைப் பார்த்தார்.

ஜமீந்தார் மாளிகையில் இல்லை, செண்பகவனத்துக்குச் சென்றிருந்தார் என்பது அங்கிருந்த அனைவரின் கவலையையும் நூறு மடங்கு அதிகப்படுத்திற்று.

''கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தச் செந்தூரத்தை அரை மணி நேரத்துக்கு ஒரு முறையாக நாலைந்து தடவை கொடுத்தால் சரியாகி விடும்!'' என்றார் வைத்தியர்.

அறைக்கு வெளியே கூடி நின்ற வேலைக்காரர்கள் எல்லாரும் ஆளுக்கு ஒரு விதமாகப் பேசிக் கொண்டே கண்ணீர் விட்டார்கள்!

அரை மணி நேரத்துக்கு ஒரு தடவையாக அந்தச் செந்தூரத்தைக் குழைத்து நாவிலே தடவிக் கொண்டிருந்தாள் தாமரைச் செல்வி.

இந்தச் சந்தர்ப்பத்திலே தான் அனவரதபுவனபதி செண்பக வனத்திலிருந்து திரும்பி வந்து சேர்ந்தார்! தம் மனைவிக்கு அருகிலே வந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தார், மிகுந்த துயரத்தோடு.

''செல்வி! கவலைப்படாதே. அம்மாவுக்கு மயக்கம் தெளிந்து விடும். இதற்கு முன்னால் இரண்டு தடவைகள் இதே மாதிரி வந்திருக்கிறது. இதே செந்தூரம் கொடுத்து மயக்கம் தீர்ந்து எழுந்திருந்தாள். அதனால்தான் சொல்கிறேன்!'' என்று மகளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டே தம் மனத்துக்குள் மிகவும் கவலையோடு இருந்தார் ஜமீந்தார்.

''அப்பா! முன்னால் இது போலவே வந்திருக்கிறதா?'' என்று கேட்டாள், தாமரைச் செல்வி.

''ஆமாம். இரண்டு தடவை!'' என்றார் தந்தை.

ஜமீந்தாரிணி கண்களைத் திறந்தார்.

''அம்மா!'' என்று கூப்பிட்டாள் தாமரைச் செல்வி.

கண்களை நன்றாகத் திறந்து மகளையும் கணவனையும் மாறி மாறிப் பார்த்தாள் ஜமீந்தாரிணி. ஜமீந்தார் மனைவியின் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டே அவளுடைய முகத்துக்கு அருகிலே சென்று கண்களைப் பார்த்தார்.

''ஒன்றுமில்லை... கொஞ்சம் தளர்ச்சி. அவ்வளவுதான்...''

திக்கிக் கொண்டே இந்த வார்த்தைகளை ஒவ்வொன்றாகச் சொன்னாள் ஜமீந்தாரிணி.

''அம்மா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அவளுடைய இதயத்தில் தலையைச் சாய்த்துக் கொண்டு கைகளால் அன்னையின் முகத்தை வருடினாள் தாமரைச் செல்வி.

''ஒன்றுமில்லை அம்மா .... கவலைப் படாதே!'' என்றாள் தாயார்.

வைத்தியர் உள்ளே வந்தார்.



''சூடான பால் கொண்டு வாருங்கள். அதில் இன்னொரு மருந்தைக் கலந்து கொடுக்கிறேன். அம்மாளுக்கு உடம்பு சரியாகிவிட்டது!'' என்றார் வைத்தியர்.

''அம்மாவுக்கு அதிகமாக யோசனை கொடுக்கக் கூடாது. இந்த மருந்தைச் சாப்பிட்டதும் கொஞ்சம் தூங்குவார்கள். மயக்கம் இல்லை. தூக்கம்! அரை மணி நேரம் அப்படித் தூங்கி முழித்து விட்டால் பிறகு எல்லாம் சரியாகி விடும்!'' என்றார் வைத்தியர் மறுபடியும்.

புதிய மருந்தைச் சாப்பிட்டு மனைவி தூங்க ஆரம்பித்ததும், ஜமீந்தார் தமது அறையிலே போய்ச் சோபாவிலே சாய்ந்துகொண்டே நெற்றியைப் பிசைந்தார். சற்று நேரத்தில் மகள் அங்கே வந்தாள். தந்தையின் அருகிலே உட்கார்ந்து கொண்டாள்.

''அப்பா! இதற்கு முன்பும் இரண்டு தடவை இப்படி வந்திருக்கிறது என்றீர்களே — '' என்று ஆவலும் கவலையும் நிரம்பியவளாய்க் கேட்டாள் செல்வி.

''ஆமாம், கண்ணே! முன்பு இரண்டு முறை இரண்டு விதமான மன அதிர்ச்சி அவளுக்கு ஏற்பட்டதுண்டு. அந்த இரண்டு முறையும் இப்படித்தான் மயக்கம் வந்தது! அதிலிருந்து நான் அவள் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வருகிறேன். அவள் ஒன்று சொன்னால் உடனே அதைச் செய்து வருகிறேன். மறு பேச்சுப் பேசுவதில்லை. உனக்கு நினைவிருக்குமே, எந்த வினாடியிலே அவள் குதிரையும் கழுதையும் வேண்டாம் என்றாளோ, அந்த வினாடியிலிருந்து — ''

''அப்பா! அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது!''

இப்படிச் சொல்லும்போதே செல்வியின் மொழிகள் கலங்கின.

''அப்பா! இதற்கு முன்பு இரண்டு முறை என்றீர்களே? அப்போது என்ன நடந்தது?''

''கண்ணே! அதெல்லாம் இப்பொழுது பேசுவதே தவறு. வாழ்க்கையில் உன் அம்மாவுக்கு மன அதிர்ச்சி ஏற்படும்படி இரண்டு முறை இரண்டு தவறுகள் செய்தேன். மூன்றும் முறையும் இப்பொழுது தவறு செய்து விட்டேன்!''



''அப்பா!'' என்று அழைத்துக் கொண்டே ஒரு குழந்தையைப் போலத் தேம்பினாள் செல்வி. மறுவினாடி அந்தக் கடிதத்தை எடுத்து அவருடைய கையிலே கொடுத்தாள்.

கடிதத்தை வாங்கிப் படித்த மறு வினாடி அப்படியே சுக்குநூறாக அதைக் கிழித்து எறிந்தார் ஜமீந்தார்.

''அப்பா! என்ன இது?''

''எனக்குத் தெரியாத செய்தியைச் சொல்லுவதா யிருந்தால் சரி. எனக்குத் தெரிந்த செய்திதானே இது!'' என்று சொல்லும் போதே, உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ஒரு நிதானத்தை வரவழைத்தார் ஜமீந்தார் தமதுகுரலில்.

''அப்பா! உங்களுக்கு இது தெரியுமா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் செல்வி.

''தெரியும் அம்மா! இந்தச் செய்தியும் தெரியும். இந்தக் கடிதத்தின் கையெழுத்தும் எனக்குத் தெரியும்!''

''அப்படியா! இக்கடிதத்தை எழுதியது யார் என்று கூடத் தெரியுமா?''

''தெரியும் அம்மா. அதனால்தான் இதை இப்படிக் கிழித்து எறிந்து விட்டேன்!'' என்றார் புவனபதி.

''அப்பா நான் நினைத்தேன், நம்முடைய மாளிகையில் உள்ள யாரோ ஒருவர்தான் இந்த மாதிரி ஒரு மொட்டைக் காகிதம் எழுதி....''

மகள் அந்த வாக்கியத்தை முடிக்கும் முன்பாக ஜமீந்தார் குறுக்கிட்டார்.

''கண்ணே! இந்தக் கடிதத்தை எழுதியது வல்லாள வேலர் என்று நினைக்கிறாய். இல்லை. இது வல்லாள வேலனின் கையெழுத்தில்லை! இதை எழுதியது யார் என்று உன்னால் ஊகிக்கவே முடியாது! நீ அப்படி ஊகிக்கவும் வேண்டாம் அம்மா! அதை மறந்து விடு!''

இப்படிச் சொல்லி விட்டு மௌனமாக இருந்தார் ஜமீந்தார். அந்த மௌனத்துக்கு மத்தியில் இரண்டு துளிக் கண்ணீர் விழியின் கோடியிலே நின்றது.

''அப்பா! அப்பா! என்ன இது?''

இவ்வாறு கேட்டுக் கொண்டே, அடக்க முடியாமல் பெருகிய கண்ணீரோடு தேம்பித் தேம்பி அழுதாள் செல்வி. மகளுடைய கண்ணீரைக் கண்டதும் ஜமீந்தார் தமது மனத்தைத் திடப்படுத்திக்கொண்டார். சொன்னார்:

''கண்ணே! நீ இப்படிக் கலங்கலாமா? இவ்வளவு கோழையாக இருக்கலாமா? மனசைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டாமா?'' என்று சொல்லி மகளுடைய கண்களைத் துடைத்தார் தந்தை.

''செல்வி! வாழ்க்கையில் முதலாவது பாடத்தை இப்பொழுதுதான் படித்துக் கொண்டிருக்கிறாய். முதலாவது பாடம் எப்பொழுதுமே கஷ்டமான பாடமாகத்தான் இருக்கும் அம்மா!''

ஜமீந்தாருடைய குரல் கம்மிற்று.

''அப்பா! எனக்காக நீங்கள் இனிமேல் கவலைப்படவே கூடாது, அப்பா. நீங்களும் சரி, அம்மாவும் சரி இனி எந்த விதமான அதிர்ச்சியையும் தாங்க முடியாத நிலைமை. அதனால்தான் இத்தனை உறுதியோடு சொல்கிறேன். என்னுடைய எதிர்காலத்தை நான் நிர்மானம் செய்து கொண்டு விட்டேன். இனி அதைப் பற்றி உங்களுக்கும் அம்மாவுக்கும் எவ்விதமான கவலையும் கூடாது!''

மகளுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அளவுகடந்த வாஞ்சையோடு புன்முறுவல்செய்தார் ஜமீந்தார்.

''கண்ணே! என்ன சொல்லுகிறாய் நீ? எனக்குப் புரியவில்லையே!'' என்றார் புவனபதி.

செல்வி சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு சொன்னாள்:

''அப்பா! செண்பகநாயகி திருவிழாவுக்கு இன்னும் சில வாரங்கள் தான் இருக்கின்றன. அதற்குள் நீங்கள் என்னுடைய திருமணத்தை முடித்து விட வேண்டும். இந்த ஆண்டுத் திருவிழாவுக்கு என்னோடு நீங்களும் அம்மாவும் உங்கள் மாப்பிள்ளையும் ஒன்றாக வந்து பூரணமான சந்தோஷத்தோடு விழாவைக் கொண்டாட வேண்டும்!''

''செல்வி! கடந்த சில மாதங்களாக நான் உன்னுடைய மண வாழ்க்கையைப் பற்றி ஏதேதோ கற்பனைகள்செய்து கொண்டிருந்தேன் அம்மா! உன்னுடைய வாழ்க்கைச் சித்திரத்தை நான் ஏதேதோ வர்ணங்களைக் கொண்டு என்னுடைய மனசிலே வரைந்து கொண்டிருந்தேன்! செண்பகவனத்துக்குச் சென்று எல்லாவற்றையும் நேரிலே பார்த்து விட்டேன். இந்தக் கடிதத்தில் சொல்லியுள்ள நடப்புக்களை யெல்லாம் கண்ணால் பார்த்தாயிற்று! அந்த நிமிஷத்திலிருந்து, அந்த வினாடியிலிருந்து..''

''அப்பா! அதெல்லாம் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள்!'' என்று இடைமறித்தாள். மேலும் சொன்னாள்:

''அப்பா! இன்றைக்கே நம்முடைய குருக்களைக் கூப்பிட்டு அனுப்புங்கள். நல்ல நாளாகப் பார்த்துத் திருமண நாளை உறுதிப்படுத்துங்கள். நான் பொன்னுத்துரையை மணப்பது என்று தீர்மானித்து விட்டேன் அப்பா!''

ஜமீந்தார் எந்த விதமான வியப்பும், குழப்பமும் அடையவில்லை. முகத்தில் எத்தகைய விபரீத உணர்ச்சிகளும் ஓடவில்லை. மௌனமாக ஒரு வினாடி

மகளையே பார்த்தார். அவளுடைய கண்களையே கூர்ந்து நோக்கினார். அந்தப் பார்வையில் ஆயிரம் கேள்விகளும் ஆயிரம் பதில்களும் மின்னல் வீசின.

''சரி, உன்னுடைய தீர்மானப்படியே ஏற்பாடு செய்கிறேனம்மா! உனக்கு என்னுடைய ஆசீர்வாதம்!''

இப்படிச் சொல்லி விட்டு அறையிலிருந்து ஓர் இயந்திரத்தைப் போல வெளியே வந்தார் ஜமீந்தார். ஏலமலைக்கும், முருகபாண்டிபுரத்துக்கும் ஆட்களை அனுப்பி விட்டு, குருக்களுக்கும் தகவல் சொல்லியனுப்பினார். பிறகு மனைவியின் அறைக்கு வந்து கட்டிலின் அருகிலே உட்கார்ந்து கொண்டார்.

மருந்தினால் ஏற்பட்ட தூக்கத்திலிருந்து கண்களை விழித்துப் பார்த்தாள் ஜமீந்தாரிணி.

''எனக்கு ஒன்றுமில்லை, கண்ணே! கவலைப்படாதே!'' என்று மகளிடம் சொல்லி விட்டுக் கணவருடைய முகத்தைப் பார்த்தாள் ஜமீந்தாரிணி. அப்போது அவளையும் மீறி அவளுடைய கண்கள் கலங்கின.

''ஏன்! ஏன் கலங்குகிறாய்?''

மனைவியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார் ஜமீந்தார். அதில் சூடு இருந்தது.

''நீ கவலைப்படுவதற்கு ஒன்றும்இல்லை. எல்லாம் சரியாகி விட்டது. நீ இனிமேல் நிம்மதியாக இருக்க வேண்டும். தெரிந்ததா? எதைப் பற்றியும் கவலை இல்லை. பெற்றோர்களைப் புரிந்து கொள்ளக்கூடிய வயதும் மனத் தெளிவும் மகளுக்கு வந்து விட்டது!''

ஜமீந்தார் இப்படிச் சொன்னதும் கணவருடைய முகத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டே ஜமீந்தாரிணி சொன்னாள்:

''நீங்கள் மனசை அலட்டிக் கொள்ளாமல் இருந்தால்தான் எனக்கு நிம்மதி. கோபதாபத்துக்கு இடம் கொடுக்காமல் அமைதியோடு இருந்தீர்களானால் நான் எழுந்து நடமாட ஆரம்பித்து விடுவேன்!''

வியக்கத்தக்க ஒரு தெளிவோடும் உறுதியோடும் இந்த வார்த்தைகளைச் சொன்னாள் ஜமீந்தாரிணி. அனவரதருக்கு இதயம் மலர்ச்சி அடைந்தது.

''பூவல்லி! உனக்கும் எனக்கும் எவ்விதமான குழப்பமும் கவலையும் இருக்கக் கூடாது என்று மகளே எல்லாவற்றையும் தீர்மானம் செய்து சொல்லி விட்டாள்!'' என்றார் அனவரதர்!

கணவரையும் மகளையும் மாறிமாறிப் பார்த்தாள் ஜமீந்தாரிணி.

''அம்மா! பொன்னுத்துரைக்கும் எனக்கும் கல்யாணத்தை உறுதி செய்யும்படி அப்பாவிடம் சொல்லி விட்டேன். இந்தத் திருவிழாவுக்கு நாம் நான்குபேரும் போகவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன் அம்மா!''

அது தைரியமோ, தெளிவோ, ஊக்கமோ தெரியவில்லை, இது வரை படுத்திருந்த ஜமீந்தாரிணி அப்படியே நிமிர்ந்தாள்! அவளுடைய கண்கள் இரண்டும் படபடத்தன.

''அம்மா! பூரணமான திருப்தியோடு முழு மனசோடு இப்படிச் சொல்லியிருக்கிறேன் அம்மா! நானாகவே செய்த முடிவு இது!''

''செல்வி! இதெல்லாம் உண்மைதானா? நான் விழித்துக் கொண்டுதானே இருக்கிறேன். கனவு காணவில்லையே!''

''அம்மா! அர்த்தம் இல்லாத உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பது பைத்தியக்காரத்தனம் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டேன். யார் யார் எப்படி வாழ வேண்டுமோ அதுதான் அவரவர்களுக்கு முறை. துள்ளித் திரிகிற மயிலையும் மானையும் கொண்டு, மாடு பூட்ட வேண்டிய வண்டியிலே பூட்டுவது தவறு என்று முன்பொரு நான் சொன்னேன். அதையேதான் இப்பொழுதும் சொல்கிறேன். ரதத்தை இழுக்க வேண்டிய குதிரையை நடனம் ஆடு என்று சொல்வதும் தவறுதான்! சிங்கம்புத்தூர் ஜமீனுக்கு உரிய இளவரசி நான். என்னுடைய எதிர்கால வாழ்வுக்கு எத்தனையோ பொறுப்புக்கள் உண்டு. அந்தச் சூழ்நிலைக்கு உரிய முறையிலேதான் என் வாழ்க்கையை நான் அமைத்துக் கொள்ள வேண்டும்.''

மகள் இப்படிப் பேசும்போது ஜமீந்தாரிணியின் முகத்தில் குழப்பம் இல்லை. ஏதோ ஒரு கவலையின் கீற்று அந்த முகத்திலே தெளிந்தது. அதைப் புரிந்து கொண்டு மறுமொழி பேசினாள் செல்வி:

''அம்மா! அன்பு என்பது தானாகத் தோன்றுகிற உணர்ச்சி என்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் பயிற்சியினாலும், அறிவின் ஆட்சியினாலுங்கூட அன்பை வளர்த்துக் கொள்ள முடியும் அம்மா! அதை நன்றாக உணர்ந்து விட்டேன். அதனால் அதை நிறைவேற்றுவதில் எனக்கு ஒரு தனியான மகிழ்ச்சி இருக்கிறது!''

ஜமீந்தாரிணியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. அது ஆனந்தம் என்பதைத் தெளிவாகக் கண்டார் ஜமீந்தார்! அவருடைய கண்களும் கலங்கின!

''மாமா!'' என்று குரல் கேட்டது. பொன்னுத்துரை அவசரம் அவசரமாக அறையினுள் நுழைந்தான்! (தொடரும்)

அறிவுக்கு அப்பால்.

கோமதி சுப்பிரமணிய



வேதனை தாங்காத வானம் இடிததும், படபடவென வெடித்தும் தன் கோபத்தைக் கொட்டிக் கொண்டிருந்தது. மூடிக் கவிந்த இருள் மேகங்கள் மழையாகப் பூமியில் பொழிந்து கொண்டிருந்தது.

உள்புறம் வெளிப்புறம் எனப் பாகுபாடற்ற தன்மையிலே வீட்டுக்குள்ளும் வருண பகவானின் கருணை கூரை வழியாகவும் முற்றத்தின் வழியாகவும் பொங்கிப் பொழிந்துகொண்டிருந்தது.

ஒரே பொருள் ஒரே சமயத்தில் சிலருக்கு அவசியமாகவும் சிலருக்கு அவசியமற்ற தன்மையாகவும் சிலருக்கு வேதனையும் வெறுப்பையும் தரக் கூடியதாகவும் அமைந்து விடுகிறது.

சாப்பாட்டுக்காரி வருவதற்குள் சமையலை முடித்து அடுக்கிக் கொடுத்து விட வேண்டுமென்ற பரபரப்பில் சமையலை முடித்துக் கொண்டிருந்த தேவானைக்கு, வீட்டுக்கு வெளியே மட்டும் பொழிந்து செழுமையைச் சேர்க்க வேண்டிய மழை நீர், வீட்டுக்குள்ளும் வடிந்து வேதனை தருவதைத் தாங்க மாட்டாது குமுறிக் கொண்டிருந்தாள். அடுப்பிலே காயும் சட்டியிலே வானத்திலிருந்து வடியும் நீர்ச்சொட்டுகள் கூரையின் மறியலையையும் தாண்டி நேரடியாக எண்ணெயில் தெறித்துச் 'சர் சர்' ரெனப் புகை கிளப்பிக் கொண்டிருக்கிறது.

கடுகு பொரிவதற்குப் பதிலாகத் தாயாரின் வார்த்தைகள் பொரிபடுவதையும் பொருட்படுத்தாது கலா, மூன்று வயது அழகுப் பதுமை வாசற்படி நடையில் அமர்ந்தவாறு எண்ணெய்ச் சட்டியின் ஜால ஓசையை ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். அகலத் திறந்து விழித்த கண்களுக்குள் வானத்து நீலமெல்லாம் வந்து கவிந்த பளபளப்பு.

'சர், சர்' ரெனக் குமுத வாயினின்றும் ஓசை யெழுப்பி எதிரொலி தந்து கொண்டிருந்த மகளை எரித்து விடுவதைப் போல் நோக்கினாள் தேவானை.

''கலா! உனக்கு எத்தனை தரம் சொல்வது. வேலை செய்யும்போது தொந்தரவு தரக் கூடாதென்று? அடுப்பை விட்டு அப்பாலே நகரு. எண்ணெய்த் துளி மேலே தெறிக்கப் போகுது'' என்று அதட்டினாள். தாயாரின் அதட்டலுக்குப் பயந்த கலா சற்றே பின்புறம் நகர்ந்தவாறு மீண்டும் தீச்சட்டியின் ஓசையில் மூழ்கி விட்டாள்.

எரிகிற தீயை முன் இழுத்து விட்டு, கனல் நிறைந்த அடுப்பைத் துணியின் துணையோடு இரு கைகளாலும் அணைத்துப் பிடித்துச் சற்றுத் தள்ளி வைத்து வருணனின் அட்டகாசத்தில் அகப்படாத இடமாகத் தேடிச் சமையலைத் தொடர்ந்தாள் தேவானை.

சட்டியின் சத்தம் அடங்கியது. வேடிக்கை பார்த்த விளையாட்டுணர்ச்சியும் ஒடுங்கி விடவே கலாவால் பொறுக்க முடியவில்லை.

''அம்மா... அடுப்பை முன்னே இடத்திலேயே வையும்மா. சத்தம் நல்லாயிருக்கு...''

குழந்தைகளின் விசித்திரப் போக்கைப் பற்றி அவர்கள் மன எண்ணங்களைப் பற்றிப் புரியாதவளல்ல, தேவானை. கலாவின் ரசனை உணர்ச்சி வளர்வதற்கே காரணமானவள் தேவானைதான். குழந்தைப் பருவத்திலேயே எல்லாவித அறிவையும் புகுத்தி வளர்க்க வேண்டும் என்ற கருத்தோடு தன் பெண்ணை வளர்த்து அவளது விளையாட்டுப் போக்கையும் வளர்த்தவள் தேவானை.

இன்று இருந்த பரபரப்பில் தேவானையால் குழந்தையின் கட்டித்தனத்தை — அவளது ரசிக மனத்தின் குறும்புத்தனத்தைத் தாங்கக் கூடியவளாக இல்லை.

''கலா! முன் கட்டுப் பக்கம் போ. ரெண்டுங்கெட்டான் நேரத்தில் என்னைத் தொந்

தரவு செய்யாதே'' எனக் கடிந்து பிடிவாத மாக முன்கட்டுப் பக்கம் அனுப்பி வைத்தாள்.

வெளியே வீசிய சுழற்காற்றின் வேகம் கூரை வழியாகவும், முழுதும் மூட முடியாத நிலையிலுள்ள ஜன்னல் கதவுகளின் வழியாக வும் பாய்ந்து நெருப்பைச் சீராக எரியவிடாது ஏற்படுத்திய தொல்லைகளையும் மீறிச் சமை யலை ஒருவாறு முடித்து விட்டாள் தேவானை.

''கலா! கலாக்கண்ணு! ரேழியிலே கவிழ்த்து வைத்திருக்கும் பாத்திரங்களை எடுத்து வாம்மா. அம்மா தொடச்சுத் தருவேனும். நீ அப்பாவுக்குச் சாதம் எடுத்து வைப்பியாம்....''

சாதத்தைத் தட்டத்தில் எடுத்து ஆறவிட்டுக்கொண்டே தன் பெண்ணுக்குக் குரல் கொடுத்தாள். குரல் கொடுத்த இரண்டு நிமிஷங்களுக் கெல் லாம் அடுக்குப் பாத்திரம் கலகலக்கும்; இரண்டு மூன்றாக ஒன்றன் மேல் ஒன்றாக இருகைகளாலும் ஏந்திப் பிடித்து அன்னம் போல் அழகு நடை போடும் கலா வின் நிழல் வரவேயில்லை.

''கலா...கலா...!''

பதிலேயில்லை.

''அடி கலா....''

அதற்கும் குரல் இல்லை.

சாம்பாரைச் சாதத்தோடு கலந்து ஊறிக் கொண்டிருந்த கரண்டியைத் தட்டத்தில் வைத்து விட்டு அவளே முன்புறம் வந்தாள்.

தாழ்வாரத்து ஈரச் சதசதப்பில் குழந்தை நடக்க வேண்டாம். 'சமர்த்தாக இரு' என்று குழந்தையிடம் சொல்லி விட்டுப் பாத் திரத்தையும் தானே எடுத்துவந்துவிட முன் புறம் வந்தாள்.

''கலா...!''





கொழும்பு கல்கி ஏஜண்ட் திரு வயஸ் அவர்களின் புதல்வர் திரு பீட்டர் அலோஸியஸ் கவிச் செல்வனுக்கும் சௌ மேரி அம்புஜா தனமயத்துக்கும் மயிலாப்பூர் சாந்தோம் சர்ச்சில் வைதீக முறைப்படி மே பத்தாம் தேதி திருமணம் நடைபெற்றது. பிறகு கத்தோலிக்க இன்ஸ்டிட்யூட்டில் நடைபெற்ற வரவேற்புக்கு நண்பர்களும் உறவினர்களும், பிரமுகர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

வானத்து இடியோசையையும் மீறி எழுந்த தாயாரின் குரலோசையைக் கலா கேட்கவேயில்லை. வானமும் வையமும் ஒன்றாய் இணையும் கம்பிச் சரங்களுக்கு ஊடாக நின்று ஊசியாய்த் துளைக்கும் குளிரின் வெடவெடப்பையும் மறந்து ஓடும் முற்றத்து மழை நீரில் அடுக்கடுக்காய்க் கப்பல்களை மிதக்க விட்டுக் கொண்டிருந்தாள்.

''கலா....அடி நாசகாரி.''

தாயாரின் குரல் இலேசாகக் காதில் விழுந்திருக்க வேண்டும். சடக்கெனத் திரும்பி ஓடி வந்து சரம் சொட்டச் சொட்டத் தாயின் காலைக் கட்டிக் கொண்டாள்.

''அம்மா, இனிமே போகமாட்டேம்மா. இனிமே போலே மாட்டேம்மா...''

கோபக் கனல் சிந்திய தாயின் கண் பார்வைக்கஞ்சி அவள் கால் முட்டுக்குள்ளேயே தலையைப் பதித்தவாறு, ''என்னோட எல்லாக் கப்பலிலும் நிறையப் பொருள் ஏத்தி அனுப்பியிருக்கேம்மா...நிறைய...நிறைய... ரொம்ப ரொம்ப லாபம் வரும்....'' தாழை மடலொத்த தன் இரு கரங்களையும் நீட்டித் தனக்கு வரப்போகும் லாபத்தை அளந்து காட்டினாள். தாயின் உள்ளத்தே கனிந்து கொண்டிருந்த சினத்தை அன்பாய்க் கனியச் செய்யப் பேசிய பேச்சுக்கள்.

''வயதுக்கதிகமான அறிவைப் பெற்றவள் என் குழந்தை'' என்று தேவானையின் கணவர் அடிக்கடி பெருமையாய்ப் பேசுவார். தேவானையும் அதை ஏற்று மகிழ்ந்து அறிவைப் 'பெற்று'த் தந்த பெருமையில் பூரித்த நாட்களும் உண்டு.

ஆனால் அறிவு அத்தனையும் இப்படி விஷமமாகவும், விளையாட்டு அத்தனையும் வேதனையுமாக முடிந்தால் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பது? அறிவின் வளர்ச்சிக்குத்தான் ஒரு வரமுறை வேண்டாமா? எல்லை காணாத வளர்ச்சி எல்லையில்லாத துன்பங்களையல்லவா தருகிறது. இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் இவள் தொல்லையைச் சமாளிக்கும் பொறுப்பே பெரும் சுமையாக முடிந்து விடும் போலிருக்கிறதே.

காலைச் சுற்றிய பாம்பை உதறிவெறிவதைப் போல் குழந்தையின் தளிர்க் கரத்தைப் பற்றி யெறிந்தாள். மழையில் நனைந்த சரமும், தாயாரின் கோபமும் தாள மாட்டாத தளிர் மேனி வெடவெடத்தது. மழையிலே நனைந்து விட்ட அழகுச் சப்பரம் அசைந்து நடந்து கொடிக் கயிற்றில் தொங்கிய துண்டை எடுக்க உன்னி உன்னிக் குதித்தது. அவள் அப்படிக் குதித்தபோதெல்லாம் தலையிலும் உடம்பிலும் நிறைந்து நின்ற நீர் பூச்சிதறலாகச் சுற்றிலும் தெறித்தது. மற்றொரு சந்தர்ப்பமாக இருந்தால் அந்த அழகுக் காட்சியின் ரசனையிலே மனம் நெகிழ்ந்து போவாள் தேவானை. ஆனால் அன்று காலையில்தான் அவள் கணவர் தேவானைக்குக் குழந்தையை வளர்க்கத் தெரியவில்லையென்று குறை கூறியிருந்தார்.

'மனம்போக்குப்படி வளர்ப்பதாக என்னைக் குழந்தையைப் பிடிவாதக்காரியாய் வளர்த்து விட்டாய்' என்ற குற்றச்சாட்டு மனத் தளத்தில் வந்து தேங்கின.

காலையில் தேவானையின் கணவர் ஆபீசுக்குப் புறப்படுகிற நேரம். பேனா மேஜை மீது இல்லாது தேடியபோது, தந்தையின் பேனாவைக் கையில் பிடித்தபடியே கெக்கலி கொட்டிச் சிரித்தாள் கலா.

'குழந்தை எடுக்கக்கூடிய பொருள் இன்னதுதான் என்ற வரமுறையே கிடையாது இந்த வீட்டிலே' என்று இரைந்தவர் பேனாவைத் தந்து விடும்படி கேட்டார்.

அவருக்குக் கலா பதில் சொன்னாள்:

''எனக்கு நிறைய எழுத வேண்டிய வேலை இருக்குப்பா. எழுதி முடிச்சதும் சாயங்கால மாகத் தருவேன். இப்ப நீ ஆபீசுக்குப் போ'' என்று சமத்காரமாகப் பேசிய மகளைக் கட்டியணைத்து மகிழ்வைச் சொரிந்தாள் தேவானை.

'எனக்கு நிறைய எழுதவேண்டிய வேலை இருக்கிறது' என்று கூறிய பெண்ணின்கற்பனை வளத்தை எண்ணி வெண்ணிப் பெருமைப் பட்ட மனத்திலேதான் அந்தச் சொல் சவுக்கடியாக விழுந்தது.

''குழந்தையை வளர்க்கத் தெரியாது பிடிவாதக்காரியாக வளர்த்து விட்டு இதிலே பெருமை வேறு?''

எத்தனை அலட்சியமாகக் கேட்டு விட்டார்? எத்தனை அவமானமாகப் பேசி விட்டார்? அவளுக்குக் குழந்தை வளர்க்கத் தெரியாதாமே.....!

காலையில் தலையில் விழுந்த குட்டு; குழந்தைக்குச் சுரம் வந்து விடப் போகிறதே என்ற பயம்; சுரம் வந்தால் அதற்கு அவளது கவனக் குறைவுதான் காரணமென்று கணவர் சொல்லப் போகும் பழிச் சொல் தரப்போகும் வேதனை......

எல்லாமாய்ச் சேர்ந்து புது மனம் பெற்ற தேவானை குழந்தையைப் பரபரவென இழுத்துத் தலையைத் துவட்டிக் காய்ந்த உடை மாற்றினாள்.

அடுத்தாற் போல் அம்மா, தன் கதுப்புக் கன்னத்தில் முத்தமிட்டு, 'சமர்த்தா விளையாடு' எனச் சொல்லிப் பொம்மைகள் பக்கத்தில் உட்கார வைப்பாள் என எதிர்பார்த்த கலா திடுக்கிட்டாள். முகத்தில் ஏற்றிய கடுமையைக் கடுகளவும் குறைக்காமல் சாமான்கள் அறைக்குள் இழுத்துச் சென்று...

''ஐயோ அம்மா இனிமேல் தப்புச் செய்யலேம்மா. அம்மா....அம்மா...'' தாயின் கரத்திலே முகத்தைச் சாய்த்துத் தொங்கினாள்.

தேவானை வாயே திறக்கவில்லை. ஏன், குழந்தையின் முகத்தையே ஏறிட்டுப் பார்க்கவில்லை.

அவள் வளர்த்த விதம் — பிடிவாதக் குழந்தை — என்னென்னவோ வார்த்தைகள் சக்கர வட்டம் அடித்தது. குழந்தைகளின் விளையாட்டு உணர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தெரியாத மனிதர் என்ன மனிதர்? என் கலா பிடிவாதக்காரியா? யாருக்கும் அடங்காத குழந்தையா?

இல்லை. என் கலா பிடிவாதக் குழந்தையில்லை. அவள் அடக்க ஒடுக்கமானவள். என் சொல்லுக்கு அடங்கி நடப்பவள். மாலையில் அவர் ஆபீஸிலிருந்து வந்து பார்க்கட்டும். என் சொல்லுக்கடங்கி என் குழந்தை இன்று பகல் பொழுதத்தனையும் — தன் விளையாட்டு உணர்ச்சிகள் அத்தனையும் அந்த அறைக்கே அர்ப்பணித்து விட்டாள் என்று சொல்லப் போகிறேன். தாம் சொன்னது தவறாய்ப் போனதை நினைத்துத் தலைகுனிந்து சிரிப்பார்: சிரிக்கட்டுமே.....

''அம்மா. அம்மா. இனிலே இல்லேம்மா. உங்கிட்டே மன்னிப்புக் கேட்கிறேம்மா...''

மூன்று வயதுக் குழந்தை பேசத் தகுந்தது. பேசத் தகாததையெல்லாம் பிதற்றித் திரியும் வயதுக் குழந்தை எத்தனை கண்யத்தோடு செய்த தவற்றுக்கு மன்னிப்புக் கேட்கிறாள். இந்த உயரிய பழக்கத்தைச் சொல்லி வைத்தவள் யார்? அவளுக்குக் கிடைத்த பட்டமோ? 'குழந்தை வளர்க்கத் தெரியாதவள்!......'

''என்னிடம் மன்னிப்புக் கேட்டுப் பயனில்லே. உன் அப்பா வந்தபின் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வர வேண்டும்.''

''ஐயோ அப்பா வரும் வரையா... சாயந்திரம் மட்டுமா?''

குழந்தையின் சொல்லிலே தோய்ந்த ஏக்கம் அவள் நெஞ்சிலும் பிரதிபலித்தது.

ஆடித் திரியும் இளந் தென்றலைப் பிடித்து நிறுத்த முடியுமா? நிறுத்துவதுதான் நியாயமா? ஓடித் திரியும் இளங்கன்றை அறைக்குள் அடைத்தால் நீதியா? அதுதான் முறையா? பறந்து திரியும் பாலகியைக் கூட்டுக்குள் அடைப்பது நேர்மையா? பாபமில்லையா?

குமுறித் தவித்த மனம் கேட்கும் கேள்விகளாலும், கலங்கிய கண்களுடன் முகம் கவிந்து நின்ற குழந்தையின் ஏக்கம் நிறைந்த பார்வையாலும் அவள் உள்ளத்து உறுதியை அசைக்க முடியவில்லை.

தன் உறுதி தளருவதற்கு முன்னே, இறுகப் பற்றியிருந்த குழந்தையின் கரத்தைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு அறைக்குள் தள்ளி வெளிக்கதவை இழுத்தாள். பின்னாலிருந்து பிஞ்சுக்கரம் கதவை மூட முடியாதபடி இழுத்தது.

''உனக்கு இத்தனை பிடிவாதமா?'' எனப் பிடிவாதத்தைப் பெற்ற முரட்டு மனம் முரண்டியது. இரண்டே நிமிஷங்களில் தோல்வியுற்ற இளந்தளிர் தரையிலே சரிந்தது. தோல்வி யிலும் தோற்கடித்தவள் பெயரை உச்சரித்தவாறே 'அம்மா' வென அலறியவாறு தரை மீது சாய்ந்தது. குழந்தை விழுந்த வேகத்தில் அறைக்குள்ளிருந்த இரண்டொரு சாமான்கள் கலகலத்தன. பிடிவாதத்தை நிறைத்திருந்த தேவானையின் மனமும் கூடக் கலகலத்தது.

''அம்மா! இனிமேல் இல்லேம்மா! இனிமேல் தப்புச் செய்யலேம்மா. இனிமேல் இல்லேம்மா....'' என்ற குரல் ஒலி தாயின் மனத்திலே மோதி மோதிக் தடுமாற்றத்துள் தள்ளியது.

''முடியாது. இன்றைக்கு அவள் பிடிவாதத்துக்குச் செவி சாய்ப்பதே இல்லே.''

சமையல் கட்டுப் பக்கம் நகர்ந்து விட்டாள்.

பூமியை அதிரடிக்கும் இடியோசை ஓய்ந்த பாடில்லை; 'அம்மா, அம்மா!' என்ற அலறலோடு அறைக் கதவைப் பிடித்துக் குலுக்கும் நாதாங்கியின் ஓசையும் அடங்கிய பாடில்லை; தேவானையின் உள்ளத்துப் போராட்டமும் ஒடுங்கிய வகையில்லை.

'அம்மா' என்ற கிண்கிணி நாதத்தோடு கலந்து வெளியாகும் சோக இசை பாசத்தின் நரம்புகளை நெருடித் தேவானையின் வைராக்கியத்தை நெகிழ வைத்தது; ஆனால் தொடர்ந்து கதவைப் பிடித்து உலுக்கும் முரட்டுக் குணம், பிடிவாத சுபாவம் நாதாங்கியைக் கலகலக்க வைக்கிற வேகத்திலே, பாசத்தை வழிமடக்கச்சென்று விடுகிறது. முன்னேவைத்த காலைச் சடக்கெனப் பின்னுக்கிழுத்துக் கொள்வாள்.

இரக்கம் நிரம்பிய உள்ளத்துக்கும் அரக்கத் தன்மை வாய்ந்த உள்ளத்துக்கும் மாறி மாறி நடந்த போராட்டத்தின் இடையேயும் உணவுகளைப் பாத்திரத்தில் எடுத்து நிரப்பினாள்.

இரு கோமளக கரங்கள் சின்னஞ்சிறு பிஞ்சு விரல்களால் நெய்க் கிண்ணியை எடுத்துக் கவிழ்க்கும் காட்சி; கெட்டியாய்ப் பிசைந்த சாதத்திலே தயிரைக் கொட்டிக் கவிழ்க்கும் தன்மையும் கண் முன்னே வட்டமடித்தன. தாயார் எத்தனைதான் எடுத்து வைத்தாலும் நிறைவு காணுத கலாவின் அன்புக்கரம் தந்தைக்கு உணவு பரிமாறும் காட்சியின் நினைவு கண்களில் நீரை நிறைத்தன.

ஏன்தான் இத்தனை கட்டியாகப் படைத்து விட்டானே இறைவன் ?

மறுகணமே கணவரின் குற்றச்சாட்டுகள்—

'இருக்கட்டும். இருக்கட்டும். அவளது பிடிவாத குணத்தையும் முரட்டுக் கொட்டத்தையும் அடக்கி விடுகிறேனு இல்லையா, பார்ப் போமே. இன்று கலாவுக்கு முதல் பாடம்....

''அம்மா....!''

குழந்தையின் அழைப்பில் முரட்டுத்தனம் அடங்கிச் சன்னக் குரலாக மாறியிருந்தது.

'அப்படி வா வழிக்கு' என்று கறுவிக் கொண்டாள் தேவானை.

வெளியே மழையின் வேகம் சற்று அடங்கி ஓய்ந்திருந்தது. வீதியிலே மீண்டும் ஜனங் களின் நடமாட்டமும் ஆரவாரமும் தொடங்கி விட்டன. சாப்பாட்டுக்காரி கமலம் கூடை யுடன் வந்து விட்டாள்.

கதவுத் தானை விலக்கித் தேவானை பாத் திரத்தைக் கூடைக்கு உயர்த்தினுள்.

கமலத்தின் கண்கள் எதையோ துழாவின.

''ஏனம்மா! கலாக்கண்ணு எங்கேம்மா? நீங்கயேன் சாப்பாடு தூக்கி வந்தீங்க?''

தினமும் சாப்பாட்டுப் பாத்திரத்தைத் தூக்க முடியாமல் தூக்கி வருவாள் கலா. அவள் கை உயரத்துக்குச் சரியாகக் கமலம் குனிந்துகொள்ளப் பாத்திரத்தைக் கூடையில் வைத்து விட்டுக் கூடைக்காரியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டி விடும் அந்தச் சிங்காரப் பதுமையைத் தேடின.

''குழந்தை தூங்கறு. மழையிலே அலைய வேண்டாமின்னு நான்தான் தூங்க வைச் சிருக்கேன்.''

தேவானை கூறிய பொய்யை நம்ப மாட் டாதவள் போல் உட்புறம் நோக்கினுள் கமலம். பரபரக்கும் பட்டாம்பூச்சி பகல் நேரத்தில் ஓய்ந்து தூங்குவதாவது என்ற சந்தேகம் மனத்திலே வட்டமடித்தது.

சுற்றுச் சூழலில் கண்களைச் சுழல விட்டுக் கலாக் கண்ணைத் தேடி ஓய்ந்துவிட்ட கமலம், ''சரியம்மா, நான் வரேன். நேற்றுக் கலாக் கண்ணு தாமரைக் கொடி வேணுமின்னு என்னிடம் கேட்டிருந்தா. இந்தாங்க இதைக் குழந்தையிடம் கொடுத்திடுங்க'' என்றுள்.

கொடியோடு துவளும் தாமரை மொட் டைக் கையில் திட்டிய அதே தருணம், வீட்டுக் குள்ளிருந்து. ''அம்மா!'' என்ற கலாவின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

''ஏம்மா, குழந்தை விழிச்சுக்கிட்டாப் போலே இருக்கே. எடுத்துக்கிட்டு வாம்மா. என் கலாக்கண்ணை பாத்துட்டுப் போறேன்.''

''வீட்டுக்கு வீடு நீ இப்படிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தால் சாப்பாட்டுக்காக உன் வரவை நோக்கிக் காத்திருப்பவர்கள் கொட்டாவி விட வேண்டியதுதான். போ, போ! சீக்கிரம் சாப்பாட்டைத் தூக்கிப் போ.....'' என்று விரட்டினுள்.

''அம்மா, அம்மா!'' என்ற குரல் அறைக் குள்ளிருந்து பீதியும் பயங்கரமும் கலந்து வந்து கமலத்தைப் பரபரப்புக்குள்ளாக்கியது.

''சரிதானம்மா. நீ எனக்குப் புத்தி சொல்ல வந்தது. குழந்தை அம்மா, அம்மான்னு அல றித் துடிக்குது. அதைச் செவியிலே வாங்கா மல் எனக்குப் புத்தி சொல்ல வந்துட்டியாக் கும். வழியை விடு, கலாக் கண்ணைப் பார்த் துட்டுப் போயிடறேன்....''

தேவானையின் மறுப்பையும் லட்சியம் செய் யாது விடுவிடென்று குரல் வந்த திக்கு நோக்கி விரைந்தாள் கமலம்.

பதறித் துடிக்கும் குழந்தையின் அவலக் குரல் உள்ளே; வெளியே தேவானையின் மன இறுக்கத்துக்குச் சாட்சியாகக் கதவிலே தொங்கிய கனத்த பூட்டு. கமலத்துக்கு என்ன தான் தோன்றியதோ....?

''ஏம்மா, குழந்தை பயத்தாலே அலறித் துடிப்பது உன் காதிலே விழலே? இதுதான் குழந்தை வளர்க்கிற லட்சணமா?'' என்று கேட்டு விட்டுச் சும்மா நிற்காது கதவையும் திறந்து விட்டாள்.

இதுவரை அடக்கி வைத்திருந்த பிடிவாத மும் வைராக்கியமும் எங்கேதான் பறந்து சென்றனவோ! இரண்டே எட்டில் பாய்ந் தோடினுள் தேவானை, அறைக்குள்ளே. அங்கே அவள் கண்ட காட்சி—

மயக்க நிலையை அடைந்து கொண்டிருந்த குழந்தை தன் பிஞ்சுக் கரத்தை உதறித் துடித்ததோடு, ''அம்மா, பூச்சிம்மா, பூச்சி, ஐயோ அம்மா, கடிச்சுட்டுதும்மா, உன் கலாக் கண்ணு கையிலே.....'' என்று அலறினுள்.

குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு அவள் காட்டிய திசையிலே பார்வையை வீசி னுள். ''ஐயோ!''

ரோஜா மலர்ச் செண்டைத் தீண்டி விட்டு விரைந்து கொண்டிருந்த கருந் தேள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரைந்து கொண்டிருந்தது.

பெற்ற வயிறும் பெரும் குடலும் பதறிச் சுருண்டது. ''ஐயோ, என் கண்ணே!'' என்று அலறித் துடித்தாள் தேவானை.

கூடைக்காரி கமலம் முதல் வேலையாகத் தேளை அடித்து விட்டு டாக்டர் வீட்டுக்கு விரைந்தோடி அழைத்து வரும் வேளை...

கட்டியும் சுறுசுறுப்பும் நிறைந்த கலாவின் ஆவி சிறிது சிறிதாக ஒடுங்கிக் கொண்டிருந் தது. செக்கச் சிவந்த மலர்க்கரம் வலியின் வேதனை தாளாது பவளமாய்ச் சிவந்து பொது பொது வென உப்பி விட்டிருந்தது. கனத்து வீங்கிய அந்தக் கரத்தைத் தூக்கிக் குவித்து மேலே உயர்த்திக் குழந்தை ஆண்டவனிடம் ஏதோ முறையிட்டுக் கொண்டது:

''ஆண்டவனே! ஒரு குழந்தையையே வைத்துக் காப்பாற்றத் தெரியாத, வளர்க்க முடியாத என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இனி வேறு குழந்தையைக் கொடுத்து இம்சை செய்யாதே.....''

குழந்தை ஆவி ஒடுங்கி வந்த அந்த வேளையி லும் அதன் அறிவு ஒடுங்காத சொல்லைக் கேட்டுத் துடித்து விட்டாள் தேவானை.

அறிவின் துடிப்பு அடங்கி விட்டது; ஆனால் அது உதிர்த்துச் சென்ற சொல்லோ அழி யாது ஆழப் பதிந்து விட்டது தேவானையின் நெஞ்சிலே.


AEI

ஏ இ ஐ ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள்


குளிர்ந்த அமைதியான ஆனந்தத்திற்கு

குறைந்த மின்சாரத்தில் மிகுந்த சக்தியுடன் இயங்குமாறு உருவாக்கப்பட்ட ஏ. இ. ஐ. ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. துல்லியமான தேர்ச்சியுடன் ஏ. இ. ஐ. விசிறிகள் தயாரிப்பதில் "இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் மின்சாரக் கருவிகள் அளிக்கும்" ஸ்தாபனத்தின் அனுபவமும், தொழில் நுட்பத்திறனும் உதவுகின்றன.

இது வெறும் பண்டம் வாங்குவதல்ல; முதலீடு செய்வதாகும்



மைத்தான் ஏ.சி. பக்ரா டி.சி. 900மி.மீ., 1200மி.மீ., 1400மி.மீ., மற்றும் 1500மி.மீ.



"டிலக்ஸ்" 400மி.மீ. டேபிள் மாடல்

- பிரித்தெடுக்கக்கூடிய பாது காப்பு மூடி.
- இஷ்டப்படி மாற்றிக்கொள்ளக் கூடியது, ஆடி வீசக்கூடியது.
- துல்லியமான வடிவமும், சம அமைப்பும் உள்ள அலுமினிய விசிறித் தகடுகள்.
- மூன்று வேக அளவுகள்.
- எனாமல் மெருகிடப்பட்ட பல மாதிரிகள்.

அஸோஸியேடெட் எலக்டிரிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

தலைமை காரியாலயம்; க்ரௌன் ஹவுஸ், 13, ராஜேந்திரநாத் முக்கர்ஜி ரோடு, கல்கத்தா-1.
கிளைகள், பம்பாய் புது டெல்லி சென்னை பெங்களூர் கோயம்புத்தூர் காகபுரி.

AEI/11A-TAM

கேடயம்

ஜெகசிற்பியன்

ஆகாத காரியமொன்றைச் செய்துவிட்ட தடுமாற்றத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தபடி பதுங்கிப் பதுங்கி நடந்துகொண்டிருந்தார் கவிஞர் தியாகபூபன்.

என்னதான் வேகமாக நடந்தாலும், அதே இடத்தில் நிற்பது போன்ற பிரமையே அவருக்கு உண்டாகியது. முன்னும் பின்னுமாக நடந்து செல்லும் ஜனங்கள் அத்தனை பேரும் தம்மைப் பற்றியே பேசுவது போலவும், தம்மையே கவனித்துச் செல்வது போலவுமான ஒரு திகில் உணர்ச்சி அவர் உள்ளத்தையும் உடலையும் கூனுறச் செய்யவே, ஒரேயடியாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நடந்தார்.

இதனால் அவருடைய மனத்தின் வேகத்துக்கேற்ப விரைந்து நடக்க முடியவில்லை. அத்துடன் ஏதோ ஒரு பெரிய பாரத்தைத் தூக்கிக் கொண்டு இருப்பதுபோன்ற உணர்ச்சி வேறு அவர் நடையின் வேகத்தை மந்தப் படுத்தியது. ஆனால் அவரது கையிலோ, தோளிலோ, தலையிலோ அத்தகைய பாரமான பொருள் எதுவுமே இல்லை. பேனாவைக்கூட வீட்டிலேயே மறந்து வைத்து விட்டிருந்தார். அது ஒன்றுதான் அவரிடம் எப்போதுமுள்ள 'கனத்த' பொருள்! பின், எங்கிருந்து இந்தப் பார உணர்ச்சி அவரை அழுத்தித் தொலைக்கிறது?


சற்றே தயங்கி நின்ற தியாகபூபன், தம் ஜிப்பா சட்டையின் வலப் பக்க ஜேபியைத் தொட்டுப் பார்த்தார். ''ஓ..... இதுதான் இப்படிக் கனக்கிறதா?'' – 'ஆமாம்' என்று அவரே பதிலுக்குத் தலையாட்டிக் கொண்டு மெல்லச் சிரித்தார்.

அது உண்மைதான். அவருடைய ஜேபியில் ஏதோ கனமாக அடைத்துத் தொங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தக் கனம், அவர் நடக்கும்போது முன்னும் பின்னுமாக ஆடிக் கலகலவென்ற ஒலியை எழுப்பியது. ''பாவிப் பயல்! நோட்டாகக் கொடு என்றால் சில்லறையாக அள்ளிக் கொடுத்து விட்டானே!'' என்று சலிப்புடன் முணுமுணுத்துக்கொண்ட கவிஞர் பயப்பிராந்தியோடு சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தார். பிறகு தம் கனத்த ஜேபியை இடுப்பு வேட்டியுடன் சேர்த்துப் பிடித்துக் கொண்டு பரபரப்போடு வேகமாக நடக்கலானார்.

சாலையின் கால்வாய் வெட்டும் பகுதியைக் கடந்து சமமான நடை பாதையில் ஏறிய கவிஞர் 'இனி ஒரு தொல்லை விட்டது' என்று நிம்மதி யடைந்தவராய், கால்களை வீசிப் போட்டு நடக்க முற்பட்ட சமயம், பின்னாலிருந்து யாரோ கைதட்டும் சத்தம் கேட்கவே திடுக்கிட்டு நின்றார். 'நம்மைத்தான் அழைக்கிறார்களா? நாம் செய்த காரியத்தை யாராவது பார்த்து விட்டார்களா? அதை நம்மிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் கைதட்டிக் கூப்பிடுகிறார்களோ?' – அவர் உடல் வேர்த்து விறுவிறுத்தது. முகம் சவமாக வெளுத்துச் சிறுத்தது. 'திரும்பிப் பார்க்கலாமா? அல்லது கைதட்டுவது காதில் விழாத மாதிரி நடந்து விடலாமா?' – யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் மீண்டும் கைதட்டும் சத்தம் கேட்டது. காலில் ஏதோ முள் குத்தி விட்டாற் போல் குனிந்து காலைத் தடவி விட்டுக் கொண்ட அவர் திரும்பிப் பார்க்காமல் நடந்தார்.

நடந்து கொண்டேயிருந்தவர், ஏதோ சாட்டை முனையால் தடுத்து நிறுத்தப்பட்டவர் போல் சடாரென்று நின்றார். படபடத்த அவர் பார்வை எதிர்நோக்கிப் பாய்ந்தது.

கதர்ச் சட்டையும் தோல் பையுமாக ஓர் அழகிய வாலிபன் எதிரே வந்து கொண்டிருந்தான். அவனுடன் ஓர் இளைஞனும், அழகிய மங்கையொருத்தியும் எதைப் பற்றியோ வெகு சுவாரஸ்யமாகப் பேசிச் சிரித்தபடி வந்தனர்.



'இது என்ன சோதனை! போயும் போயும் இவர்கள் எதிரில் வந்து சிக்கிக் கொண்டேனே!' என்று குழம்பித் தடுமாறிய கவிஞர் தம் கனத்த ஜேபியை இறுக்கிப் பிடித்துக்கொண்டு சட்டென்று திரும்பி, வந்த வழியே நடந்தார். கொஞ்ச தூரம் சென்றவர் மறுபடியும் தயங்கி நின்றார். 'சற்று முன் கைதட்டிக் கூப்பிட்டஆசாமியின் கண்ணில் பட்டுவிட்டால் என்ன செய்வது?' – மீண்டும் முன்னோக்கித் திரும்பி நடக்கலானார்.

எதிரே வந்த அந்த மூன்று பேரும் ஒரு 'பங்க்' கடைக்குச் சென்று வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டிருந்தனர்.



வாலிபர்களும் பெண்ணும் இனி அவரைச் சந்திக்க முடியாதல்லவா?

தலை குனிந்தபடி நடந்து கொண்டிருந்த கவிஞர் தமது நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, கண்களை மட்டும் உயர்த்தி அம்மூவரையும் கடந்து விட்டோமா என்பதைக் கவனித்தார். 'பங்க்' கடையை விட்டு அப்போதுதான் அகன்று வந்த அவர்கள் ஏனோ சாலையின் குறுக்கே இறங்கி மறு பக்க நடைபாதையை நோக்கி வர ஆரம்பித்தனர்.

தியாகபூபனுக்கு மீண்டும் திண்டாட்டமாகி விட்டது. குழம்பித் தவித்த கவிஞருக்குச் சடாரென ஓர் அருமையான யுக்தி தோன்றியது. சற்றுத் தொலைவிலிருந்து 'பஸ் ஸ்டாப்பிங்'கை நோக்கி வேகமாகச் சென்று, அங்கு பஸ்ஸுக்காகக் காத்து நின்றவர்களுடன் சேர்ந்து நின்று கொண்டார். அடுத்த கணம், அவருக்கு வேறொரு பயம் பிடித்துக் கொண்டது. அந்தப் பஸ் ஸ்டாண்டில் நின்றிருப்பவர்களில் யாராவது தெரிந்தவர்கள் இருந்து விட்டால் என்ன செய்வது என்ற





'அவர்கள் கண்ணில் படாமல் போய்விட முடியுமா? தப்பித் தவறிப் பார்த்து விட்டால் என்ன செய்வது? குட்டு வெளிப்பட்டு விடுமே.....! அது எப்படி வெளிப்படும்? நாம் சொன்னால் தானே தெரியும்? சற்றுமுன் நம்மைக் கைதட்டிக் கூப்பிட்டவர்கள் இவர்களாய்த்தான் இருக்குமோ? கைதட்டியது நம் பின்னாலிருந்தல்லவா கேட்டது? இவர்கள் முன்பக்கமிருந்து வருகிறார்களே! ஒருவேளை நாம் செய்த காரியத்தைப் பார்த்துவிட்டு, நமக்குத் தெரியாமல் முந்திக் கொண்டு முன்னால்போய், பிறகு நேரிடையாகவே நம்மைப் பிடித்து நிறுத்த இப்படி எதிரே வருகிறார்களோ?'

கவிஞரின் கால்கள் சிக்கித் தடுமாறின. முன்னால் போகவும் முடியாமல் பின்னால் நடக்கவும் மாட்டாமல் அல்லாடிக் கொண்டு நின்ற அவருக்குச் சடாரென்று ஒரு யோசனை தோன்றியது. மறு பக்க நடை பாதையில் யாரையோ பார்த்து விட்டது போலவும், அவரை இருக்கச் சொல்வது போலவுமான பாவனையில் கையைத் தூக்கி ஆட்டிக் கொண்டே சாலையின் குறுக்கே பாய்ந்து சென்றார். பிறகு, தாம் அங்கு வேறு யாரையோ பார்த்து ஏமாந்து விட்டது போல் அசட்டுப் புன்முறுவல் பூத்தவாறு அதே வாடையில் வேகமாக நடக்கத் தொடங்கினார். சாலையின் மறு பக்கமாக வரும் அந்த



பயம்தான் அது! பஸ்ஸை வெகு தீவிரமாக எதிர்பார்ப்பவர் போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார் கவிஞர். ஆனாலும் அவர் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. அவ்வப்போது தமது கனத்த ஜேபியைத் தொட்டுப் பார்ப்பதும் உடம்பை அப்படியும் இப்படியுமாகச் சாய்த்துப் பஸ் வருகிறதா என்று பார்ப்பது போல் 'பாவலா' பண்ணுவதுமாக இருந்தார். ஆனால் அவருடைய கவனம் முழுக்க, பின்னால் வரும் அம்மூன்று பேர்கள் மீதே கவிந்திருந்தது.

அவர்கள் பஸ் ஸ்டாண்டை நெருங்கிக் கொண்டிருந்தனர். ஏதோ இலக்கிய சம்பந்தமாக சர்ச்சை செய்த வண்ணம் அவர்கள் பேசி வருவது கவிஞரின் காதில் நன்றாக விழுந்தது. தம்மை அவர்கள் கடந்து செல்லும் வரையில் தாம் அவர்களைப் பாராதது போல் காட்டிக் கொள்ள மேலும் ஒரு குயுக்தி செய்தார்.

அந்தப் பஸ் நிலையத்துக்கு அருகில் பிரும்மாண்டமான கட்டடம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். ஆறு மாடிக்கு மேலே ஏழாவது மாடியைக் கட்டிக் கொண்டிருந்த அவர்களின் உருவங்கள் சின்னஞ் சிறியதாகத் தோற்றமளித்தன.

கைகளைப் பின்னால் கோத்துக் கட்டிக் கொண்டு அந்த உயரமான கட்டடத்தை அண்ணாந்து பார்த்தவாறு ஏதோ யோசிப்பவர் போல் நின்ற கவிஞர், தம் பக்கத்தில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்த ஒரு குமாஸ்தாவிடம் வலியப் பேச்சுக் கொடுத்தார்: ''ஏன் சார், அதோ கட்டுகிறார்களே, அந்த உயரமான கட்டடத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''பணம் உள்ளவர்கள் கட்டுகிறார்கள்: நாம் என்ன சொல்லக் கிடக்கிறது?'' என்று அலுப்புடன் பதில் சொன்னார் அந்தக் குமாஸ்தா.

வாலிபர்களும் பெண்ணும் எதுவரை வந்திருக்கிறார்கள் என்பதை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்ட கவிஞர், மேலும் பேச்சைத் தொடர்ந்தார்: ''நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் நான் கேட்ட விஷயம் வேறு. என்னதான் தேவையென்றாலும் இவ்வளவு உயரமான கட்டடங்கள் கட்டக் கூடாதென்பது என் அபிப்பிராயம். ஏனென்றால் இவை மனிதனை அவன் மனத்தளவில் சிறுமைப் படுத்தி விடுகின்றன. சின்னஞ்சிறு குடிசையொன்றின் அருகில் போய் நின்றுவிட்டு, அப்புறம் இந்த மிகப் பெரிய கட்டடத்தின் கீழே வந்து நின்று பார்த்தால் நான் சொல்வது புரியும். உயர உயரமான கட்டடங்களைக் கட்டி அதில் சின்னச் சின்ன மனிதர்களாய் நடமாடுவதில் என்ன பெருமை இருக்கிறது? நாம் செய்யும் எந்தக் காரியமும் நம்மை வெற்றி கொள்ள விடக் கூடாது. இந்தக் கருத்தை மனத்தில் கொண்டுதான் அந்தக் காலத்துப் பெரியோர்கள் இறைவனுக்குரிய கோயில்களை உயரமாகவும், மனிதர்கள் வாழும் இல்லங்களைத் தாழ்வாகவும் கட்டினார்கள். அதெல்லாம் இப்போது தலைகீழாக மாறி வருகிறது. இன்று கட்டப் பெறும் கோயில்கள் குள்ளமாக இருக்கின்றன. வீடுகளும், காரியாலயக் கட்டடங்களுமோ

வானை முட்டிக் கொண்டு போகின்றன. இதனால் மனிதன் இறைவனின் சந்நிதானத்தில் போய் நெடிய மனத்தோடு இறுமாந்து நிற்கிறான்; வீட்டிலும் காரியாலயத்திலும் குன்ற, குறுத்த உள்ளத்தோடு குன்றுந்து பணிந்து நடமாடுகிறான். தனக்குரிய பெருமைகளைத் தன் கையாலேயே அழித்து வரும் இன்றைய மனித இனத்தின் பல பைத்தியக்காரச் செயல்களில் இதுவும் ஒன்று!''

கவிஞரின் இந்த நீண்ட பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த குமாஸ்தா அவரையே சற்று நேரம் கூர்ந்து பார்த்து விட்டு, ''ஏன், சார்! உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே?...'' என்று பவ்யமான புன்முறுவலுடன் இழுத்தார்.

கவிஞருக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது. 'இது என்ன புதுத் தொல்லை' என்று குழம்பியவராய் அசட்டுச் சிரிப்புடன், ''பார்த்திருக்கலாம்; இதே பஸ் ஸ்டாண்டிலேயே பார்த்திருக்கலாம்.....'' என்று சொல்லிக் கொண்டே சற்றுத் தள்ளிப் போய் நின்று வாலிபர்களும் பெண்ணும் தம்மைக் கடந்து சென்று விட்டார்களா என்பதைக் கவனித்தார். அவர்கள் அவரைக் கடந்து வெகு தொலைவில் போய்க் கொண்டிருந்தனர்.

''அப்பாடா! ஒரு கண்டத்திலிருந்து தப்பினோம்!'' என்று முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து புறப்படத் திரும்பினார் தியாக பூபன். அதே சமயம், ஒரு பஸ் வந்து நின்றது.

''வணக்கம், கவிஞரே!''

உற்சாகமாக நடக்க முற்பட்ட தியாக பூபன் இந்தக் குரல் கேட்டுச் சட்டென்று நின்றார். பஸ்ஸிலிருந்து இறங்கிய ஒரு பருத்த ஆசாமி அவரை நோக்கிப் பெரிதாகக் கும்பிடு போட்டுக் கொண்டே ஓடி வந்தார்.

கவிஞருக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை. எதிரே வந்து நின்ற அந்த ஆசாமியைப் பேந்தப் பேந்தப் பார்த்து விழித்தார் அவர்.

''என்ன சார், இப்படிப் பார்க்கிறீர்கள்? என்னை அடையாளம் தெரியவில்லையா? நான் தான் சார், கமலநாதன்! உங்கள் கவிதைகளை முதன் முதலில் தொகுத்து வெளியிட்ட எல்லோரா பதிப்பகத்தின் உரிமையாளன்!'' என்று நெஞ்சை நிமிர்த்திக் கலகலவெனச் சிரித்துக் கொண்டே கவிஞரின் கையைப் பிடித்துக் குலுக்கினார் அந்த ஆசாமி.

''தெரியாமலென்ன? நன்றாகத் தெரிகிறது! நன்னையம்நானே?'' என்று தூக்கத்திலிருந்து விழித்தவர் போல் குழறிச் சொன்ன தியாக பூபன் தமது கனத்த ஜோபியை ஒரு கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

''கவிஞரின் ஆசியால் அடியேன் சௌக்கியமாக இருக்கிறேன். நாம் சந்தித்து ரொம்ப காலமாகிறது இல்லையா? ஆனாலும் பாருங்கள், உங்களைப் பஸ்ஸிலிருந்தபடியே அடையாளம் கண்டுபிடித்து விட்டேன்!'' என்று குதூகலச் செருமலுடன் சொன்னார்.

''இப்போது என்ன செய்கிறீர்கள்? பதிப்பகம் எப்படி நடக்கிறது?''

''நல்லபடியாகத்தான் நடந்து வந்தது. நிறைய லாபமும் வந்தது. நிறைய வீடு வாங்கினேன். ஒரு கார் வாங்கினேன். அப்புறம் அந்த ஸ்திதியிலே இருந்து பார்த்த போது பதிப்பகத் தொழிலும் அதன் வருமானமும்

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆன் மோல்கோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண தன்மையை அடைக்கி ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அநுபவங்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட அதிக வீரிய குளோரோபில் இல்லை — குழந்தைகள் அதன் பெப்பர்மின்ட் வாசனையை மிகவும் விரும்புகிறார்கள்!



CTPA-G-10 TAM.

ரொம்பச் சாதாரணமாகப் பட்டன. உடனே அதை ஏறக் கட்டிவிட்டு ஒரு ஹோட்டல் வைத்து நடத்தினேன். எண்ணி ஆறுவது மாசம் ஒரு வீடும் காரும் வந்த சுவடு தெரியாமல் போய் விட்டன. ஹோட்டலை மூடி விட்டு ஒரு லாண்டிரி திறந்தேன். தொழில் லாபகரமாக நடந்தது. அந்த லாபத்தில் ஒரு ஜவுளிக் கடையைத் திறந்து கொண்டு லாண்டிரியை மூடினேன். ஜவுளி வியாபாரம் கையைக் கடித்து விட்டது. அந்தப் புண்ணை ஆற்றிக் கொள்ள அப்புறம் ஏதேதோ பிஸினஸ்கள். இப்போது ஒரு விறகுக் கடை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறேன். சுமாரான வருமானம்; ஆனால் பாதகமில்லை. அடுத்த வருஷம் பழையபடி என் பதிப்பகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று பெரிய திட்டமிட்டிருக்கிறேன். அதற்கு உங்களைப் போன்றவர்களின் ஒத்துழைப்பு நிரம்ப வேண்டும். என்னைப் பற்றிய விஷயம் கிடக்கட்டும், சார்! என்ன கண்டைக்காய் மனுஷன்!... உங்களை இன்று பார்க்கக் கொடுத்து வைத்தேனே, அதுதான் முக்கியம். ஏனென்றால் நான் எல்லாவற்றிலும் பெரிய துரதிர்ஷ்டசாலி. பாருங்களேன், முந்தாநாள் உங்களுக்காக நடந்த அந்தக் கேடயப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உங்களைக் கண் குளிரத் தரிசிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தேன். அன்றைய தினம் பார்த்து என் கடையில் சவுக்குக் கட்டை தீர்ந்து போயிற்று. படகுத் துறைக்குப் போய் ஒரு லாரி கட்டைக்கு ஆர்டர் கொடுத்து விட்டுத் திரும்புவதற்குள் விழா முடிந்து விட்டது. அதனால்தானோ என்னவோ, இப்போது கடவுளே என் கண்ணில் புகுத்து உங்களைக் காட்டிக் கொடுத்த மாதிரி எதிர்பாராதவிதமாக இங்கே சந்தித்து விட்டேன்....''

மூச்சு விடாமல் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்த கமலநாதனின் வாயை அடைப்பது போல் சட்டென்று குறுக்கிட்டு, ''அது சரி, உங்கள் விறகுக் கடை எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார் கவிஞர்.

''அதோ, ஒரு மசூதிக் கோபுரம் இருக்கிறதே, அதற்குப் பக்கத்தில்!'' என்று கையையும் குரலையும் நீளமாக நீட்டிக் காட்டினார் கமலநாதன்.

''அதாவது..... அங்கே ஒரு....''

''ஆமாம், சார்! என் கடைக்குப் பக்கத்தில் ஒரு வட்டிக் கடை; அதற்குப் பக்கத்தில் ஒரு மக் கடை; அதற்கு அப்பால் ஒரு பழைய பேப்பர்க் கடை!''

''தெரிகிறது, தெரிகிறது. நானும் இப்போது அந்தப் பக்கம்தான் போய் விட்டு வருகிறேன்.....'' என்று ஏதோ யோசனையில் சொன்ன கவிஞர், நறுக்கென்று தம் உதட்டைக் கடித்துக் கொண்டார்.

''அப்படியா சார்? நான் பார்க்கவில்லையே! ஏதாவது புத்தகம் கித்தகம் வாங்க வந்தீர்களோ?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. சும்மா அப்படிப் போய் வந்தேன்.''

''யாரையாவது பார்க்க....''

''ஆமாம். ஒரு பழைய நண்பரைப் பார்த்து வருவதற்காக!''

''இலக்கிய நண்பராக்கும்!''



''ஏன் சார், நீங்க கந்தசாமிக்குக் கடனாகப் பணம் கொடுத்து உதவினீர்களாமே. அவன் ஊரை விட்டே ஓடி விட்டானாம்!''

''ரொம்ப சந்தோஷம்! அதற்காகவேதான் நான் அவனுக்குப் பணம் கொடுத்தேன்.''

''இல்லை; கொடுக்கல் வாங்கல் நண்பர்! கொஞ்சம் பணம் வாங்குவதற்காகப் போனேன்.''

''பழைய பாக்கி வசூலோ?''

''பழைய தொடர்பில் புதிய பற்று!''


'அவரா, நீங்களா?' என்று கேட்க வாயெடுத்த கமலநாதன், அப்படிக் கேட்பது அநுசிதமானது என்று எண்ணியவராய்ச் சட்டென்று பேச்சை மாற்றினார்: ''எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி சார்! உங்களைப் போன்ற சிறந்த கவிஞருக்குக் கேடயப் பரிசளிப்பு விழா என்ன, மணி முடி சூட்டும் விழாவே நடத்த வேண்டும்! இன்னும் பத்து வருஷங்கள் உயிரோடு இருந்தால் நானே அந்தக் காரியத்தைச் செய்து முடித்து விடுவேன்!''

உணர்ச்சிப் பெருக்குடன் பேசி முடித்த கமலநாதனின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞரின் மனத்தில், 'யார் உயிரோடு இருந்தால்?' என்னும் கேள்வி எழுந்தது.

''நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள், சார்! அந்தக் கேடயப் பரிசளிப்பு விழாவில் நான் கலந்துகொள்ள முடியாமல் போனதை எண்ணி எண்ணித் துக்கப்படாத நேரம் இல்லை. தாங்கள் பெற்ற கேடயத்தை என் கண்ணால் பார்க்கக் கூட நான் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன்'' என்று மனம் நொந்த குரலில் சொன்னார் மாஜி பதிப்பாளர்.

கவிஞரின் உடலில் ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டது. ''நீங்கள் என்ன இந்தச் சின்ன விஷயத்துக்குப் போய் இவ்வளவு தூரம் வருத்தப்பட்டுக் கொள்கிறீர்கள்? விட்டுத் தள்ளுங்கள்!'' என்று கூறிச் சொன்னவாறு அங்கிருந்து நழுவப் பார்த்தார்.

''என்ன சார், இதற்குள் புறப்பட்டு விட்டீர்கள்! கொஞ்சம் என்னோடு வாருங்கள், அந்த ஹோட்டல் வரை போய் விட்டு வரு



சலூன் முதலாளி சலூன் தொழிலாளிக்குக் கிராப் செய்ய முற்பட்டால்....?

வோம். என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காக உங்களுக்கு ஒரு 'கப்' காப்பியாவது வாங்கிக் கொடுத்தால்தான் என் மனம் திருப்திப்படும்!'' என்று சொல்லிக் கொண்டே கவிஞரின் கையைப் பிடித்து வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு நடந்தார்.

பொறியில் சிக்கிய எலி போல் அவருடைய பிடியிலிருந்து திமிற முடியாமல் பின் சென்றார் கவிஞர் தியாகபூபன்.

தாழம்பூ வாசனையை மூடி வைக்க முடியுமா? தமிழ்க் கவிஞர் தியாகபூபன் அந்த ஹோட்டலுக்குள் நுழைந்ததுமே அவரை இன்னாரென்று இனங் கண்டு கொண்ட ரசிகர்களில் சிலர் பக்தி விநயத்துடன் எழுந்து அஞ்சலி செய்தனர். மற்றும் சிலர் காப்பி அருந்துவதை மறந்து கவிஞரின் ரஸனைப் பேச்சில் திளைக்கலாயினர். இன்னும் சிலர் அவரது மேதாவிலாச குண நலன்களை அவருடைய செவியில் படும்படியாகச் சிறப்பித்துப் பேசத் தொடங்கினர். கவிஞரைப் பற்றி ஏதும் தெரியாமல் இட்டிலி-சட்டினியே கதி என்று இருந்த சில அப்பாவிகள் கூட மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, கமலநாதன்தான் அந்தக் கவிஞராக்கும் என்று எண்ணிக் கொண்டு அவருக்கு வணக்கம் செலுத்தினர். கமலநாதனும் அந்த மரியாதையைத் தட்டிக் கழிக்காமல் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டார்! பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெற்றுக் கொள்வதில் தவறு இல்லை அல்லவா?

இந்தச் சூழ்நிலையைக் கண்டதும் கவிஞரின் நடை, பாவனைகள் எல்லாமே மாறிப் போய் விட்டன. மிடுக்கும் செருக்குமாக முகத்தை வைத்துக் கொண்டு கம்பீரமாக நடந்து போய் ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். அவருடன் கனஜோராக வந்த கமலநாதனும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு உரத்த குரலில் சர்வரைக் கூப்பிட்டு விரிவான பட்டியலில் பட்சண வகையறுக்களுக்கு ஆர்டர் கொடுத்தார்.

''எதற்கு நண்பரே! அதெல்லாம்? வெறும் காப்பி மட்டும் போதுமே!'' என்று தயங்கினார் கவிஞர்.

''என்னுடைய சந்தோஷ உபசரிப்புக்களைத் தயவுசெய்து தடை செய்யாதீர்கள், கவிஞரே!'' என்று மிகப் பணிவுடன் வேண்டிக் கொண்டார் கமலநாதன்.

கவிஞர் தம் கனத்த ஜேபியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு மௌனமானார்.

கவிஞரின் வரவால் தம் ஹோட்டல் கலகலப்பாகி விட்டதை உணர்ந்த முதலாளி, ஏதோ ஒரு வியாபார நுணுக்கத்தை மனத்தில் வைத்துக் கொண்டு கல்லாப் பெட்டியை விட்டு இறங்கிக் கவிஞரிடம் வந்தார்.

''நமஸ்காரம் கவிஞர் ஐயா! அடியேன் தான் இந்த ஹோட்டலின் முதலாளி. தங்களைப் போன்ற கவி சிரேஷ்டர்களின் பாத தூளி அடியேனின் காப்பிக் கடையில் படுவதற்கு முன் ஜன்மத்தில் நான் புண்ணியம் செய்திருக்க வேணும். அடியேனைப் பற்றித் தாங்கள் அறிந்திருக்க முடியாது. ஆனால் அடியேன் தங்களைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். தங்கள் கவிதைகளை நிறையப் படித்திருக்கிறேன். அதிலே பாருங்கோ, நேற்று ஒரு கவிதையைப் படித்தேன். அது என் மனசை அப்படியே உருக்கி எடுத்து விட்டது. போங்கள்!'' என்று உற்சாக நெளிவுக் குழைவுடன் சொல்லிக் கொண்டு அந்த ஹோட்டல் முதலாளி சட்டென்று நிமிர்ந்து காப்பி ஆற்றுவது போல் கைகளை வைத்துக் கொண்டு ஓர் அழகிய கவிதையை ராக ஆலாபனத்தோடு பாடவே ஆரம்பித்து விட்டார்.

அவர் பாடி முடிக்கும்வரை அமைதியாக உட்கார்ந்திருந்த கவிஞர் மெல்லச் சிரித்தபடி, ''நீங்கள் மிகவும் அழகாகப் பாடுகிறீர்கள்!... ஆனால் இது நான் இயற்றிய பாடல் அல்ல; ஆழ்வார் பாசுரங்களிலுள்ள ஓர் அருமையான பாடல் இது!'' என்றார் இதமான குரலில்.

ஹோட்டல் முதலாளியின் முகத்தில் அசடு வழிந்தது. ''ஓ!...ஐ ஆம் சாரி....! நான் சொல்ல வந்தது என்னவென்றால், இம்மாதிரியான பழைய பாசுரங்களைப் போல இந்தக் காலத்தில் இயற்றக் கூடிய கவிஞர் நீங்கள் ஒருவர்தான்!'' என்று கூறித் தம்மைச் சமாளித்துக் கொண்டு உடனே பேச்சின் திசையை மாற்றினார்: ''பாருங்கள்; முந்தா நாள் உங்களைப் பாராட்டிக் கேடயம் பரிசளித்த விழாவைப் பற்றிப் பத்திரிகையிலே படித்தேன்; ரேடியோவிலேகூட அதைச் சொன்னார்கள். எனக்கெல்லாம் ஒரே பெருமையாக இருந்தது. ஒரு தமிழ்க் கவிஞரைப் பாராட்டுவது நம்மையே நாம் பாராட்டிக் கொள்வது போல் இல்லையா?''

''ஆயிரத்தில் ஒரு வார்த்தை!'' என்று பலமாகத் தலையசைத்தார் கமலநாதன்.

ஒரு கணம் ஏதோ யோசனை செய்த ஹோட்டல் முதலாளி மெல்லக் குனிந்து, ''அடியேனுக்கு ஒரு சின்னச் சந்தேகம்: கேடயம் என்றால் என்ன சார்!'' என்று மிகவும் கரிசனமாக வினவினார்.

''ஷீல்ட் என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோமே, அதைத்தான் கேடயம் என்கிறார்கள்!'' என்று விளக்கம் தந்தார் மாஜிப் பதிப்பாளர்.

''நான் என்னமோ பழைய காலத்து ராஜாக்கள் சண்டைக்குப் போகும்போது எதிரியின் தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ள எடுத்துப் போவார்களாமே, அது

மாதிரி கேடயமாக்கும் என்று எண்ணிக் கொண்டேன், சார்!''

''கிட்டத்தட்ட இதுவும் அது போலத் தான். ஆனால் ஒரு வித்தியாசம்: வெற்றி பெறுவதற்காகப் பயன்படுவது அந்தக் கேடயம்; வெற்றி பெற்றபின் தரப்படுவது இந்தக் கேடயம்.''

''இதை வைத்துக் கொண்டு என்ன சார் பண்ணுவது?''

''இதோ, உங்கள் ஹோட்டலைப் பற்றிப் பழைய மேயர் எழுதித் தந்திருக்கும் நற்சான்றுப் பத்திரத்தைப் 'பிரேம்' போட்டு மாட்டி வைத்திருக்கிறீர்களே, இதனால் உங்களுக்கு என்ன பயன்?''

''ஓ..... விஷயம் அப்படிப் போகிறதா?'' என்று சிரித்துக் கொண்ட ஹோட்டல் முதலாளி, ''என்ன இருந்தாலும் இம்மாதிரி கேடயம், சட்டி என்று கொடுக்கிறதைவிட அதற்காகும் செலவுத் தொகையை அப்படியே பணமாக ஒரு பையில் போட்டுக் கொடுத்து விடலாம். அப்படிக் கொடுத்தாலாவது கவிஞரின் வீட்டுச் செலவுக்கு ஒரு பத்து நாட்களுக்கேனும் உதவுபடியாகும்'' என்று மென்று விழுங்கிய ஹோட்டல் முதலாளி தணிந்த குரலில், ''ஆமாம் சார்! கவிஞரய்யாவுக்குக் கொடுத்த அந்தக் கேடயம், பொன்னு அல்லது.....'' என்று இழுத்தார்.

''பொன்னல்ல; வெள்ளி! இருதய வடிவிலே செதுக்கப் பெற்ற நூக்க மரத்தில் பதிக்கப்பட்டிருக்கும்!'' என்றார் கமலநாதன்.

''அப்படியானால் அந்தக் கேடயத்திலே எத்தனை ரூபாய் வெள்ளி இருக்கும்?''

''சுமாராக ஒரு....'' என்று நெற்றியை வருடிக் கொண்டு இழுத்தார் கமலநாதன்.

இவ்வளவு நேரம் தம்மைப் பற்றி அவர்கள் பேசுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் தியாகப்பன் சட்டென்று குறுக்கிட்டு, ''வெள்ளி எடைதானே? சரியாக நூற்றி எழுபத்தைந்து கிராம்! அதாவது, ஐம்பத்தைந்து ரூபாய் மதிப்புள்ள வெள்ளி!'' என்றார் உறுதியான குரலில்.

''இப்போது பத்து கிராம் எடை வெள்ளி விலை, இரண்டு ரூபாய் பத்தணா; கணக்கு சரிதான்!'' என்று சொல்லிக் கொண்டே, ஒரு பில்லுக்குப் பணம் வாங்க, கல்லாப் பெட்டியை அடைந்தார் ஹோட்டல் முதலாளி.

ஏதோ பெருவியப்பில் ஆழ்ந்தவர் போல் கவிஞரையே பார்த்துக் கொண்டிருந்த கமலநாதன் மெல்லக் கழுத்தை நீட்டி, ''ஏன் சார், அந்தக் கேடயத்தின் வெள்ளி எடையை நீங்கள் எப்படி இத்தனை கரெக்டாகச் சொல்லி விட்டீர்கள்?'' என்று கேட்டார்.

தியாகப்பனின் முகம் சட்டென்று வெளிறிச் சிறுத்தது. ஒரு கணம் தயங்கித் தவித்த அவர், ''ஓ! இது என்ன பிரமாதம்! கவிஞனின் கண், தராசு போன்றதல்லவா?'' என்றார் கலகலவெனச் சிரித்துக் கொண்டே.

''உண்மைதான்'' என்று முனகிய கமலநாதன், சிற்றுண்டி உண்பதில் தம் கவனத்தைச் செலுத்தினார்.

காப்பியை எடுத்து ஆற்றிப் பருகுவதற்காக வாயருகே கொண்டு போன கவிஞர் ஏதோ ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டு விட்டவர் போல் வெலவெலத்து நிமிர்ந்தார். அவரது இத் தடுமாற்றத்தைக் கண்ட கமலநாதனும் பின்னால் திரும்பிப் பார்த்தார்.

அங்கே, அந்த இரண்டு வாலிபர்களும், பெண்ணும் சிரித்த முகத்துடன் ஹோட்ட

ளுக்குள் நுழைந்து, கவிஞரை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

''வணக்கம், கவிஞரே, வணக்கம்.''

வேர்த்து விறுவிறுத்து உட்கார்ந்திருந்த கவிஞர் வலிய வரவழைத்த புன்னகையை முகத்தில் பூசிக்கொண்டவராய், ''வாருங்கள் வாருங்கள்! இப்படி அமருங்கள்!'' என்று கதர்ச் சட்டையும் தோல் பையுமாக விளங்கிய வாலிபரை மட்டும் பார்த்து அன்புடன் வரவேற்றார். அவர் குரலில் ஒரு நடுக்கம் மிதவையிட்டது.

கதர்ச் சட்டைக்காரர் மிகவும் பதவிசாகக் கவிஞரின் எதிரில் வந்து அமர்ந்தார். அவருடன் வந்த ஆடவனும் பெண்ணும் தயங்கிய படியே நின்றனர். அந்தப் பெண்ணின் கையில் பெரிய வாழையிலைப் பொட்டணம் ஒன்று இருந்தது.


அளவுக்கு மீறிய பரபரப்படைந்திருந்த கவிஞர் தம் உடம்பை அப்படியும் இப்படியுமாக நெளித்துக் கொண்டு, மாஜி பதிப்பாளர் கமலநாதனைப் பார்த்து, ''நண்பரே! இவர் யார் தெரியுமா? இவர்தான் திருவாளர் சிவத் தம்பி! தமிழ்க் கலை மன்றத்தின் செயலாளர்! இவருடைய பெரு முயற்சியால்தான் அந்த மன்றத்தினர் எனக்குக் கேடயம் பரிசளிப்பு விழா நடத்திக் கௌரவித்தார்கள்!'' என்றார் அறிமுகப்படுத்தும் தோரணையில். பிறகு அதே மூச்சில் கதர்ச் சட்டை வாலிபர் பக்கம் திரும்பி, ''அன்பரே! இவர் எனது முன்னாள் நண்பர். என் முதற் கவிதை நூலை வெளியிட்டுத் தமிழ் மக்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்த பெருந்தகையாளர். தற்போது எரிபொருள் விற்பனை நிலையமொன்றை வைத்து நடாத்திப் பொதுமக்களுக்குச் சேவை செய்து வருகிறார். இவருடைய பெயர் கமலநாதன் என்பதாம்!'' என்று ஓசை நயத்தோடு கூறி நிறுத்தினார்.

சிவத் தம்பியும் கமலநாதனும் ஆங்கில முறையில் கைகுலுக்கித் தமிழ் முறையில் வணக்கம் கூறிக் கொண்டனர்.

சட்டென்று எழுந்து நின்ற சிவத் தம்பி, தம் பின்னால் இருந்தவர்களை முன்னால் பிடித்து இழுத்து நிறுத்திக் கொண்டு, கவிஞரைப் பார்த்து, ''இவர் நம் மன்றத்தின் துணைச் செயலாளர். அந்த அம்மையார் இவரது மனையாட்டி. இவர்கள் தங்கள் கவிதைகளில் அபார மோகம் கொண்டவர்கள். தங்களுக்கு நடத்திய கேடயப் பரிசளிப்பு விழாவின் போது இவர்கள் வெளியூர் சென்றிருந்தமையால் அன்றைய தினம் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள இயலாமல் போய் விட்டது. ஆயினும், தங்களை எவ்வாறேனும் தரிசிக்க வேண்டும் என்ற அவாவுடன் என்னை நாடி வந்தார்கள். தங்கள் இல்லத்துக்கே அழைத்துவர எண்ணிப் புறப்பட்டேன். எங்களின் நற்பேறாக...''

''மகிழ்ச்சி! மெத்த மகிழ்ச்சி!'' என்று நாக்குழறக் கரம் கூப்பினார் கவிஞர்.

உடனே அந்த வாலிபன் தன் மனைவியின் கையிலிருந்த இலைப் பொட்டணத்தைப் பிரித்து அதில் சுருட்டி வைத்திருந்த பெரிய ரோஜாப் பூ மாலையொன்றை எடுத்துக் கவிஞரின் கழுத்தில் சூட்டினான். ஹோட்டலில் அமர்ந்திருந்த அவ்வளவு பேரும் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.



கான்ஸ்டேபிள்: நல்லாக் கார் ஓட்டுகிறீர் ஐயா நீர்! இதுவரையில் நான்கு பேர்களை இடித்துத் தள்ளி இருக்கிறீர்கள்.

இடித்தவர்: நான்கு பேர் இல்லை. இரண்டே பேர்தான்.

கான்ஸ்: எப்படி?

இடித்தவர்: ஒருவரையேதான் மூன்று தடவைகளும் இடித்திருக்கிறேன். அன்றைக்கு அவர் வராததால் இன்னொருவரை இடித்தேன்!

எதற்காயிருந்தாலும் கை தட்டி விடுவதில் நம்மவர்களை யாரும் மிஞ்ச முடியாதல்லவா? கவிஞரின் கண்கள் கலங்கின. அவர் தமது கனத்த ஜேபியைப் பீதியுடன் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

சற்றே தயங்கி நின்ற சிவத்தம்பி புன்னகை பூத்தவராய், ''இன்னொரு விஷயத்தைக் கவிஞரிடம் தெரிவிக்க விரும்புகிறேன். இவர்கள் தங்களுடன் நின்று ஒரு புகைப்படம் பிடித்துக் கொள்ளப் பெரிதும் விரும்புகிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே கமலநாதன் குறுக்கிட்டு, ''ஆமாம், இது நல்ல யோசனை! நாம் எல்லாருமே இதே இடத்தில் கவிஞருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்வோமே? அதற்காகும் செலவை நான் ஏற்கத் தயார்!'' என்று எழுந்தார்.

சிவத்தம்பி அவரைக் கையமர்த்தி விட்டு, ''இல்லை, இல்லை; கவிஞர் தாம் பெற்ற கேடயத்துடன் நிற்க, அந்நிலையில் அவருடன் நின்று புகைப்படம் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பது இவர்கள் விருப்பம்! அந்தப் படத்தை ஏதாவது ஒரு பத்திரிகையில் வரப் பண்ண வேண்டுமென்பது இன்னொரு விருப்பம்! அதனால்தான்....'' என்று விளக்கினார்.

''ஓ, அப்படியானால் சரி!'' என்று கூறி விட்டுக் கொடுத்து விட்டார் கமலநாதன்.

''கவிஞருக்குச் சௌகரியமான ஒரு நேரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால்....'' என்று ஆவலுடன் இழுத்தார் சிவத்தம்பி.

கவிஞர் ஏதோ கூற வாயெடுத்தபோது கமலநாதன் குறுக்கிட்டு, ''இதற்கெல்லாம் கவிஞர் ஆட்சேபணை சொல்ல மாட்டார். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் போய் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்'' என்றார் ரொம்பவும் உரிமையோடு.

''அப்படியானால் சரி; நாளைக்கே வரு கிறோம்'' என்று மகிழ்ச்சியுடன் கூறிய அம் மூவரும் விடைபெற்றுச் சென்றனர்.

நான்கு ரூபாய் ஐம்பத்தாறு பைசாவுக்குப் 'பில்' போட்டுக் கொண்டு வந்து சர மேசை யின் மேல் ஒட்டி வைத்து விட்டுச் சென்றான் சர்வர். தயக்கத்துடன் அந்தப் பில்லை எடுத் துக் கொண்டு எழுந்தார் கவிஞர். கவுண்ட ரில் போய்த் தம் கனத்த ஜேபியிலிருந்து ஐந்து ஒற்றை ரூபாய் நாணயங்களை எடுத்துப் பில்லுடன் சேர்த்து வைத்தார். பணிவும் குழைவுமாகப் பணத்தை எடுத்துப் போட்டுக் கொண்ட ஹோட்டல் முதலாளி, மீதச் சில்லறை நாற்பத்து நான்கு பைசாக்களை எண்ணிக் கொடுத்துக் கை கூப்பினார்.

''அடடே! நீங்களா பில்லுக்குப் பணம் கொடுத்து விட்டீர்கள்? என்ன சார் இது. அநியாயம்!'' என்று கையைத் துடைத்துக் கொண்டே ஓடி வந்தார் கமலநாதன்.

''பரவாயில்லை, நண்பரே! உங்களுடைய சந்தோஷத்தில் நானும் பங்கு பெற்றேன்; வருத்தப் படாதீர்கள்!'' என்று உயிரற்ற சிரிப்புடன் சொன்னார் கவிஞர்.

கமலநாதன் அவரிடம் பிரியாவிடை பெற்றுச் சென்றார்.

தியாகரூபன் தம் இல்லத்தை அடைந்த போது இரவு மணி ஏழரையாகி விட்டது. வாசற்படியிலேயே நின்று உள்ளே எட்டிப் பார்த்தார்.

கவிஞரின் இல்லத்தரசி கூடத்தறையில் உட்கார்ந்து கைக் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய முன்றானை யைப் பிடித்து அழுது கொண்டிருந்தாள் மூன்று வயதான சிறுமி யொருத்தி. இன் னொரு பக்கம் ஆறு வயதுச் சிறுவனொருவன், ஆணி டப்பாவையும் சுத்தியலையும் வைத்துக் கொண்டு, உடைந்த சிலேட்டுப் பலகையின் சட்டத்தைச் சரிப்படுத்துவதில் மூழ்கியிருந் தான். எண்ணெயற்ற விளக்கு, 'அணையப் போகிறேன், அணையப் போகிறேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது.

''தரித்திரப் பிண்டமே! எதுக்கு இப்படி வாய் ஓயாமல் அழுது தொலைக்கிறே? வயித் தைப் பசிக்குதுன்னு என் பிராணனை வாங்கினு நான் என்ன பண்ணுவேன்?..பாவி மனுஷன் நாலு மணிக்குப் புறப்பட்டுப் போனாரு. இன்னும் வீடு வந்து சேரல்லே! அவருக்கென்ன கவலே? எங்களுக்கும் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கிட்டு நிப்பாரு! எல்லாம் என் தலை விதி!'' என்று பொருமினாள் தாயார்.

சந்தன மழையில் நனைந்தார் உடற் சில்லிட உள்ளே வந்தார் கவிஞர். கணவரைக் கண்ட தும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த அம்மையார், சற்று முன் இருந்த கோப நிலையிலிருந்து மாறி, முகம் மலரச் சிரித்துக் கொண்டே, ''ஏங்க. இவ்வளவு நேரம்? கொஞ்சம் சீக்கிரமா வரப் படாது?'' என்று அன்பொழுகக் கேட்டாள்.

''வரத்தான் செய்தேன், வழி மாண்டால் தானே?'' என்று பிரா சத்தோடு முணுமுணுத் தவாறு தம் ஜிப்பாவைக் கழற்றி மனைவியிடம் கொடுத்தார் கவிஞர்.

''வைச்கட்டமங்களா? எவ்வளவு கிடைச் சது?'' என்றாள் ஆவலுடன்.

''இருக்கிற பணத்தை எண்ணிப் பார்! அல் லது ரசீதையாவது எடுத்துப் படித்துப் பார்!''

''நீங்கதான் சொல்லுங்களேன்?''

''வட்டி போக இருபது ரூபாய் கிடைத்தது! அதில் தண்டச் செலவு ஐந்து ரூபாய்!''

''இவ்வளவுதான் மதிப்பு இருந்துச்சா?''

''ஆமாம்; நூற்றி எழுபத்தைந்து கிராம் எடை இருந்தது. வெள்ளி விலையில் பாதிக்குக் கணக்குப் போட்டுக் கொடுத்தான்.''

''பார்க்கிறதுக்கு ஒரு முறம் அளவு பெரி சாய் இருந்திச்சே?''

''மரப் பலகையையும் சேர்த்துப் பார்த் தால் அப்படித்தான் தெரியும்.''

''இதுக்குத்தானா இத்தனை அமர்க்களம் பண்ணினீங்க!'' என்று சலிப்புடன் முனகிக் கொண்டே ஜிப்பா ஜேபியில் கைவிட்டுச் சில்லறைப் பணத்தை வாரினாள் அம்மையார். அந்தச் சில்லறைக் காசுகளுடன் ஒரு வட்டிக் கடை ரசீதும் முடங்கி நசுங்கி வெளிப்பட்டது.

தலைகுனிந்தவாறு குழாயடிக்குப் போன கவிஞர் தியாகரூபன் முகம் கை கால்களைக் கழுவிக் கொண்டு கூடத்தறைக்கு வந்தார்.

அங்கே –

அன்று மாலை வரை, தந்தையாரின் வெள் ளிக் கேடயம் மாட்டப் பெற்றிருந்த சுவர்ப் பகுதியில், தாயார் எறிந்து விட்டுப் போன வட்டிக் கடை ரசீதை எடுத்து விரித்து வைத்து அதன் நான்கு மூலைகளிலும் ஆணி அடித்து அழகு பார்ப்பதில் மூழ்கியிருந் தான் அந்த ஆறு வயதுச் சிறுவன்!


உங்கள்
இல்லத்தின் ஒவ்வொரு
அறையையும் சிறப்பிக்க...
மபத்லால் க்ரூப் அலங்கரிப்
புத் துணிகள்...வெகு அழ
கானவை, அதிக மிருது
வானவை, நீண்ட நாள்
உழைப்பவை...
திரைகள், பர்னிச்சர் மேலுறைகள், படுக்கையுறைகள், மெத்தைகள் இவற்றிற்கு...உங்கள் இல்லத்தின் ஒவ்வொரு அறையையும் சிறப்பிக்க, அற்புதமான மபத்லால் க்ரூப் அலங்கரிப்புத் துணிகளை உபயோகியுங்கள். மபத்லால் க்ரூப் அலங்கரிப்புத் துணிகள் பெருவாரியான நிறங்களில், சாதாரண மற்றும் விசேஷ டிசைன்களில், வருகின்றன. மபத்லால் க்ரூப் பெயர் கூறிக் கேளுங்கள்.
மபத்லால்
க்ரூப் அலங்கரிப்புத் துணிகள்

6-10-6

லக்மே அலங்காரத்தை
ஆடம்பரமாக ஆரம்பிக்கிறது



கண்களிலே கனஜோராக மை தீட்டி, நெற்றியிலே லாவண்யமாகத் திலகமிட்டு, அதரங்களின் அழகை லிப்ஸ்டிக்கினால் அதிகரித்து...அதோடு சேர்ந்த லக்மே டால்கம் பவுடரின் அருமையான பரவசப்படுத்தும் நறுமணமும்—உங்களை மெய்மறக்கச் செய்கிறது.

பெண்மணிகளின் மோஹன வடிவம் எனக் கூறப்படும் அதிரூப சௌந்தர்யத்தை லக்மே டால்கம பௌடர் பூர்த்தி செய்கிறது. அதிகாலையில் ஸ்நானத்தின் பிறகு லக்மே டால்கம் பவுடர் உபயோகித்து நாள் முழுவதும் இன்புறச் செய்யும் நறுமணத்துடன் மோஹனமாக விளங்குங்கள்.

லக்மே

அலங்காரத்தை ஆடம்பரமாக
ஆரம்பிக்கிறது

லக்மே ஓர் டாடா ஸ்தாபனம்

LKY-127 TAM

புதுவெள்ளம்

பூர்வகதை



மூன்றாம் பாகம்

"வெள்ளையனே வெளியேறு" என்ற மகாத்மாவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு ரகசியமாய்ச் சந்தித்துத் திட்டங்கள் வகுத்த மாணவர் கூட்டத்தில் முருகையனும் ஒருவன். 'செய்து முடிப்போம்; அல்லது செத்து மடிவோம்' என்ற அவர்கள் முழக்கத்தை ஸி. ஐ. டி. ஒருவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். கல்லூரித் தலைவரின் அன்பினாலும் சமயோசிதத்தாலும் முருகையன் அப்போது போலீசில் அகப்படாமல் தப்புகிறான். கிராமத்துக்குத் திரும்புகிறான். அங்கே அத்தானைப் பார்க்க வந்திருந்த சித்திராவுடன் சந்தோஷமாகப் பேசி உறவாடுகிறான். அந்த மகிழ்ச்சி அதிக காலம் நீடிக்கவில்லை. இரவில் நடந்த அரசியல் வன்முறைச் செயல்களில் முருகையனுக்குச் சம்பந்தமில்லாது போனாலும் அவன் மீது சந்தேகம் கொண்டிருந்த போலீசார் விலங்கிட்டு அவனை அழைத்துப் போகின்றனர். மூன்று ஆண்டுகள் சிறையில் சிரமப்பட்டு விட்டுத் திரும்பிய முருகையன் தகப்பனார் சிவப்பிரகாசம் உருக்குலைந்து கிடப்பதையும் அவர் சொத்துக்களெல்லாம் குமரவேலின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகிப் பறி போய் விட்டதையும் கண்டு மனம் புழுங்குகிறான். பின்னர் அப்பாவின் யோசனையின்படி பட்டணத்துக்குப் போய் அங்கே சித்திராவின் வீட்டில் இருந்து கொண்டு வேலை தேடுவது என்று தீர்மானிக்கிறான். தான் இப்போது பரம ஏழை என்று தெரியாத காரணத்தினால்தான் சித்திராவின் வீட்டிலே தனக்குத் தடபுடலாக உபசாரம் நடக்கிறது என்பதை முருகையன் உணருகிறான். அந்தச் சமயத்தில் சித்திரா அங்கில்லை. பெங்களூர் போயிருக்கிறாள். இந்தச் சூழலில் மேலும் தங்குவது தவறு என்று படவே வெளியேறிச் சென்று நண்பன் சுந்தரத்தின் குடியிருப்பை அடைகிறான்.

அந்த வீட்டில் பல குடித்தனங்கள். சுந்தரமும் தன்னை வைத்து ஆதரிக்கும் அளவுக்குச் செல்வம் படைத்தவனல்ல என்பது முருகையனுக்கு விளங்குகிறது. அதே வீட்டில் வேறு இரு அறைகளில் தங்கையுடனும் தாயாருடனும் குடியிருக்கும் சாந்தா முருகையனுக்கு வியாபாரம் செய்ய உதவுகிறாள். கடற்கரையில் சுண்டல், வறுவல், முந்திரிப் பருப்பு விற்பது, அவனுடைய தொழிலாகிறது. அலைகளுக்கு அருகில் சித்திராவையும் பல தடவைகளில் சந்திக்கிறான் முருகையன். அன்பு அவர்களிடையே வளர்கிறது.

சுந்தரத்துக்கு ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் நல்ல வேலை கிடைக்கவே, குடும்பம் இடம் பெயர்கிறது. ஒரு நாள் கடற்கரை வியாபாரத்தின் போது மழை பிடித்துக் கொள்ளவே சொட்டச் சொட்ட நனைந்து திரும்பும் முருகையனுக்கு ஜுரம் வந்து விடுகிறது. சாந்தா அவனைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்கிறாள். அவனோ 'சித்திரா இப்போது இங்கே இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?' என்று எண்ணிக் கொண்டிருக்கிறான்.

சாந்தாவின் உள்ளத்தை அவன் புரிந்து கொள்ளாத இந்நிலையில் அந்த வீட்டில் குடியிருந்தோரில் ஒருத்தி அவனுக்கும் சாந்தாவுக்கும் முடிச்சுப் போட்டுக் கேவலமாகப் பேசுகிறாள். இதைக் கேட்கச் சகியாமல் முருகையன் அங்கிருந்து கிளம்பி விடுகிறான். ரிக்ஷாக்காரன் முனியாண்டியின் குடும்பத்துக்கு உதவியாக அவன் ரிக்ஷா இழுக்கத் துணிந்த சமயத்தில் அவன் தகப்பனார் சிவப்பிரகாசம் மகனைக் காணச் சென்னைக்கு வருகிறார். தலையில் தொப்பியைக் கவிழ்த்துக் கொண்டு தன்னை ரயிலடியில் வருத்தி அழைத்து ரிக்ஷாவில் ஏறச் செய்த மனிதனை அவர் அடையாளம் கண்டு கொள்ள வில்லை. முருகையனும் அவரைக்

அகிலன்

கவனிக்கவில்லை. ரிக்ஷா விரைகையில் எதிரே சித்திரா வேகமாகக் காரோட்டி வருகிறாள். அதன் காரணமாக விபத்து நேருகிறது. கீழே நிலையிழந்து கிடந்த ரிக்ஷாக்காரனைத் தூக்கிய சிவப்பிரகாசம் அவன் முகத்தைச் சரியாகப் பார்க்கிறார். 'முருகையா' என்று அலறியவர் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவேயில்லை.

சித்திரா முருகையனை வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்து வருகிறாள். 'அண்ணா ரொம்பவும் மாறி விட்டார். நீங்கள் பெரிய தியாகியாம். முதலாளியாக்கப் போகிறார் உங்களை' என்றெல்லாம் சொல்கிறாள்.

முதலில்லாமல் முதலாளியான முருகையன் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கணக்கெழுதப் பழகிக் கொள்கிறான். ஆனால் கள்ளச் சந்தையின் நுணுக்கங்களை அறியாதவனாகவே காலத்தை ஓட்டுகிறான். தன் மகன் செல்வரத்தினம் சித்திராவை மணக்க வேண்டும் என்று எண்ணியுள்ள குமரவேல் மீண்டும் சதி செய்கிறார். அதனால் விசாரணை என்று வந்து முருகையன் அதிகாரியின் எதிரே வந்து நிற்க வேண்டியதாகிறது.

அப்போதுதான், தனக்குள்ள தியாகி, தேச பக்தன் என்ற நற்பெயர்களைப் பணம் திரட்டுவதற்குச் சாதகமாகச் சித்திராவின் அண்ணன் பயன்படுத்திக் கொண்டிருப்பது தெரிய வருகிறது முருகையனுக்கு. சத்தியம் செத்து விட்டதோ என்று எண்ணும் அவனுக்கு, காந்தியடிகள் மறைந்து விட்ட செய்தி எட்டுகிறது.

நாட்டில் நடைபெற்றுவரும் சமுதாயத் தீமைகளுக்கு எதிராக அறப்போர் நடத்தக் கூடிய உத்தமரான காந்தியடிகளும் கொல்லப் பட்டாரே என்று துடிதுடிக்கிறான் முருகையன். சித்திரா அவனுக்கு ஆறுதல் கூறுகிறாள். தனது அண்ணன் மாணிக்கத்தின் தொழிலில் நடைபெறும் தவறுகளை அவரிடம் சொல்லி நீக்கி விடுவதாக வாக்களிக்கிறாள். ஆனால் உலக விவகாரம் தெரிந்த சித்திராவின் தமையனோ, விரைவில் முருகையனுக்கும் சித்திராவுக்கும் திருமணம் நடத்தி விட்டால் முருகையனைத் தமக்கு அடிமையாக்கி விடலாம் என்று நம்புகிறார்.

சித்திராவுக்கும் முருகையனுக்கும் திருமணம் நிச்சயமாகி மளமளவென்று திருமண ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. இந்தச் சமயத்தில் ரிக்ஷாக்கார முனியாண்டி ஒரு திடுக்கிடும் செய்தியுடன் முருகையனிடம் வருகிறான். முனியாண்டியின் மனைவி கலப்படம் நிறைந்த மஞ்சள் தூளை மருந்தாகச் சாப்பிட்டதால் ஆஸ்பத்திரியில் இறந்து விடுகிறாள். அந்தக் கலப்படத் தூளை அவளிடம் விற்றவன் என்ற முறையில் ஒரு பாவமும் அறியாத பெட்டிக்கடை நடேசன் அவதிக்குள்ளாகிறான்.

அந்தத் தூளோ சித்திராவின் தமையன் மாணிக்கத்தின் கடையிலிருந்து பெட்டிக் கடைக்காரனால் வாங்கப்பட்டது. மாணிக்கத்துக்கு அதை மொத்தமாக வியாபாரம் செய்தவரோ, முருகையனின் குடும்பத்தைக் கெடுத்து முன்னேறிய குமரவேல்!

சித்திராவின் தமையனிடம் முருகையன் இதுபற்றி முறையிட்டு நிரபராதியான ஏழை பெட்டிக்காரனைக் காப்பாற்றுவதற்கும் குற்றவாளியான குமரவேலைத் தண்டிப்பதற்கும் உதவி செய்ய வேண்டுமென்று மன்றாடுகிறான். மாணிக்கமோ குமரவேல் செல்வந்தர் என்பதாலும், தம்மிடம் தொழில் தொடர்பு கொண்டவர் என்பதாலும் அவரைக் காப்பாற்ற வேண்டுமென்கிறார். ஏழை நிரபராதி குற்றவாளியாக்கப் பட்டு அவன் தண்டனை அடைவது பற்றி அவருக்கு அக்கறையில்லை.

மாணிக்கம் சித்திராவிடம் சொல்லி முருகையனைத் தங்களுடைய வழிக்குக் கொண்டு வரச் சொல்கிறார். சித்திராவும் முருகையனிடம் வந்து அவனுடைய லட்சியங்களையும் கொள்கைகளையும் கைவிட்டுவிடச் சொல்கிறாள். முருகையனோ தான் எதை இழக்க நேர்ந்தாலும் நேர்மைத் துணிவையும், சத்தியத்தையும், மனச்சாட்சியையும் இழக்க முடியாதென்கிறான்.

சித்திராவுக்கும் முருகையனுக்கும் பேச்சு வார்த்தைகள் முற்றுகின்றன. செல்வத்தில் பிறந்து வளர்ந்த சித்திரா அந்தச் செருக்கோடு முருகையனின் ஏழைமையைக் குத்திக் காட்டுகிறாள். அவன் கடற்கரையில் கடலை விற்றதையும், ரிக்ஷா இழுத்ததையும் அவனைத் தான் முதலாளியாக உயர்த்தியதையும் இடித்துச் சொல்கிறாள். முருகையனோ தான் ஏழையாக இருந்தபோது நேர்மையாளனாக இருந்ததாகவும், இப்போது பணம் திரட்டுவதற்காகப் பல பித்தலாட்டங்கள் செய்வதற்கு உடந்தையாக இருக்க முடியாதென்றும் வாதாடுகிறான். கோப வெறி கொண்ட சித்திரா, அவனைத் தூற்றி விட்டு, கொட்டும் மழையில் கடற்கரையில் அவனைத் தனியே விட்டு விட்டு, தான் மட்டிலும் காரில் ஏறிக் கொண்டு பங்களாவுக்குத் திரும்புகிறாள். காற்றினாலும், கடல் அலையாலும், நெருப்பாலும், மண்ணாலும், விண்ணாலும் சீரழிக்க முடியாத சத்தியத்தின் அணுத் துளிபோல் முருகையன் கடற்கரையில் தனியாக நிற்கிறான். புயல் வீசுகிறது; மின்னல் வெட்டுகிறது; இடி இடிக்கிறது; மழை கொட்டுகிறது. முருகையன் நின்று கொண்டிருக்கிறான்.

இனி மேலே கதையைப் படிக்கலாம்.

முதல் அத்தியாயம்


சிங்கார பூமியில்

அடர்ந்து வளர்ந்த காடுகள், உயர்ந்து நிமிர்ந்த மலைகள், வளைந்தோடும் ஆறுகள், பதுங்கிப் பாயும் வன விலங்குகள் இவையனைத்தும் நிறைந்த சிங்கார பூமி அது. அந்தப் பிரதேசத்தின் இடையில் ஆங்காங்கே சின்னஞ் சிறு நகரங்களையும் சிற்றூர்களையும் உருவாக்கி வைத்திருந்தான்

மனிதன். ரயில்பாதைகளால் அவற்றை ஒன்ருகவும் இணைத்து வைத்திருந்தான்.

நெல் வயல்கள் சூழ்ந்த சம தரைப் பகுதியான காவிரிப் படுகைக்கும் அதற்குந்தான் எவ்வளவு வித்தியாசம்! தமிழ் நாட்டுக்கு வடக்கே ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஆந்திர மக்கள் திட்டுத் திட்டாக வாழ்ந்து வந்த பகுதியில் அமைக்கப் பட்டிருந்தது அந்தச் சிங்கரேணிப் பிரதேசம்.

நெடிது உயர்ந்த தேக்கு மரக் காடுகளை முதன் முதலாக அங்கு கண்டபோது முருகையன் வியப்பில் ஆழ்ந்து விட்டான். திரும்பிய பக்கமெல்லாம்பசுமை நிறைந்த குன்றுகளும் மலைகளும் காட்சியளித்தன. இயற்கையன்னை தன்னுடைய பயங்கரமான அழகோடு அங்கு கொலுவிருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.



வரன் தேடும் பெரியவர் : படிப்பெல்லாம் முடிஞ்சு விட்டாப்பிலே இருக்கு....மேலே என்ன பண்ணலாம்னு இருக்கே?

பையன் : கொஞ்ச நாளைக்கு சந்தோஷமா இருக்கலாம்னு இருக்கேன்!

'கறுப்புப் பொன்' என்ற நிலக்கரியை முதலில் எவன் எங்கு கண்டு பிடித்தானே தெரியவில்லை. அதனுல் உலகத்தில்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன! பெரிய பெரிய இயந்திர சாலைகள், இரும்பு ஆலைகள், போக்குவரவுச் சாதனங்கள் முதலிய எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருந்துவிட்டது அந்த நிலக்கரி.

கன்னியா குமரியிலிருந்து காசியையும், காசியிலிருந்து இமயத்தையும் ஒன்ருக இணைத்த வலிமை ரயில் வண்டிக்கு இருந்த தென்ருல், அந்த ரயில் வண்டியையே இழுக்கும் வலிமைக்குக் காரணமாக அமைந்தது நிலக்கரியல்லவா?

காலம் காலமாக மனிதன் மண்ணைக் கிளறி விதையூன்றிப் பயிர் வளர்க்கும் தொழில் ஒன்றைத்தான் முக்கியமாகக் கருதி வந்தான். அதற்காகப் பூமித்தாயின் மடியில் சுரக்கும் தண்ணீரை எடுக்கக் கிணறுகள் தோண்டி நீர் பாய்ச்சி அவன் பயிர் செய்வதும் உண்டு. ஆனல் தண்ணீரைத் தவிர இன்னும் எத்தனை எத்தனை நூதனப் பொருள்களைப் பூமித்தாய் தனக்குள் வைத்துப் போற்றி வருகிருள்!

மனிதன் ஒரு வகையில் பார்த்தால் பொல்லாதவன். அவளிடம் உள்ள எல்லாப் பொருள்களையுமே கண்டுபிடித்து எடுத்து; அவை முழுவதையுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பேராசை அவனுக்கு உண்டு. புதியன புதியனவாக எவ்வளவு பொருள்களை அவன் தோண்டி எடுக்கிருன்.

பூமித்தாயின் மடியிலிருந்து பொன் எடுத்தான்; வைரம் எடுத்தான். எண்ணெய் எடுத்தான், இன்னும் என்னென்னவோ பொருள்களையெல்லாம் அவன் எடுத்துக் கொண்டேயிருக்கிருன். மேலும் அவன் ஆசைகளும் தேவைகளும் வளர்ந்துகொண்டே போகின்றன.

கால வெள்ளத்தின் போக்கில் மாறிவரும் ஒரு புதிய மனித சமுதாயத்தின் பகுதியை முருகையன் சிங்கரேணியில் கண்டான். உழவு செய்வதையே முக்கியமாக நம்பியிருந்த நாட்டின் மத்தியில் புதியதொரு தொழிற் புரட்சியின் வித்து வளர்ந்து வருவது அவனுக்குத் தெரிந்தது. வயல் வரப்புக்களில் வேலை செய்து வந்த பலர், பூமிக்கு அடியில் உள்ள சுரங்கங்களில் வேலை செய்யும் சுரங்கத் தொழிலாளர்களாக மாறியிருந்தார்கள்.

பூமியின் மேல் மட்டம் சாதாரணமாகத்தான் கட்டடங்களோடும் இயந்திரச் சாலைகளோடும் தோற்றமளித்தது. ஆனல் அதற்கடியிலோ ஆயிரமாயிரம் மனிதர்கள் உயிரைத் திருணமாக மதித்து இரவும் பகலும் ஓயாது ஒழியாது உழைத்துக் கொண்டிருந்தார்கள். சுரங்க வாயில்களுக்கு வெளியில் திட்டுத் திட்டாகக் கன்னங் கரிய மண் மேடுகள் குவிந்திருந்தன. அந்த மேடுகளுக்குச் சற்றுத் தொலைவில் மரக் கூட்டத்துக்கு அப்பால் தொழிலாளர்களுடைய வீடுகள்; நிர்வாகிகள் — அதிகாரிகளது வீடுகள். அந்த வீடுகளில் ஒன்றில்தான் முருகையனின் நண்பன் சுந்தரமும் அவன் குடும்பத்தாரும் வசித்து வந்தார்கள்.

நிலக்கரிச் சுரங்கத்தின் தலைவாயிலில் இருந்த இயந்திரசாலை ஓயாது ஒழியாது புகையைக் கக்கிய வண்ணமாகவே இருந்தது. அதைச் சுற்றி வெகு தூரம் வரையிலும் அந்தக் கரிய புகைதான். மரங்களின் மீதும், மனிதர்கள் மீதும், வீடுகள் மீதும், தெருவெங்கும் ஒரே கரித்தூள் படிந்து கிடந்தது. மனிதர்கள் விடும் மூச்சுக் காற்றிலும் அந்தப் புகை கலக்காமல் விடவில்லை.

மனிதர்களுக்கு ஓய்வு உண்டு. ஆனால் அந்த இயந்திரத்துக்கு ஓய்வு இல்லை. இரவு பகல் எந்த நேரத்திலும் அது இயங்கிக் கொண்டிருந்தது. தொழிலாளர்கள் பகுதிபகுதியாகப் பிரிந்து முறை வைத்துக் கொண்டு அங்கே வேலை செய்து வந்தார்கள்.


சுரங்கத்தின் அதல பாதாளத்துக்குச் சென்று நிலக்கரிப் பாறைகளை உடைத்துத் தள்ளுகிறவர்கள், அவற்றைச் சேகரித்து இரும்பு வண்டிகளில் நிரப்புகிறவர்கள், அந்த வண்டிகளை மேலே கொண்டு வருகிறவர்கள், அவர்களை மேற்பார்வை செய்து வேலை செய்யத் தூண்டுகிறவர்கள் இப்படிப் பலப் பலர் நிறைந்த தேன்கூடாக விளங்கியது அந்தச் சுரங்கம்.

சுந்தரத்தின் சிபாரிசினால் முருகையனுக்கு அங்கே தொழிலாளர்களை மேற்பார்வை செய்யும் வேலை கிடைத்தது. வேலைக்கான பயிற்சிக்காக அவன் முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். பயிற்சி முடிந்தவுடன் மற்ற மேற்பார்வையாளர்களைப் போலவே அவனுக்கும் ஊதியம் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கான உடையில் முருகையன் தோற்ற மளித்தபோது அவனுக்கே அது புதுமையாக இருந்தது. பெரியபாளையத்தில் புதிய முறையில், விவசாயம் செய்ய விரும்பிய அந்த இளைஞன், திடீரென்று ஏற்பட்ட மாறுதல்களால் சிறிது காலம் வியாபாரியாக இருந்து விட்டு, இப்போது தொழிலாளியாக மாறி நின்றான். முருகையன் தன்னையும் தன் உடைகளையும் பார்த்து ஒரு முறை சிரித்துக் கொண்டான்.

'வெளி மனிதன் மாறுகிறான்; மாற்றப்படுகிறான். சமுதாயம் மனிதனை மாற்றுகிறது; மனிதன் சமுதாயத்தை மாற்றுகிறான். உழவு ஒன்றையே நம்பியிருந்த நாடு இப்போது தொழிற் புரட்சியிலும் தலையிட்டிருக்கிறது! நல்ல வேலை தான்; பிடித்தமான வேலைதான்...'

காக்கிச் சட்டை, காக்கிக் கால் சராய், முரட்டுச் செருப்புக்கள், தலையில் ஓர் இரும்புத் தொப்பி, கையில் ஒரு சிறு மரக் கழி இவற்றுடன் ஏறு நடை போட்டுச் சுரங்க வாயிலை அடைந்தான்



முருகையன். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக அங்கு காத்திருந்தனர். மிகப் பெரிய இரும்பு வாளி போன்ற ஓர் இயந்திரம், உள்ளிருந்து வரும் தொழிலாளர்களாகிய மனித வெள்ளத்தைச் சுரங்கத்திலிருந்து நிரப்பி வெளியில் கொட்டிக் கொண்டும், வெளியில் நிற்பவர்களைத் தனக்





ருன் நிரப்பி உள்ளே விழுங்கிக் கொண்டும் இருந்தது.

வழக்கமான புகை மண்டலமும், இயந்திரங்களின் ஓசையும் அங்கு கூடிக் கலந்திருந்தன. முருகையனுக்குப் பயிற்சி யளிப்பதற்காக வந்திருந்த ஒரு வயதான தொழிலாளி, ''தம்பி! உங்களைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி தோணுது; உங்களுக்கு இங்கே வேலை பார்க்கிற தின்னு ரொம்பச் சிரமமா யிருக்கும்'' என்றான். முருகையன் சிரித்தான்.

''சிரிக்காதிங்க தம்பி! உள்ளே நுழைஞ்சு பார்த்தாத்தான் உங்களுக்கு வேலை எப்படிப்பட்ட வேலைங்கிறது தெரியும். உள்ளே நுழைகிற நம்ப

வீட்டுக்குத் திரும்பினால்தான் நிச்சயம். அதுவரையில் வீட்டிலே இருக்கிறவங்க பாடு ஒரே அவஸ்தைதான். ரொம்பப் பயங்கரமான வேலை தம்பி!''

''பசிதான் உலகத்திலேயே பயங்கரமானது. இல்லையா?'' என்று கேட்டான் முருகையன். ''அந்தப் பயங்கரத்திலிருந்து தப்புவதற்குத்தானே இத்தனை ஆயிரம் தொழிலாளர்கள் இங்கு பயத்தையே அடியோடு மறந்து விட்டு உழைக்க வந்திருக்கிறார்கள்?''

அந்த வயதான தொழிலாளி அன்போடு முருகையனின் கரத்தைப் பற்றினான். முருகையனின் பதில் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ''இந்த உறுதி இருந்திட்டா, பிறகு நீங்க எதற்குமே பயப்பட மாட்டீங்க. வாங்க! விளக்கை எடுத்துக்கிட்டுச் சுரங்கத்துக்குள்ளே போகலாம்.''

காற்றுக்கு மூடி போட்டிருந்த கண்ணாடி விளக்குகள் பக்கத்துக் கொட்டகையில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எண்ணெய் விளக்குகள் தான். ஆனால் தீ வெளியில் பரவி விடாதபடி பாதுகாப்புடன் செய்யப்பட்டிருந்தது. முருகையனின் பெயரைச் சொல்லி அவனுக்கு ஒரு விளக்கு வாங்கிக் கொடுத்து, தன் எண்ணுள்ள விளக்கையும் எடுத்துக் கொண்டான் அவன்.

சுரங்கவாயில் வாளி இயந்திரத்தின் கதவு திறந்தது. இருபத்திநாலு மணி நேரமும் ஓய்ச்சல் ஒழிவின்றி இயங்கும் அந்தச் சுரங்கத்தில் இரவு முழுதும் வேலை செய்து களைத்தவர்கள் அந்த வாளி இயந்திரத்தில் நிரம்பி யிருந்தார்கள். தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு சுரங்கத்தினுள்ளிருந்து மேலேறி வருகிறவர்கள் அவர்கள். நிலக்கரிப் படுகையைக் குத்தி உடைக்கும் கூரிய கோடரிகளைத் தோள்களில் தொங்க விட்டுக் கொண்டும் வேறு பல உபகரணங்களைத் தூக்கிக் கொண்டும் வந்த அவர்கள் வெளியில் இறங்கினார்கள். சுரங்கத்தினுள் இறங்கக் காத்திருந்த கூட்டத்துடன் முருகையன் அந்த வாளி இயந்திரத்துக்குள் புகுந்தான். போதிய அளவுக்குமேல் தொழிலாளர்கள் வாளிக்குள் நிரம்பி விட்டார்கள். கதவு மூடப்பட்டது. மணியும் அடிக்கப்பட்டது.

பயங்கரமான ஓசையுடன் கீழே கீழே, அதல பாதாளத்துக்கு, அதற்கும் கீழே சென்று கொண்டிருந்தது வாளி. எங்கும் இருள்; ஒரே இருள்; பயங்கரத்திலும் பயங்கரமான இருள் சூழ்ந்திருந்தது. விளக்குகள் மின்மினிப் பூச்சிகளைப் போல ஒளி உமிழ்ந்து அந்த இருளை இன்னும் பயங்கரமாக்கியது. முருகையனின் தலை சுழன்றது. (தொடரும்)

குழம்பு

அன்னத்துக்கு ஐம்பது வயதாம்: அவள் சொன்னபோது முதலில் நம்பவே கஷ்டமாயிருந்தது. எஜமானர் கிருஷ்ணன் அவளுக்கு முப்பது இருக்கலாம் என்று மதிப்பிட்டார். அவர் மனைவி கமலி ஒப்பவில்லை. என்ன இருந்தாலும் பெண் அல்லவா? 'தலையில் நரை தெரிகிறது. முகம் கூடக் கிட்டத்தில் அவ்வளவு மழுமழுப்பாய் இல்லை. நாற்பது இருக்கலாம்'' என்றாள் அவள். ஆனால் அவள் கூட ஐம்பது என்றதும் திகைத்துத்தான் போனாள்.


அன்னம் இள வயதிலேயே கணவனை இழந்து ஒரே மகனைத் தன் சொந்த உழைப்பினால் ஆளாக்கியவள். அந்தச் சாதனை அவளது உடலின் மினுமினுப்பில் அனு அனு வாய்ப் பொலிந்து கொண்டிருந்தது. இன்று அவள் மகன் இரும்புப் பட்டறையில் வேலை பார்க்கிறான். பெண்டாட்டி, பிள்ளைகள் என்று அவனுக்கும் பந்தம் ஏற்பட்டு விட்டது.

''ஏண்டி அன்னம் இவ்வளவு தூரம் உன் மகனுக்குத் தாயாய்த் தகப்பனாய் இருந்து செய்திருக்கியே, இப்போ அவன் நல்லா இருக்கிற போது உன்னை வச்சிச் சோறு போட்டால் குறைஞ்சா போயிடுவான்? இப்படி ஒரு வீட்டில் நீ வந்து ஏன் வேலை செய்யணும்?'' என்று கமலி கேட்பாள்.

அன்னம் புன்னகை புரிவாள். ''செஞ்சால் என்னம்மா? இப்பவும் என் மகன் என்ன சோறு போட மாட்டேன்னு சொல்றான்? எனக்குத் தான் இஷ்டமில்லே. அவனை ஒரு மனுஷனாக்கிட்டேன், அது என் கடமை இல்லீங்களா? இனி மேல் அவன் வீட்டிலே நான் போய்க் குந்தலாமா? பெத்தவ, நான் அவனுக்குச் செய்ய வேண்டியது முறை. அவங்கிட்டே போய்க் கை நீட்டினா அது கேவலமில்லே? என் உடம்பிலே வலுவிருக்கிறப்போ மருமவ கிட்ட ஏச்சுக் கேட்டுக்கிட்டு அங்கே ஏம்மா போவணும்? கை காலை வச்சி உழைச்சி என் வயித்தை நான் கழுவிக்கிறேன்!'' என்று தன்னம்பிக்கை கடர்விட, பெருமையுடன் தலை நிமிர்ந்து கூறுவாள்.

அன்னத்துக்கே சற்றுப் பெருமை அதிகம். உலகத்தில் எல்லோரும் பெரும் செயல் புரிந்து புகழ் வெல்ல ஏங்கியிருக்கும்போது, தன் சிறு கடமையை முடித்து இன்று சுதந்திரமாக இருக்கிறோம் என்ற உணர்விலேயே மானிடப் பிறப்பின் முழுப் பெருமையைச் சுவைத்து நின்றாள் அந்த வேலைக்காரி.

இதைத் தவிர அவளுக்கு ஆதிக்கப் பெருமையும் உண்டு. முகராசியோ என்னமோ தெரியாது. அவள் ஓர் இடத்தில் இருந்தால் மற்ற யாவரையும் கவர்ந்திழுக்கும் காந்தமாக அந்த இடம் மாறிவிடும். உருவத்தில் என்ன கம்பீரம் அவளுக்கு? நடுத்தர உயரத்துக்குச் சற்று மேலேயே இருப்பாள். தலை கொள்ளாத கேசத்தை அலட்சியமாகத் தூக்கிச் செருகினாலும் அதில் ஆங்காங்கு விரவியிருந்த வெள்ளை இழைகள் கூட ஒரு பிரத்தியேகக் கம்பீரம் பெற்றுவிடும். கைகளும் கால்களும் ஒய்யாரமாக நீண்டிருக்கும். இள வயதுக்குரிய உடற்கட்டு. நடையில் ஓர் அரச நிதானம். பேச்சிலும் சிரிப்பிலும் யாரையும் மயக்கி விடுவாள். வாசலில் அவள் கால்களை நீட்டி, தலைமயிரை அவிழ்த்து ஆற்றிக் கொண்டும், வம்பும் உபதேசமும் வழங்கும் விச்ராந்தியோடு வந்து உட்கார்ந்து விட்டால் போதும். வீட்டின் மற்ற வேலையாட்கள் அவளைச் சுற்றிப் பயபக்தியுடன் கூடியிருந்து அவள் பொன்மொழிகளைச் சிரமேற் கொள்வார்கள். தோட்டக்காரன் அவள் கட்டளைப்படி



அவளது வெற்றிலைப் பெட்டியைக் கொண்டு வந்து தருவான். யாரிடமும் சிடுசிடுப்பாய் உள்ள சமையற்கார அம்மாளே, ''அட சரிதாம்மா, நீ வச்ச ரசம் என்ன இத்தினி மோசமாயிருக்குதே இன்னிக்கு! என்னாலே துன்ன முடியலியே!'' என்று அன்னம் நொடித்தால், எதிர்ப் பேச்சுப் பேச மாட்டாள். தெய்வமே என்று வாய் திறவாமல் இருந்து விடுவாள்.

முன்பு, வீட்டில் மோட்டார் வாங்கிக் கம்பெனி வழியாகவே ஒரு தேர்ந்த டிரைவரை அமர்த்தியிருந்தார் கிருஷ்ணன். அதற்கு அடுத்த நாள் காலை அவர் ''டிரைவர் எங்கே? எனக்குக் கொஞ்சம் வெளி சவாரி இருக்கே!'' என்ற போது அன்னம் ''நம்ம சின்னி தானுங்களே? மக்கடைப் பக்கம் போனான். இதோ வந்திடுவான்'' என்று பதிலளித்தாள்.

கிருஷ்ணன் அயர்ந்து போய் விட்டார். புது ஆளோடு இன்னும் அதிகப் பழக்கம் ஏற்படாமல் 'டிரைவர்' என்ற மரியாதையான பொதுப் பெயரையே அவர் உபயோகித்த போது இத்தனை பரிச்சயமாய்......!

''சின்னியா?'' என்றார்.

''ஆமாங்க, சின்னசாமி. நம்ம டைவருதான். 'சின்னசாமி'ன்னு யாரப்பா கூப்படறது. சின்னின்னு சொல்றதுதான் சௌகரிய

மாயிருக்கு' அப்படின்னு கண்டிஷனு அவன் கிட்டச் சொல்லிட்டேன். பாவம், தாய் தகப்பன் இல்லியாம் அந்தப் பையனுக்கு. ஒரே ஒரு அண்ணனும்....''

''வீட்டைப் பெருக்காமல் இதென்னடி வம்பு?'' என்று அப்போது குறிக்கிட்ட சுமதியின் குரலில் உறுதி இருந்தால் தானே!

''எல்லாம் பெருக்கறேன் அம்மா. பெருக்காமெ என்ன, ஓடியா போயிடறேன்?'' அவள் பேச்சே அப்படித்தான். ஆனால் யாரும் கோபிக்க முடியாது.

அன்று மாலை மற்றப் பக்தர்களிடையே 'சின்னி' மிருந்த ஈடுபாட்டோடு அவள் காலடியில் அடிமையாய் உட்கார்ந்திருந்ததைக் கண்டு வியந்தார்கள் கிருஷ்ணன் தம்பதி.

அன்னத்தின் ராசியே அப்படி. அவள் ஆளப் பிறந்தவள். ராணி மாதிரிதான் இருக்கும் பேச்சும் நடையும்.

தினம் காலை எட்டரை மணிக்கு அவள், ''அம்மா, கொஞ்சம் வேலையெல்லாம் அப்படியே இருக்கட்டும், நான் போய் முனியனைப் பார்த்துட்டு வந்திடறேன்'' என்று கூறிச் சென்ற போது முதலில் சுமதிக்கு ஒரே மர்மமாயிருந்தது. யார் இவன் முனியன்? அன்னம் சிறு பெண்ணாயிருந்தாலாவது வேறு விதமாய்ச் சந்தேகப் படலாம். மேலும் அவள் சுபாவத்திலேயே தப்பு வழிகளுக்குப் போகிறவளல்ல. பின்னே – முனியன்?

இது விடாமல் பத்து நாட்களுக்கு நடந்தது. பிறகு சுமதி ஒரு விவரத்தைக் கவனித்தாள். முனியன் சந்திப்புக்குப் பின் அன்னம் திரும்பி வரும் போது அவள் நெற்றியில் வெண்ணீறு தீட்டியிருக்கும். கடைசியில்தான் சுமதிக்கு விஷயம் புரிந்தது. தெருக்கோடியிலுள்ள முனீச்சுவரன் சிற்றாலயத்துக்குத்தான் அன்னம் தினம் சென்று வணங்கிவிட்டு விபூதிப் பிரசாதம் பெற்றுத் திரும்புகிறாள் என்று. கடவுளான முனீச்வரனே அன்னத்தின் வாயில் 'முனியன்' ஆகிவிட்டால் சாதாரண ஜனங்கள்மேல் அவள் செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிச் சொல்வானேன்?

எஜமானியே இந்த ஆதிக்கத்துக்கு ஓரளவு கட்டுப்பட்டுத்தான் இருந்தாள். இல்லையென்று சொல்ல முடியுமா? ''ஏம்மா, நானும்

ஆர். சூடாமணி





எத்தினி நாளாய் உன்னை ஒரு சேலை குடுன்னு கேக்கறேன்! பாத்திரக்காரனுக்குப் போடறதை இந்த ஏழைக்குக் குடுத்தாலும் உன் பேரைச் சொல்லிக் கட்டிப்பேனில்லே?" என்று புன்னகையோடு அன்னம் புடவை 'யாசித்த' போது சுமதி "நீ வேலை செய்யற அழகுக்குப் புடவை வேறு?" என்று மேலுக்குத்தான் சொன்னாள். விசுவாசத்தில் உதித்த உரிமையும் சலுகையும் அதிகாரமாய் வெளிப்பட்ட போது அந்த ராணியிடம் யார் கோபிக்க முடியும்? சுமதி தன் சேலைகளில் நல்லதாக ஒன்றை அவளுக்குக் கொடுத்தாள்.

அடுத்த நாள் அன்னம் எஜமானியிடம் வந்து, "என்னம்மா, இத்தினி மெல்லிசு சேலையாய்க் கொடுத்தா எப்படி? உடம்பு தெரியுதே! ஒரு உள்ளுப் பாவாடையும் குடு" என்றாள் வெகு சாதாரணமாக.

சுமதி கல்லாய் நின்று விட்டாள். ஆனால் முடிவு அன்னத்தின் வேண்டுகோள் நிறைவேறியது. தன் சக்தியில் அவளுக்கே அவ்வளவு நம்பிக்கை இருந்த போது யார் அவளைத் தடை செய்ய முடியும்?

சுமதியின் குழந்தைகள் சீமாவும் பாலுவும் எதிரிலுள்ள மைதானத்துக்கு விளையாடப் போய் விடுவார்கள். இருட்டியதும் அவர்களைத் திரும்ப அழைத்து வர மற்ற ஆட்களை அவள் அனுப்பினால் குழந்தைகள் வர மாட்டார்கள். கடைசியில் அன்னம்தான் போக வேண்டும். "சீமா, பாலு, நடங்க வூட்டுக்கு!" என்று அவள் கட்டளை விடுவாள். மாட்டேன் என்ற மறுப்பைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் "அட சரிதாம்ப்பா, வாங்க சீக்கிரம். அம்மா எத்தினி நேரமாக் கூப்பிட்டுக்கிட்டிருப்பாங்க? இதுவா நல்ல பிள்ளைங்களுக்கு அடையாளம்? வாங்க, எல்லாம் நாளைக்கு வந்து மீதியை விளையாடிக்கலாம்" உத்தரவு போட்டு விட்டு இரு குழந்தைகளையும் இரு கைகளால் பிடித்துக் கொள்வாள். அவ்வளவுதான்; அதற்குமேல் மறுக்க இயலுமா அந்த வெறும் மனிதப் பிறவிகளுக்கு?

"அது என்னடி முகராசி உனக்கு!" என்று வியப்பவர்களைப் பார்த்துப் பார்த்து அவள் சிரிப்பாள். கை இடுப்பில் பெருமையாய்ப் பொருந்தும். கொண்டைக் கேசமும் சிலை போன்ற உருவமும் கம்பீரக் கண்களில் தைரிய மிடுக்கும் தன்னிடம் அமைந்திருந்த உணர்வில் வெற்றி உறுதியுடன் அவள் பெருமிதமாய் நிற்கும்போது தசைப் பளிங்காக உடல் மின்னிப் பூரிக்கும்.

அப்படிப்பட்ட தைரியமுள்ள ஆதிக்கப் பெருமையை மீறிக் கொண்டு அவளை வேறொரு சக்தி ஆக்கிரமிக்கக் கூடும் என்று யாரும் நினைக்கவில்லை.

கொடுமையிலும் கொடுமை!

உலகில் எந்தத் தாய் இப்படித் தீங்கு இழைப்பாள்? தாய்மை தெய்விகத்தின் உயிர்த்தோற்றம் அன்றோ? அன்பைச் சொரியவல்லவா அம்மா? பின்னே, மரணத்திலும் கொடிய விதியை அளிக்கும் இந்தச் சக்திக்கு "அம்மை' என்று பெயர் வைத்த புதிர்தான் என்ன?

அன்னத்திடம் அம்மையின் கண் பார்வை விழுந்து விட்டது. குழந்தை அம்மாவிடம் விளையாடுவதற்கு மாறாக, அம்மை அவள் உடலெங்கும் விளையாடி விட்டாள் — அணுவளவும் இடைவெளி விடாமல் தன் முழு அன்பை வீசி இறுக அணைத்துக் கொண்டு விட்டாள். அதிலும் சாதாரணமானவளில்லை அவள்! மிகவும் பெரியவளாம். 'பெரிய' அம்மையாம் அவள்.

அன்னம் இரண்டு மாதங்கள் ஆஸ்பத்திரியில் இருந்தாள். மகன் வைத்தியத்துக்குப் பின் வாங்கித் தர்ம ஆஸ்பத்திரிக்கு அவளை அனுப்பி விட்டான். அங்கே ஒரு வாரம் 'டேஞ்சர்-வார்டில்' கிடந்தாள். யார் நினைத்தார்கள் அவள் பிழைப்பாள் என்று?

இரண்டு மாதங்களுக்குப் பின் தன் எதிரே வந்து நின்ற உருவத்தை முதலில் சுமதிக்கு அடையாளமே தெரியவில்லை. குரல் கூடல்லவா கீச்சிட்டுக் கரகரத்து விட்டது! மெலிந்து கூனிய உருவத்தில் உயரம் கூட எடுபடவில்லை. உடலில் வெறும் தோல்தான். அந்தத் தோலில் அசாதாரணமான ஒரு கருமை. அந்தக் கருமையெங்கும் பட்டாணி தெறித்ததுபோல் இன்னும் ஆழ்ந்த கருமைப் பள்ளங்கள். 'டேஞ்சர் வார்டி'ல் இருந்த போது தலை சடையாகிப் பேன் வைத்து விட்டதால் கேசத்தையெல்லாம் நீக்கி விட்டிருந்தார்கள்.

என்ன கோலம் இது! கரிய முகமெங்கும் கண்ணீர் வழிய, அந்தக் கீச்சுத் தகரக் குரலில் பேசவும் சக்தியற்ற கீறல் வெடிப்புக்களில் அவள் தான் அனுபவித்த துன்பத்தையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதாள். சுமதிக்குப் பேசவும் தோன்றவில்லை. இந்தப் புதிய விகார உருவமா அன்னம்?

அன்னம் மறுபடியும் வீட்டில் வேலை செய்ய ஆரம்பித்தாள். ஆனால்...

என்ன ஆகிவிட்டது அந்த ராணிக்கு? நோய் உடலுக்குத்தானே வந்திருந்தது? பின் மனத்திலும், அதன் பிரதிபலிப்பாகக் கண்களிலும், ஏன் இந்த மாற்றம்?

வாசலில் கூடியிருந்த ஆட்களின் நடுவிலுள்ள இடம் இப்போதெல்லாம் ஏன் காலியாயிருக்கிறது?

"பாவம், இப்படி வந்திடிச்சு பாரு, அன்னம்மாவுக்கு" என்று தோட்டக்காரன் பரிதாபப்பட்டான்.

"நடக்கக்கூட உடம்பில் திராணி இல்லே. மகமாயின்னு சும்மாவா?" என்று பயமும் மரியாதையும் கலந்த குரலில் சமையற்கார அம்மா சொன்னாள்.

"பாவம்... என்ன ஆயா! இப்பல்லாம் பேசறதே இல்லே நீ?" என்று அன்னத்தைக் கண்டு விட்டுக் குரல் கொடுத்தான் டிரைவர் சின்னசாமி.

எட்ட நின்று அவர்களைச் சந்தேகத்துடன் பார்த்தாள் அன்னம்.

"பேசாமே இருக்கியே ஆயா?"


"என்னத்தைப் பேசச் சொல்றே? எனக்கு என்ன தெரியும் பேச?" என்று தனக்குள் குறுகக் கூறி நின்றாள் அவள்.


தலை கொள்ளாக் கொண்டையோடும் கம்பீரத் தோற்றத்தோடும் இன்னும் எதை எதையோ கூட இழந்து விட்டாள் அன்னம்.

"உனக்குத் தெரியாதா ஆயா?"

"கிண்டல் செய்யறியாப்பா?"

இப்போது அவள் புன்னகைதான் புரிந்தாள். ஆனால் அதில் ஆதிக்கம் இல்லை, வேதனை இருந்தது. எதையோ தடுத்துத் தன்னைக் காப்


ஸ்பார்ட்டன் ஆட்டோ-லாக்கர்கள்
5 முக்கிய அம்சங்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது
★ வர்ணத்தின் திடம்
★ உபயோகிப்பதில் எளிமை
★ நீண்டகால சோபிதம்
★ நீடித்த பளபளப்பு
★ சீரான தர மேன்மை
இந்தியாவில் முதலில் தயாரித்து
இன்னும் முன்னணியில் இருப்பவர்கள்
அடிஸன்ஸ் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ் லிட்.
செம்பியம் - சென்னை - 11
அங்கத்தினர்: இந்தியன் பெயின்ட் அஸோசியேஷன்


மெரிட்*
தையல் மெஷின்கள்
சுலபமாக
குறைந்த செலவில்
தைப்பதற்கு
ஸிங்கர்*
கடைகளிலும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட
டீலர்களிடம் மட்டுமே கிடைக்கும்
* ஸிங்கர் மானுபாக்சரிங் கம்பெனியின் டிரேட் மார்க்

குடும்பம் முழுவதற்கும் ஏற்றது...


கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்கம் பவுடரில்
அபூர்வமான மலர்களின் மனோரம்மிய
பரிமளம் கலந்திருக்கிறது



சிக்கனமானதுடன்
பெயர் பெற்ற
கால்கேட்டின் உயர்ந்த
தரத்துடன் கூடியது



ஸ்நானத்திற்கு பின்.
உடைகளை அணிவதற்கு
முன்பும், வெளியில்
செல்லும்பொழுதும்
புத்துணர்ச்சியளிக்கும்
இச்சிறந்த பவுடரை
உங்கள் உடம்பின்மேல்
தூவிக்கொள்ளுங்கள்...



மென்மையுடன்
நேர்த்தியும்
கொண்டது...
குழந்தையின்
இளம் சருமத்திற்கு
மிகவும் ஏற்றது.



கால்கேட்

ஆல்-பர்ப்பஸ் டால்க்

CAPT. G.I.T.A.M

பண்டிட்
டி.கோபாலாச்சார்லுவின்

அருணா

ஸ்திரீகள் ஆரோக்ய
சௌபாக்யத்திற்கு

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
சென்னை - 17

பாற்றிக் கொள்ளும் கேடயமாய் இருந்தது இப்போது அந்தப் புன்னகை.

''உன்னை ஏன் ஆயா நான் கேலி செய்யப் போறேன்?''

இதற்குள் தோட்டக்காரன், ''இப்போ தெல்லாம் நீ வெத்திலே போடறதில்லையா அன்னம்மா? உன் டப்பாவையே வெளியிலே காணுமே!'' என்றான்.

அன்னம் இடுப்பைச் சுற்றி வரிந்திருந்த சேலைத் தலைப்பை அவிழ்த்து நுனி முடிச்சி லிருந்து தன் வெற்றிலைப் பெட்டியை எடுத் தாள். இப்போது அதை வெளியே வைத்து, இன்னொருவர் தன்னிடம் எடுத்துக் கொடுக் கும்படி அவள் வைத்துக் கொள்வதில்லை.

''இந்தா, ஒனக்கு ஒரு துண்டுப் பொகையிலே வேணுமா?'' தோட்டக்காரனை நோக்கிப் பேசிய அவள் குரலிலும் புகையிலைத் துண்டை நீட்டிய அழகிழந்த கையிலும் குழைவோடு பயம் போட்டி விட்டது.

''அட, ஆயா இப்போதெல்லாம் பெரிய தர்மப் பிரபுவா ஆயிட்டாளில்லே!'' என்று கூவினான் சின்னசாமி. ஆட்கள் எல்லோரும் அவனுடன் சேர்ந்து சிரித்தார்கள்.

சாதாரணமான, நட்பின் உரிமையில் வந்த, குத்தலற்ற பரிகாசம்தான் அது. ஆனால் அன்னம் உடல் கூசி அவர்களைப் பார்த்தாள். அவளை நோக்கி இளக்காரமாய்ச் சிரிக்கிறார் களோ? அவள் கண்களில் ஆழப் புதைந்த ஓர் அழுகை; கெஞ்சும் நெகிழ்ச்சி; தன்னுள் ஒடுங் கிக் கொள்ளும் அச்சம்.

''என்ன என்னப்பா பரிகாசம்? விட்டு விடுங்க.'' எல்லோருக்கும் தாழ்மையுடன் கும்பிடு போட்டாள் அவள். ''இந்தாப்பா டைவர், ஐயா எங்கேயோ போவணுமாம், வண்டி எடுக்கச் சொன்னாங்க.''

சின்னியாய் இருந்தவன் இப்போது சின்ன சாமி கூட இல்லை, 'டைவர்'தான்.

''அன்னம்! மைதானத்துக்குப் போய்க் குழந்தைகளைக் கூட்டிவா'' என்று உத்தர விட்டாள் கமலி.

அன்னம் மைதானத்தைநோக்கி நடந்தாள். இந்தக் கொஞ்ச காலத்தில் உடலில் பலம் வலுப்பட்டிருந்தாலும் நடை ஏனோ தயங்கித் தளர்ந்தது.

எட்ட இருந்து சிறிது நேரம் குழந்தை களின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள். கண்களில் நீர் முட்டியது.

''ஐயா! குழந்தைங்களா! வூட்டுக்கு வரீங்களாம்மா?''

''ஒண்ணும் மாட்டேன். நீ போ.''

முன்பு போல் அன்னம் ''அட சரிதாம்ப்பா வாங்க சீக்கிரம்'' என்று உறுதியாய் உத்தர விட்டு விட்டு அவர்கள் கையை வந்து பிடிக்க வில்லை. அந்த 'மாட்டேன்' என்ற மறுப்பு அவளுடைய உயிரையே கண்டனம் செய்யும் விமரிசனமாகத்தான் தோன்றியது.

''வாங்கம்மா ராஜா! சமத்தில்லே?''

''ஊஹூம். நீ போ வீட்டுக்கு.''

''அம்மா கோச்சிப்பாங்க, கண்ணு!''

''அப்புறம் வரோம்.''

அன்னம் வேதனை முத்து ஒன்றை முறுவ லாய் உதிர்த்தாள். ''நான்தான் இப்போ அசிங்கமாப் போயிட்டேன், என் பேச்சைக் கேக்க வேணும். ஆனா அம்மா — நம்ம நல்ல



''என்ன தாத்தா! எலும்புத் துண்டையெல்லாம் இடிக்கிறே?''

'என்னடாப்பா பண்றது? எனக்கு வயசாச்சோன்னு, பல்லாலே எதை யும் கடிக்க முடியல்லே...!''

அம்மா, அளகான அம்மா — அவங்க கூப் பிட்டா வரவேணுமா, கண்ணு?''

''மாட்டேன் போ.''

அன்னம் தலைகுனிந்தபடியே திரும்பி வந்து விடுவாள்.

''ஏண்டி அன்னம், குழந்தைகள் வரல் லியா....?''

''மாட்டேங்குதும்மா.''

''அது வழக்கம்தானே? இழுத்துண்டு வரத்துக்கென்ன?''

தான் முன்பு கற்றிருந்து இப்போது மறந்து விட்ட ஒரு மொழியின் ஒலியைக் கேட்பது போன்ற ஏக்கமும் குழப்பமும் துடிப்பும் சேர்ந்த பார்வையால் கமலியை ஏறிட்டுப் பார்த்தாள் அன்னம்.

''சரி! சரி உன் வேலையே எப்பவும் இப்படித்தான்.''

அன்னத்துக்குச் சுருக்கென்றது. கமலியைத் தீனமாய்ப் பார்த்தாள். பிறகு திடீரென்று கூடத்தைப் பெருக்கத் தொடங்கினாள்.

''என்னடி இப்போ விசேஷம்?'' என்று கேட்டாள் கமலி.

''ஒண்ணுமில்லேம்மா. நான் நல்லாவே பெருக்கறதில்லேன்னு சொல்லுவீங்களே, அது தான் ஒரு வாட்டிக்கு ரெண்டு வாட்டியாப் பெருக்கலாம்னு பார்த்தேன்.'' திருப்தி செய்ய வேண்டுமென்ற தாபத்துடன் அவள் இழுத்தாள்.

''அதிசயம்தான் போ! மழைதான் கொட் டப் போறது. 'பெருக்க வா'ன்னு சொன்னா 'ஒடியா போயிடறேன்?'னு கேக்கறவளாச்சே நீ! நீயும் உன் சோம்பேறித்தனமும்....!'' சலுகையாய்ச் சிரித்தாள் கமலி.

அன்னத்தின் கண்கள் வேதனையால் சிறுத் தன. அம்மாள் எப்படித் திட்டுகிறாள் அவளை!

ஒன்றும் புரியாத தவிப்பு நெஞ்சின் விளிம் பில் மேலும் கீழும் ஊஞ்சலாடிக் கவிழ்ந்து விடும் போல் அச்சமூட்டியது.

''எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் நல்லாத் தாம்மா செய்யறேன். உங்களுக்கு வஞ்சகம் செய்யலே. ஏதோ கெழவி நான், உங்க காலடியிலே விழுந்து கெடக்கறேன். நல்லதோ கெட்டதோ நீங்கதான் பொறுத்துப் போக ணும்........'' என்றாள் தீனக் குரலில்

ராணியின் பேச்சா இது? நன்னம்பிக்கை எங்கே? சுமதிக்கு வேடிக்கையா யிருந்தது.

வேலைகளை முடித்த பின் எஜமானியிடம், ''தெருக்கோடியிலே கோயிலுக்குப் போய் விட்டு வரட்டுமாம்மா?'' என்று உத்தரவு கேட்பதுதான் இப்போதெல்லாம் அவள் வழக்கம்.

''முனியனைப் பார்க்கவா?'' என்று சிரிப்பாள் சுமதி. அன்னத்தின் புன்னகையில் சங்கடமும் வேதனையும் குழம்பி நிற்கும். ''சாமியைக் கும்பிட'' என்று பதில் வரும்.

ஆலயத்தின் எதிரே நெஞ்சுருக நிற்கும் போதும் அந்தச் செல்லப் பெயரைச் சொல்லி அழைக்க இனி தனக்கு உரிமை இல்லை என்ற எண்ணம்தான் அவளுக்கு.

''கடவுளே! அப்பா ஆண்டவனே!'' கண்கள் மூடும்.

ஏதேதோ பிரிக்கவொண்ணாத துடிப்புகள்; பெயரில்லா எண்ணக் குழப்பங்கள் உதயங்கள், அழிவுகள். அவற்றுள் இழையோடும் ஒரே ஒரு தெளிவுச்சரம்.

''என்னை எல்லோரும் வெறுக்கறாங்களே.''

நெற்றியில் திருநீறுடன் திரும்பும்போது குவிந்த தலை. முள்ளின் மேல் பாதமிடுவது போல் நோவை எதிர்பார்த்துக் கூசும் நடை.

''என்ன அன்னம், நீ என்னைப் புடவை கேட்டு ரொம்ப நாளாகுதே!''

''இந்தக் கந்தலே போதுங்கம்மா எனக்கு!''

''சேச்சே. இந்தா, இதை வச்சிக்க. தடிப் புடவையாகவே தந்திருக்கேன்.''

எஜமானி பரிகசிக்கிறாளோ தன்னை?

மீளா இரவுகள் கடந்தன.

''அம்மா, கோயிலுக்குப் போய் வரட்டுமா?'' என்றாள் அன்னம்.

''சரி சரி. அது இல்லையானும் தான் உனக்குத் தலை வெடிச்சிடுமே.''

''வேலையெல்லாம் முடிச்சிட்டேனம்மா.. ஏனமெல்லாம் கூட நீங்க சொல்றதுக்கு முந்தியே கழுவிட்டேன்.''

''சரி. சீக்கிரம் போய் விட்டு வா. வந்தப்புறம் உன்கிட்டே ஒருவிஷயம் சொல்லணும்.''

ஆலயத்தில் ''ஆண்டவனே! கடவுளே!'' என்று கண்கள் மூடி நிற்கையில் ஓர் அருமையான யோசனை உதித்தது. அம்மாளுக்குக் கொஞ்சம் விபூதியும் குங்குமமும் வாங்கிப் போனால் என்ன? அம்மா அவளிடம் சந்தோஷப்படுவார்களல்லவா? அன்னம் மடி நிறையப் பிரசாதத்தைக் கட்டிக் கொண்டு வந்தாள்.

''அன்னம்....''

''இந்தாங்கம்மா, சாமி பிரசாதம். குங்குமம் வச்சிருக்காங்க..உங்க அழகான முகத்துக்கு இது எத்தினி நல்லா இருக்குது!''

அரைக் கண மௌனம். அன்னம் பல்லைக் காட்டிக் குழைந்து சிரித்தாள்.

''இப்போ ஏதானும் வேலை இருந்தாச் சொல்லுங்கம்மா. செய்யறேன். உடம்பிலே நல்லாப் பலம் வந்திடுச்சு....''

''அதெல்லாம் இருக்கட்டும் அன்னம். ஒரு விஷயம்.''

''என்னம்மா?....நான் பிரசாதம் வாங்கித் தந்தது பிடிக்கலையா?''

''பிடிக்காமே என்னடி? சுவாமி பிரசாதம் விசேஷமாச்சே! முனீச்சுவரன் இந்த வீதிக்கே காப்புத் தெய்வம்.''

''பின்னே என்னுங்க?''

''அன்னம்!'' அவர்கள் அருகில் வந்து கொண்டே கிருஷ்ணன்தான் பேசினார். அன்னம் கூனிக் குறுகி நின்றாள்.

''எனக்கு வேற ஊருக்கு மாற்றலாகி விட்டது. இங்கே இருக்கிற வேலைக்காரங்க ஒவ்வொருத்தரையும் எங்களாலே அழைத்துப் போக முடியாது. நீ இந்த மாசத்தோட நின்னுக்கோ.''

அன்னத்தின் வாய் வறண்டது.

''நீ ரொம்ப நல்லவ, அன்னம். உன் குணம் எங்களுக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு. ஆனால் என்ன செய்யலாம்.?''

''என்னை வேலையை விட்டுப் போகச் சொல்றீங்களா?''

''ஆமாம். டிரைவரையும் நிறுத்திடலாம்னு இருக்கேன். சமையற்கார அம்மா வருவாங்க. தோட்டக்காரன் விஷயம்கூடச் சந்தேகம்தான். அங்கே வேற ஆளுங்க வச்சிக்கறதுதான் எங்களுக்குச் சௌகரியம்.''

இந்த விவரங்கள் அன்னத்தின் காதில் விழவில்லை. அவளுக்குப் புரிந்தது இதுதான். அவளை வேலையை விட்டு நிறுத்துகிறார்கள். ...

''நான் போகணுங்களா ஐயா?''

''ஆமாம். அன்னம் ஏன்னு எங்களுக்கு அங்கே உடனே வேலைக்காரி தேவையில்லே. நாங்க போய் நிதானமா வைச்சிக்கலாம்...''

எதற்கு இந்த அனாவசியப் பேச்செல்லாம்! அவளை வேலையை விட்டு நிறுத்துகிறார்கள்.

ஏன்? ஏன்?

ஏனென்றால் அவள் விகாரமாகி விட்டாள். 'அசிங்கம் பிடிச்ச ஜெமனி' யாகி விட்டாள்.

''என்ன அன்னம், காதிலே ஏறுதா?''

''ஏறுதுங்க.''

சொல்லொணாக் களைப்புடன் பேசினாள் அன்னம். இதயம் உதடுகளில் துடித்தது. கண்களில் கெஞ்சலும் குழப்பமும் ஏந்தி அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''அப்போ நான் போகணுங்களா...?''

''அன்னம்!''

உன்மத்தம் பிடித்தவள் போல் நோக்கினாள் அவள். அந்த ஊமைப் பார்வையின் பரிதாபம் பார்த்தவர்களின் நெஞ்சைப் பிளந்தது. விழிக்கோணங்கள் அழுகையின்றியே துயர்ப்பொறிகளால் நிறைந்தன. அன்னம் மெள்ள நடந்து வெளியே வந்தாள்.

இரவு கருக்கத் தொடங்கி விட்டிருந்தது. அன்னம் குமைந்து ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள்.

இந்த உலகமே அவள் எதிரி. தெய்வம் கூடத்தான். கோவிலிலிருந்து திரும்பியவுடனேயே இப்படி ஆகவில்லையா? அவளை எல்லோரும் வெறுக்கிறார்கள். ஏனென்றால் ஏனென்றால்....

அம்மைத் தழும்புகள் நிறைந்த தன் வாடிய உடலை அவள் ஒரு விரோதியை நோக்குவது போல் ரோஷத்தோடு பார்த்தாள். வெள்ளையும் கறுப்புமாக மயிர்ச்சிலாம்புகள் ஊசி போல் வானத்தைப் பார்த்து நிமிர்ந்திருந்த விகாரமான தன் தலை மேல் கைகளை ஓட விட்டாள். நல்ல வேளை, இரவு வந்துவிட்டது. இருட்டு அவளது தாய். அதன் புகலில் தன் வடிவத்தை மறைத்துக் காலை வரை நிம்மதி பெறலாமென்று உடலைச் சிலிர்த்து அவள் பதுங்கிக் கொண்டாள். தாயின் அரவணைப்பில் கண்ணீர் பீறியெழுந்தது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


LIFEBUOY
SOAP
சுத்தமே சுகமென்பார், குளிப்பதே குஷியென்பார்
லைப்பாய் தேய்த்து நீராடுவோர். புழுக்கம், சோர்வு—
அழுக்கிலுள்ள கிருமிகள்—அனைத்தையும் அறவே விரட்டிப்
புதுமலர்ச்சியூட்டுவதில் லைப்பாய்க்கு எதுவுமே ஈடாகாது.
நம் குடும்ப முழுமைக்கும் நல்வாழ்வு நல்குவது
லைப்பாய் நல்லுறவு..எல்லாம் இன்பமயம்!
லைப்பாய் இருக்குமிடம், அதுவே
ஆரோக்கியம் இருக்குமிடம்!
ந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.
L.30-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon